352

# தாமரை வாசகம்

434

ஏழாம் புத்தகம்

352/2

டாக்டர்
மா. இராசமாணிக்கம்,
M.A., L.T., M.O.L., PH.D.

1938

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
...டி செட்டி தெரு, சென்னை-1

TB
031(7)
N57
88582

# தாமரை வாசகம்

352/2-57

## ஏழாம் புத்தகம்

(ஏழாம் வகுப்பிற்கு உரியது)

டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T., M.O.L., PH.D.
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

[Paper used : 24 lbs. White Printing]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1957
MADRAS

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

பதிப்புரிமை] 1957 [விலை ரூ. 1

முதற் பதிப்பு —1953
இரண்டாம் பதிப்பு —1954
மூன்றும் பதிப்பு—April 1957

தமிழ்நாடு அவணக் காப்பக நூலகம்
88582
சென்னை-600 008.
TB
031(7)
N57

APPROVED FOR CLASS USE—DETAILED STUDY, BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the Fort St. George Gazette dated 19-5-1954, Page 41]

Kabeer Printing Works, Madras (3502)

# முகவுரை

**தாமரை வாசகம்** என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் வரிசை, அரசாங்கத்தார் வெளியிட்ட **புதிய பாட இயல் (Syllabus)** படி எழுதப் பெற்றதாகும்.

உரிமை பெற்ற நம் நாட்டு மாணவர் முன்னேற்றத் துறைகளில் முற்போக்கு அடைய வேண்டும் என்னும் நன்னோக்கம் கொண்டு பிறப்பிக்கப்பட்ட புதிய பாட இயலின் ஒவ்வொரு பகுதியும் இதன்கண் ஒவ்வொரு பாடமாக இடம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது.

ஒவ்வொரு பாடத்திலும் மொழி வளர்ச்சிக்குரிய **புதிய சொற்கள்** இடத்துக் கேற்ப ஆளப்பட்டுள்ளன. அப்புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் வாக்கியங்களிற் பயன் படுத்தப் பயிற்சியும் பிறவகைப் பயிற்சிகளும் ஒவ்வொரு பாட இறுதியிலும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட இறுதியிலும் **அரும்பதவுரை** அளிக்கப்பட்டுள்ளது. செய்யுட்பகுதியில் **ஆசிரியர் குறிப்பும், அரும்பதவுரை யும்** தரப்பட்டுள்ளன.

இந்நூலில் உள்ள தமிழ் நடை ஏழாம் வகுப்பு மாண வர்க்கு ஏற்ப அமைந்திருத்தல் கவனிக்கத் தக்கது. இந் நூலில் உள்ள ஒவ்வொரு பாடமும் ஏழாம் வகுப்பு மாண வரைப் படிக்கச் சொல்லிச் சோதிக்கப் பெற்றதாகும்.

இந்நூல் ஒரு தாமரை மலருக்கு ஒப்பாகும். இதன் கண் உள்ள ஒவ்வொரு பாடமும் மலரின் தனித்தனி இதழாகும். தாமரை மலரின் அழகை அனுபவித்தல் போல மாணவர் உலகம் அறிவுக்களஞ்சியமாகவுள்ள இத்தாமரை வாசகத்தை அநுபவித்துப் பயன்பெறத் தமிழ்த் தாய் அருள் புரிவாளாக!

தியாகராசர் கல்லூரி,
மதுரை.

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை

## உரை நடை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | காந்தி அடிகள் | ... | 1 |
| 2. | வீரத் தமிழன்—செங்குட்டுவன் | ... | 7 |
| 3. | பிஸாரோவும் 'பெரு' நாடும் | ... | 13 |
| 4. | கம்பரது கரந்துறை வாழ்க்கை | ... | 19 |
| 5. | நல்லவர் நட்பு | ... | 25 |
| 6. | பர்மாவும் பர்மியரும் | ... | 30 |
| 7. | உலகத்தின் வடகோடி | ... | 36 |
| 8. | நகைச் சுவை | ... | 42 |
| 9. | கூட்டுறவுப் பண்டசாலைகள் | ... | 48 |
| 10. | கங்கைகொண்ட சோழன் | ... | 54 |
| 11. | நெற்பயிர் | ... | 59 |
| 12. | புலவர் குண நலன்கள் | ... | 66 |
| 13. | நான் கண்ட நல்லிடம் | ... | 73 |
| 14. | வானொலி | ... | 80 |
| 15. | உரையாடல் | ... | 87 |
| 16. | ஜோஸப் தாம்ஸனும் கிழக்கு ஆப்பிரிக்காவும் | | 94 |
| 17. | தோட்டக் கலை | ... | 101 |
| 18. | குமண வள்ளல் | ... | 109 |

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து | ... | 115 |
| II. | இயற்கை அழகு— | | |
| | குற்றாலக் குறவஞ்சி | ... | 116 |
| III. | அறவுரை— | | |
| | 1. சதகத் திரட்டு | ... | 117 |
| | 2. நன்னெறி | ... | 119 |
| | 3. இனியவை நாற்பது | ... | 121 |
| | 4. திருக்குறள் | ... | 122 |
| IV. | தொடர்நிலைச் செய்யுள்— | | |
| | 1. கண்ணன்—என் வேலையாள் | ... | 125 |
| | 2. குரங்கு பழிவாங்கிய கதை | ... | 127 |
| V. | பலசுவைப் பாக்கள்— | | |
| | 1. நூல் நூற்றல் | ... | 131 |
| | 2. பெண்கள் விடுதலைக் கும்மி | ... | 133 |
| | 3. எங்கள் தமிழ் | ... | 136 |

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

## தேசீய கீதம்


இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.
நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ;
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒருசொற் கேளீர் :
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

—பாரதியார்



காந்தியடிகள்

# தாமரை வாசகம்

## ஏழாம் புத்தகம்

### 1. காந்தி அடிகள்

1. காந்தி அடிகள் பெயரைக் கேளாத தமிழர் இருத்தல் இயலாது. அப்பெரியார் இங்கிலாந்தில் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். அவர் வழக் கறிஞராக இருந்து பெரும்பொருள் திரட்டி இன்ப வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆயின் அவர் அங்ஙனம் தந்நலத்துடன் வாழாது, 'இந்தியா உரிமை பெறவேண்டும்; இந்தியர் தம் ஆட்சி பெற்று நல்வாழ்வு வாழவேண்டும்' என்னும் நோக் கம் கொண்டு, அதற்கேற்பப் பல துறைகளிலும் தொண்டு செய்தவர்; இந்தியர் நலனுக்காகவே தம் அலுவலை விட்டவர்; தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்; துப்பாக்கி முதலிய போர்க் கருவி களைக்கொண்டு மக்களை அடக்கியாண்ட ஆங்கி லேயர் ஆட்சியைத் 'துன்புறுத்தாமை' என்னும் அறவாள் ஒன்று கொண்டே பணிய வைத்த பெரியார்; ஏழைகள் மிகுந்த இந்நாட்டில் தாம் ஓர் ஏழைக் கோலமே பூண்டு எளிய வாழ்வு கொண்ட உத்தமர். அவருடைய தூய வாழ்க்கையையும், அறக் கொள்கைகளையும் பாராட்டிய பொது மக்கள் அவரை அடிகள் என்று அழைப்பாராயினர். நம்

பொருட்டுத் தந்நலம் துறந்த அவ்வடிகளது வரலாற்றை அறிந்து மகிழ்தலும் அப்பெரியார் அருளுரைகளைப் பின்பற்றி நடத்தலும் நமது கடமையாகும் அல்லவா ?

2. காந்தியடிகள் கத்தியவாரில் போர்பந்தர் என்னும் ஊரில் 1869-இல் வாணிக மரபிற் பிறந்தவர். அவர் தந்தையார் இராஜகோட்டைச் சிற்றரசரிடம் அமைச்சராக இருந்தார். நற்குணங்கட்கு உறைவிடமாக இருந்த இவர் இராஜகோட்டை மக்களது பாராட்டுக்கு உரியவரானார். அவரது மனைவியார் பெருந்தன்மை மிக்கவர் ; சமயக் கொள்கைகளில் அழுத்தமான பற்றுடையவர். அவ்வம்மையாருடைய கடவுள் பக்தியும் சமயப் பற்றும் நேரிய வாழ்க்கையும் காந்தியாரது நல்வாழ்விற்கு அடிப்படையாக அமைந்தன. நயம்படப் பேசுதல், உண்மையுடைமை, தவற்றை ஒப்புக் கொள்ளும் பெருந்தன்மை முதலிய நற்பண்புகள் தந்தையார் வாயிலாக அவரை அடைந்தன என்னலாம்.

3. அடிகள் தமது பத்தொன்பதாம் வயதில் இங்கிலாந்து சென்றார் ; பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின்னர் இந்தியா மீண்டார் ; இராஜகோட்டையில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கி நடத்தலானார். அவருக்குப் போதிய வருவாய் கிடைக்கத் தொடங்கியது. அப்பொழுது தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயர் குடியேறத் தொடங்கினர் ; இந்தியரும் அங்குச் சென்று காடு கெடுத்து நாடாக்கினர் ; வெள்ளையர் வாழ வசதிகள் செய்து தந்தனர். அங்ஙனம் உதவிசெய்ததை மறந்து நிறவேறுபாடு கொண்ட வெள்ளையர் இந்தியர்க்குப் பல உரிமை

களை அளிக்க மறுத்தனர். அதனால் இந்தியர்க்கும் ஆங்கிலேயர்க்கும் மனக்கசப்பு மிகுந்தது. அவ்வமயம் தென் ஆப்பிரிக்க நீதிமன்றத்தில் ஓர் இந்தியர் சார்பிற் பேச அடிகள் அங்குச் சென்றார்.

4. காந்தியடிகள் மூன்றாண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியரை வன்மையுள்ள சமூகமாக மாற்றினார்; அன்பு ஒன்றேகொண்டு, அரசாங்கத்தைத் தமிழர் விருப்பத்திற்கு இணங்கச் செய்தார்; எளிய வாழ்க்கை வாழவும் தங்கள் வேலைகள் எல்லாவற்றையும் தாங்களே செய்து கொள்ளவும் கற்பித்தார்; பின்னர் இந்தியா மீண்டு, மறுபடியும் தம் குடும்பத்துடன் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்; அங்கு வெள்ளையர்க்கும் டச்சுக்காரருக்கும் நடந்த போரில் வெள்ளையருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அவர்கள் இந்தியரை நேசிக்குமாறு செய்தார். அவர் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்று சில மாதங்கள் இருந்து மீண்டும் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்; அரசாங்கத்தாரைக் கண்டு இந்தியருக்கு உரிமைகள் வழங்கப் பாடுபட்டார்; அங்கிருந்த இந்தியருக்குத் தலைவராகிச் சிறை சென்றார். ‘பகைவரை நேசி; துன்புறுத்தாதே; நீ வேண்டுவது கிடைக்கும்வரை அமைதியாகப் போராடு’ என்பது அவரது அறிவுரை. தென் ஆப்பிரிக்க இந்தியர் அவரது அறிவுரைப்படியே நடந்து வெற்றி பெற்றனர். அடிகள் அவர்களிடம் பிரியா விடை பெற்று 1914-இல் தம் தாய் நாடு மீண்டார்.

5. இந்தியா மீண்ட அடிகள் ஒருவருட காலம் இந்தியா முழுவதையும் சுற்றிக் காங்கிரஸ் தலைவர்களையும் பொது மக்களையும் அவர்கள் மனப்போக்

கையும் அறிந்தார்; தொழிலாளிகட்கும்—முதலாளி கட்கும், உழுபவர்க்கும் உழுவிப்பவர்க்கும் இருந்த போராட்டங்களைக் கவனித்தார்; பின்னர் என்னென்ன முறைகளில் நாட்டு மக்கட்குத் தொண்டு செய்ய வேண்டுமென்பதை வரையறை செய்து கொண்டு காங்கிரஸிற் சேர்ந்தார். தென் ஆப்பிரிக்காவில் செய்த அறப் போரினுல் இந்தியர் அவர் பெயரை நன்கு அறிந்திருந்தனர்; ஆதலால், அவரே இந்தியாவிலும் உரிமை இயக்கத்தை முன் நின்று நடத்தவல்லவர் என்று முடிவு கூறினர். அடிகள் காங்கிரஸ் இயக்கத் தலைமையை ஏற்று உரிமைப் போரில் இறங்கினுர்; பலமுறை சிறை சென்றனர்; தம் இன்ப வாழ்க்கையைத் துன்ப வாழ்க்கை ஆக்கிக்கொண்டனர்; இங்ஙனம் உரிமைப் போர் பல ஆண்டுகள் நடந்தது. இறுதியில் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது.

6. தமது தியாகம் பலனளித்தது கண்ட அடிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. எனினும், நாடு விடுதலை பெற்றது போதும் என்று அவர் ஓய்வு கொள்ளவில்லை. அப்பெரியார் தமது 78 வயதிலும் ஊர் ஊராகச் சென்று இந்து-முஸ்லிம் கலகங்களை அடக்கிவந்தார்; இந்துக்களையும் முஸ்லிம்களையும் அன்புகொள்ளுமாறு செய்ய உண்ணு நோன்பை மேற்கொண்டார்; அப்பெரியார் இல்லை எனின், இந்தியா முழுவதிலும் உள்நாட்டுக் குழப்பம் தலைவிரித்து ஆடியிருக்கும். இங்ஙனம் நாட்டில் அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபட்டு வந்த அம்மகான் 1948-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் மாலையில் டெல்ஹியில்

நடைபெற இருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

7. காந்தியடிகள் பொன்னுரைகள் பல. "எந்த நாட்டிலும் இல்லாத சாதி வேறுபாடுகள் இந்நாட்டில் உள்ளவரை இந்நாடு முன்னேற்றம் பெறாது; 'தாழ்த்தப்பட்ட மக்கள்' என்று கோடிக் கணக்கானவர் இருக்கும்வரை இந்து சமூகம் ஒற்றுமை அடையாது; நாட்டு மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெறாதவரை நமது சமூகம் அறிவுடைய சமூகம் ஆகாது; பெண் கல்வி பெருகுதல் வேண்டும்; சுருங்கக் கூறின், சாதி வேறுபாடு, தீண்டாமை, கல்வியின்மை, பெண்ணடிமை என்பன ஒழிக்கப்படல் வேண்டும்; கட்டாயக் கல்வி, தொழிற்கல்வி, அனைவரும் ஒரு தாயீன்ற மக்கள் என்னும் உணர்ச்சி முதலியன வளர்பிறை போல வளர்ச்சி பெறவேண்டும்," என்பன அடிகள் அருளிய பொன்னுரைகளிற் சிறந்தனவாகும்.

## அருஞ்சொற்பொருள்

வழக்கறிஞர் = வக்கீல். துன்புறுத்தாமை = அஹிம்சை. அறம் = தருமம். வாயிலாக = மூலமாக. முன்னிரண்டு படிப்பினைகளும் முதற் கதையைச் சேர்ந்தவை; பின்னது இரண்டாம் கதையைச் சேர்ந்தது. மாசு = குற்றம். தண்ணீர் = குளிர்ந்த நீர் (தண்மை + நீர்). உழுவிப்பவர் = நிலக்கிழவர்.

## பயிற்சி

I. விடை கூறுக :—

1. காந்தியார் 'அடிகள்' என்று ஏன் அழைக்கப்பட்டார்?
2. அவர் பெற்றோரிடமிருந்து பெற்ற நல்லன யாவை?
3. அடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்த திருப்பணிகள் எவை?

4. 1914-இல் இந்தியா மீண்ட அடிகள் ஒரு வருட காலம் செய்த வேலைகள் எவை?

5. அடிகள் இறுதிக் காலத்தில் செய்து வந்த நாட்டுப்பணி யாது?

6. அவர் பொன்னுரைகளிற் சிறந்தன யாவை?

II. 1. பிரித்து எழுதுக:—

அடக்கியாண்ட, சமயப்பற்று, சிற்றரசர், மனக்கசப்பு.

2. சேர்த்து எழுதுக:—

வரலாறு + ஐ; தவறு + ஐ; துன்பம் + வாழ்க்கை; உரிமை + போர்.

3. வாக்கியங்களில் அமைக்க:—

நலனுக்காக, தியாக வாழ்வு, அறிவுரை, பொன்னுரை, அறப்போர்.

III. காந்தியடிகள் இளமை - இங்கிலாந்து வாழ்க்கை - தென்னாப்பிரிக்காவில் தொண்டு - இந்தியாவில் உரிமைப் போர் - அவர் செய்த தொண்டு: இக்குறிப்புகளைத் துணையாகக் கொண்டு இப்பாடப்பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

## 2. வீரத் தமிழன்—செங்குட்டுவன்

1. ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர்ச் சேரநாட்டை ஆண்ட அரசருட் சிறந்தவன் **செங்குட்டுவன்** என்பவன். சேரநாடு என்பது இன்றைய மலையாள ஜில்லா, கொச்சி நாடு, திருவாங்கூர் நாடு என்பன சேர்ந்த மேற்குக் கடற்கரைப் பகுதியாகும். அதன் தலை நகரம் **வஞ்சிமா நகரம்** என்பது. அந்நாடு சங்க காலத்தில் கடல் வாணிகத்திற் சிறந்திருந்தது. செங்குட்டுவன் தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சிறந்த போர்வீரன்; பல போர் களை வென்றவன். செங்குட்டுவன் தம்பியான **இளங்கோ அடிகள்** துறவியாவர். அவர் தமைய னுடன் இருந்து சமயத்துறையிலும் இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கினர்.

2. இப்பொழுது மலையாள மொழி பேசப் படும் பழைய சேரநாடு தமிழ்மொழி பேசப்பட்ட இடமாகும். செங்குட்டுவன் தமிழ் அரசன். அவன் போரிற் சிறந்த வீரன்; தன் பகை அரசரை அடக்கிப் புகழ் பெற்றவன்; கப்பல்களை வழி மறித்துக் கொள்ளையடித்துவந்த கடற் கொள்ளைக் கூட்டத்தினரை அழித்தவன். அவன் போரிற் சிறந்து விளங்கினற்போலவே தமிழ் மொழிப்பற் றிலும் சிறந்து விளங்கினன்; மதுரைக் கூலவாணி கன் சாத்தனர் போன்ற பெரும் புலவர்கட்கு நண்பனக விளங்கினன்.

3. செங்குட்டுவன் ஒரு நாள் தன் மனைவி யுடனும் தம்பியாருடனும் மலைவளம் காணச் சென்றன். அப்பொழுது மதுரைக் கூலவாணி

கன் சாத்தனாரும் அவர்களுடன் கலந்துகொண்டார். தம் அரசர் பெருமான் மலைவளம் காண வந்ததை அறிந்த மலைவாணர் மலைபடு பொருள்களை எடுத்துக்கொண்டு வந்து, வேந்தன் முன் வைத்துப் பணிந்து நின்றனர். அரசன் அவர்களை அன்புடன் பார்த்து, "உங்கள் மலைப்பகுதியிற் குறிக்கத் தக்க சிறப்பு ஏதேனும் உண்டோ?" என்று கேட்டான். மலைவாணர், "மன்னர் பெருமானே, சில நாட்களுக்கு முன் இங்குள்ள வேங்கை மரத்தடியில் ஒரு பெண் வந்து வாடிய முகத்துடன் மேல் நோக்கியபடி நின்றிருந்தாள். அப்பொழுது ஒரு விமானம் வந்து அவளை மேலே அழைத்துச் சென்றது. இதுவே இப்பொழுது இப்பகுதியிற் பேசப்பட்டுவரும் சிறப்புச் செய்தி," என்று கூறி விடைபெற்றுச் சென்றனர்.

4. செங்குட்டுவன், அரசமாதேவி, அடிகள் ஆகிய மூவரும் அவள் இன்னவள் என்பதை அறிய முடியாது விழித்தனர். அப்பொழுது சாத்தனார் புன்முறுவல் பூத்துக் **கண்ணகி** வரலாற்றைத் தெளிவாக எடுத்துரைத்தார். மன்னன் கேட்டு வியந்து தன் மாதேவியைப் பார்த்து, "நங்காய், பாண்டியன் இறந்தவுடனே தன் உயிரைப் போக்கிக்கொண்ட கோப்பெருந்தேவி சிறந்தவளா? கணவனை இழந்து கடுந்துயர் உழந்து நம் நாடு வந்து மறைந்த கண்ணகி சிறந்தவளா?" என்று கேட்டான். உடனே அரசமாதேவி, "இருவரும் கற்புடை மகளிரே ஆவர். ஆயினும் நமது நாட்டுக்கு வந்த பத்தினியை நாம் போற்றுதல் நல்லது," என்றாள்.

5. செங்குட்டுவன் தன் அமைச்சரை நோக்க,

அவருள் ஒருவன், "மன்னவ, பத்தினிக் கடவுளுக்கு உரிய சிலையை வடநாடு சென்று, எதிர்ப் போரை வென்று இமயத்திலிருந்து கொண்டு மீள்வதே செவ்விது," என்று சொன்னான்.

6. செங்குட்டுவனது வடநாட்டு யாத்திரைக்குப் படைகள் தயாராயின; புறப்படுவதற்குரிய நன்னாளும் குறிக்கப்பட்டது. இதற்கிடையில், வடநாட்டிலிருந்துவந்த முனிவர் சிலர் வேந்தனைக் கண்டு, "ஆரிய அரசராகிய கனகனும் விசயனும் வடநாட்டரசர் கூடியிருந்த விருந்தொன்றில், 'தமிழரசன் ஒருவன் பல ஆண்டுகட்குமுன் இப்பக்கம் வந்தனனாம். சிலரை வென்று மீண்டனனாம்; நாம் இருக்கும் இக்காலத்தில் தமிழரசர் வருவராயின் நமக்குத் தப்பிப்போதல் அரிது' என்று பேசினர்," என்ற செய்தியைக் கூறிச் சென்றனர்.

7. முனிவர் கூற்றைக் கேட்ட மன்னவன் முனிவுகொண்டான்; அவன் விழிகள் சிவந்தன. அவன் விலாப் புடைக்க நகைத்து, "ஆரியர் ஆண்மையைக் காண்போம்," என்று கூறிப் புறப்பட்டான். அவனுடன் நால்வகைப் படைகளும் புறப்பட்டன. நகர மக்கள் வாழ்த்தி வழியனுப்பினர்; நாடு முழுவதிலும் இருந்த மக்கள் தத்தம் வழிபடு கடவுளர்க்குப் பூசையிட்டுத் தம் காவலனது வெற்றியை வேண்டி நின்றனர்.

8. சேரர் பெருமான் வடக்கு நோக்கிச் செல்லும் வழியில் நீலகிரியில் தங்கினான்; பிறகு நூற்றுவர் கன்னர் என்ற மன்னர் உதவியால் வடகரையை அடைந்து, வட கோசலத்தை நெருங்கினான்.

9. சேரனது வருகையை முன்னரே ஒற்றரால் அறிந்த கனகன், விசயன் முதலிய ஆரிய அரசர்

தம் படைகளுடன் காத்திருந்தனர்; ஆதலின், வட கோசலத்தை நெருங்கிய செங்குட்டுவனைத் திடீரெனத் தாக்கினர்; 'தமிழர் ஆற்றலைக் கண்போம்' என்று சொல்லிக்கொண்டே கடும்போர் புரிந்தனர். சேரன் போர்க் கருத்தோடு வந்தவன் ஆதலின் மிக்க உணர்ச்சியுடன் போரிட்டான். அவன் வீரர் சிறந்த போர்ப் பயிற்சி பெற்றவர் ஆதலின் இளைப்பின்றிப் போரிட்டனர். போர் பதினெட்டு நாழிகை நடைபெற்றது. முடிவு என்ன? சேரனாகிய சிங்கம் ஆரிய அரசர்களாகிய யானைகளை வென்றது; கனக விசயரைச் சிறைப்படுத்தியது. எஞ்சிய அரசர் உயிருக்கு அஞ்சி ஓடி மறைந்தனர்.

10. இமயத்திலிருந்து பத்தினியின் உருவத்தை அமைக்கத் தக்க சிறந்த கல் கொண்டுவரப் பட்டது. அது கங்கை நீரில் நீராட்டித் தூய்மை செய்யப்பட்டது. "தமிழர் ஆற்றலை இகழ்ந்த ஆரிய அரசர் இவர் என்று கூறி, இவர்களைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வஞ்சிமூதூர்க்கு அழைத்து வருக," என்று தன் வீரர் சிலரிடம் கனக, விசயரை ஒப்புவித்துச் சேரன் வஞ்சி மீண்டான்.

11. குறித்த நன்னாளில் பத்தினிக்குக் கோயில் எடுப்பித்து உருவச்சிலை நட்டுவித்துச் சேர வேந்தன் விழாக் கொண்டாடினான். அவ்விழாவிற்கு இலங்கை இறைவனான கயவாகு முதலிய அரசர் பலரும் வந்திருந்தனர். கனக, விசயர் செங்குட்டுவனது செல்வாக்கைக்கண்டு தம் அறியாமையை எண்ணி வருந்தினர். சேரன் அவர்களை மரியாதையாக நடத்தி அறிவுரை கூறி அனுப்பிவிட்டான்.

12. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கண்ணகி வர

லாற்றைச் செங்குட்டுவன் தம்பியாராகிய இளங்கோ அடிகள் ஒரு காவியமாகப் பாடியுள்ளார். அதுதான் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று சுப்பிரமணிய பாரதியாரால் பாராட்டப்பட்டுள்ள பெரு நூல். அதனில் கண்ணகி வரலாற்றுடன் செங்குட்டுவன் வரலாற்றையும் காணலாம்; அவன் ஆரிய அரசரை வென்றமையை அடிகள் பாராட்டி மகிழ்தலையும் படித்தின்புறலாம். மேலும் அக்காவியம் கொண்டு அக்காலத் தமிழகத்தின் நாகரிகம், சமய நிலை முதலியற்றையும் நன்கறியலாம். முத்தமிழ்க் காவியம் என்று பாராட்டப்படும் அந்நூலை நீங்கள் பெரியவர்களான பிறகு படித்துப் பயன் பெறுக.

### அருஞ்சொற்பொருள்

செலவு = யாத்திரை. இது முதற் புத்தகத்திலேயே ஆளப்பட்ட சொல். வாகை = வெற்றிக்குரிய அடையாளமாகச் சூடப்படும் வாகைப் பூமாலை. மலைவாணர் = மலை நாட்டு மக்கள். மலைபடு பொருள்கள் = மலையில் கிடைக்கும் தேன்; சந்தனம்; அகில்; யானைத் தந்தம் முதலிய பொருள்கள். நங்கை = பெண்களிற் சிறந்தவள். நம்பி = ஆடவரிற் சிறந்தவன். சிலை = கல். செவ்விது = செம்மையுடையது; தக்கது. இறைவன் = தலைவன்; அரசன்.

### பயிற்சி

I. விடை தருக:—

1. சேர நாடு எது? அதன் தலைநகர் யாது?
2. செங்குட்டுவன் எவற்றிற் சிறந்து விளங்கினான்?
3. அவனது முதல் வடநாட்டு யாத்திரைபற்றி யாது அறிவீர்?
4. மலைபடு பொருள்கள் எவை?

5. மலைவாணர் மன்னனிடம் கூறிய செய்தி யாது?
6. செங்குட்டுவன் இரண்டாம் வடநாட்டு யாத்திரைக்கு உரிய காரணம் யாது?
7. முனிவர் மன்னனிடம் கூறிய செய்தி யாது?
8. "ஆரியர் ஆண்மையைக் காண்போம்"—சந்தர்ப்பம் கூறுக.
9. சேரனுக்கு வடநாட்டு யாத்திரையில் உதவி புரிந்தவர் யாவர்? அவர் செய்த உதவி யாது?
10. வடகோசலப் போர்—இதுபற்றி யாது அறிவீர்?
11. சேரன் தன் வீரருக்கு யாது கட்டளையிட்டு வஞ்சி மீண்டான்?
12. பத்தினி விழாவிற்குப் பிறகு சேரன் பகைவரிடம் எவ்வாறு நடந்துகொண்டான்?
13. சிலப்பதிகாரத்தின் சிறப்பு யாது?
14. செங்குட்டுவனைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

II. 1. அரசனைக் குறிக்கும் சொற்களை இப்பாடத்திலிருந்து குறிக்க.

2. வாக்கியங்களில் அமைக்க:—

ஆற்றல், உருவச்சிலை, வழிமறித்து, பொதியமலை.

III. செங்குட்டுவன் சேர அரசன்—பத்தினி வரலாறு—சேரனது வடநாட்டு யாத்திரை—பத்தினி விழா: இச்குறிப்புகளைத் துணையாகக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரை யாக வரைக.

## 3. பிஸாரோவும் 'பெரு' நாடும்

1. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்ட பிறகு ஐரோப்பியர் அப்பரந்த நாட்டைப்பற்றி நன்கு அறிய முயன்றனர். அதனால், பிரான்ஸ், பிரிட்டன், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய ஐரோப்பிய நாடுகள் திறமைமிக்க தத்தம் மாலுமிகளை அனுப்பி, உள் நாடுகளைக் கண்டறிய முயற்சி செய்தன. வட அமெரிக்காவைக் கண்டு குடியேறியவருள் ஆங்கிலேயரே முதலிடம் பெற்றனர். தென் அமெரிக்காவில் நன்கு ஆராய்ந்து குடியேறியவருள் ஸ்பெயின் நாட்டவரே முதலிடம் பெற்றனர். அவருள் 'பெரு' என்ற நாட்டைக் கண்டறிந்து, ஸ்பெயின் நாட்டாரை அங்குக் குடியேறச் செய்த **பிரான்ஸிஸ்கோ பிஸாரோ** என்பவர் ஒருவராவர்.

2. பிஸாரோ ஸ்பெயின் நாட்டில் எளிய தாய் தந்தையர்க்குப் பிறந்தவர்; போதிய கல்வி கற்க வசதியற்றவர்; அதனால் ஒரு செல்வருடைய பன்றிகளை மேய்த்துப் பிழைக்கலானார். அப்பொழுது அவர் அமெரிக்காவைப்பற்றிப் பலவாறு கேள்வியுற்றார்; அமெரிக்கா பொன் விளையும் நாடு என்று மாலுமிகள் கூறக் கேட்டார்; அதனால் அங்குச் சென்று தம் வறுமையை ஒழிக்க விரும்பினார். அமெரிக்கா செல்லத் தம்மிடம் பொருள் இல்லையே என ஏங்கினார். இறுதியில் அவர்மீது இரக்கம் கொண்ட பல்போவா என்ற கப்பல் தலைவர் அவரைத் தம் கப்பலில் ஏற்றிக் கொண்டார்; அவரைப் பல இடங்கட்கும் தம்முடன் அழைத்துச் சென்றார். பிஸாரோ சில ஆண்டுகளில் ஒரு பயணக் குழுவின்

தலைவராக இருந்து ஒரு நாட்டைக் கண்டறியும் திறமை பெற்றார்.

3. பிஸாரோ வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையில் உள்ள பனமா நாட்டை அடைந்தார். அப்பொழுது அந்நாட்டில் இருந்த ஸ்பெயின் வீரரான அல்மக்ரோ என்பவர் பிஸாரோவுக்கு நண்பரானார். கிருஸ்துவப் பாதிரியார் ஒருவரும் பிஸாரோவுடன் நெருங்கிப் பழகினார். பிஸாரோ பனமாவில் இருந்தபொழுது, "தென் அமெரிக்காவில் பொன் விளையும் பெரு நாடு கண்டறியவேண்டும் என்று மனவுறுதிகொண்டார்; அதனைப் பாதிரியாருக்கும் அல்மக்ரோவுக்கும் தெரிவித்தார். அந்த யோசனையை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்ற அவ்விருவரும் பிஸாரோவுக்கு வேண்டிய பொருள் உதவி செய்தனர்.

4. ஒரு கப்பல் கட்டப்பட்டது. நாடு கண்டறியும் வேட்கையால் நூறு பேர் கூடினர். பிஸாரோ அவர்கட்குத் தலைவரானார். கப்பல் 1524-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் நாள் பனமாவை விட்டுத் தென் அமெரிக்காவின் மேற்குக்கரை ஓரம் தெற்கு நோக்கிப் புறப்பட்டது. பிஸாரோ கடற்கரையை உற்று நோக்கியபடியே சென்றார்; சிறிது தூரம் சென்ற பிறகு கரையோரமாக ஊர்கள் இருக்கக்கண்டார்; அவற்றுள் ஒன்றன் ஓரமாகக் கப்பலை நிறுத்தி அப்பகுதியை ஆராய விரும்பினார். அதனால் அனைவரும் கப்பலைவிட்டு இறங்கினர். சிலர் கரையில் தங்கினர்; சிலர் ஊரை நோக்கிச் சென்றனர். அவ்வூர் மக்கள் போர்த்தொழிலில் வல்லவர்கள். அவர்களுட் சிலர் முன்னேக்கிச் சென்ற வீரரைத் தாக்கினர்; வேறு சிலர் கரையில்




பிஸாரோ சென்ற இடங்கள்

தங்கியவரை எதிர்த்தனர். ஸ்பெயின் வீரர்கள் துப்பாக்கிகளைக் காட்டி ஊராரை வெருட்டினர். எனினும் பிஸாரோவுக்குக் கவலை மிகுந்தது; பனுமா சென்று போர் வீரர் பலரை உடனழைத்துக் கொண்டே மேற்கொண்டு செலவைத் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தார்; பனுமா மீண்டார்.

5. சில மாதங்கட்குப் பிறகு பனுமாவிலிருந்து இரண்டு கப்பல்கள் புறப்பட்டன. ரூயிஸ் என்ற சிறந்த மாலுமி கப்பல் ஒட்டினுர். போர் வீரர் நூற்றுவர் கப்பலில் இருந்தனர். போர்க்கருவிகள் குவிக்கப்பட்டிருந்தன. கப்பல்கள் நேரே தெற்கு நோக்கிச் சென்றன. பிஸாரோ தாம் முன்னர் ஆராய்ந்த இடத்தைத் தாண்டித் தெற்கே சென்ருர்; அங்கோர் ஊரைக்கண்டு கரையேறினுர். மாலுமிகள் அவரைப் பின் தொடர்ந்தனர்; ஊராரிடம் அன்புடன் பேசினர்; அவர்களுட் சிலர் அணிந்திருந்த பொன் வளையல்களைக் கேட்டுப் பெற்றுக்கொண்டனர்.

6. 'பெரு' நாட்டைக் கண்டு, அங்கு ஏற்படும் போரைச் சமாளித்து வெற்றி பெறத் தக்க போர் வீரர் பலரையும், மிகுதியான உணவுப் பொருள்களையும் கொண்டு வருவதாகக் கூறி அல்மக்ரோ என்பவர் பனுமாவுக்குச் சென்ருர்; ரூயிஸ் தனியே 'பெரு' நாடுவரை கடலிற் சென்று மீள்வதாகக் கூறித் தெற்கு நோக்கிச் சென்ருர்; பிஸாரோ சான்ஜூவன் ஆற்றங்கரையில் தங்கித் தம் ஆட்களுடன் உள்நாட்டுப் பகுதியை ஆராயலானுர்; அடர்ந்த காடுகள், முதலைகள் நிறைந்த ஆறுகள், பெரும் பாறைகள் இவற்றைக் கடந்து பல பகுதி

களைச் சென்று கண்டார். ஆங்காங்குச் சுதேசி களின் எதிர்ப்பு வன்மையாக இருந்தது. பிஸா ரோவின் ஆட்களில் சிலர் ஓர் ஆற்றில் படகுவிட்டுச் சென்றபோது படகு கவிழ்ந்து இறந்தனர்.

7. தெற்கே சென்றிருந்த ரூயிஸ் மீண்டும் வந் தார்; "தும்பிஸ் என்னும் கடற்கரை நகரத்தி லிருந்து சுதேசிகள் பெரிய கப்பலைச் செலுத்திக் கொண்டு வந்தனர். நான் அவருடன் பழகி நட்புக் கொண்டேன்," என்றூர். தும்பிஸ் நகரம் பெரு நாட்டைச் சேர்ந்ததே யாகும். பெரு நாட்டார் பயிர்த்தொழில் செய்தனர். அங்கு வாழை அன்னு சிப் பழ வகைகளும், உருளைக்கிழங்கு, மக்காச் சோளம் முதலியனவும் எங்கும் நிறைந்து காணப் பட்டன. மக்கள் அல்பாகா, இலாமா என்னும் ஆடுகளின் மயிரால் நெய்யப்பட்ட மெல்லிய ஆடை களை அணிந்திருந்தனர். பருத்தி ஆடைகளையும் நெய்தனர். அவர்கள் வாணிகத்திற் சிறந்திருந் தனர்; பெரிய வீடுகளில் வாழ்ந்து வந்தனர். செல்வச் சிறப்புடன் காணப்பட்ட அவர்கள் கள்ளம் என்பதை அறியாதவர்கள். அவர் இன்கர் என் னும் இனத்தைச் சேர்ந்த பெருங் குடி மக்கள். பிஸாரோவையும் அவர்தம் வீரர்களையும் அன்புடன் வரவேற்று உணவு அருத்தி உபசரித்தனர்.

8. பிஸாரோ அவர்களது செல்வ வளத்தைக் கண்டார்; அந்நாடு முழுவதும் சுற்றிப் பார்த்தார்; அவர்களது அன்பிற்கு உருகினூர்; ஆயினும் அவர்களை அடிமைப்படுத்தி அந் நாட்டைத் தம் நாட்டவர் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினூர். அதனுல் அவர் ஸ்பெயின் நாட்டு அரசரிடம் சென்று தாம் கண்டவற்றைக் கூறிப்

பல கப்பல்களில் போர் வீரர்களை ஏற்றிக்கொண்டு வந்து பெரு நாட்டைக் கைப்பற்றினர். உரிமையுடன் வாழ்ந்திருந்த இன்கர் மரபினர் அடிமைகள் ஆயினர்.

அருஞ்சொற்பொருள்

பரந்த = வியாபித்த. பேறு = பாக்கியம். அருத்தி = உண்பித்து.

பயிற்சி

I. விடை கூறுக :—

1. கொலம்பஸுக்குப் பிறகு அமெரிக்காவின் உட்பகுதிகளைக் காண முயன்ற நாட்டவர் யார் ?
2. பிஸாரோ யாவர் ? அவர் ஏன் அமெரிக்கா செல்ல விரும்பினர் ?
3. பல்போவாவின் கூட்டுறவினல் பிஸாரோ அடைந்த நன்மை யாது ?
4. பிஸாரோ பனுமாவில் எவருடன் நட்புக் கொண்டார் ? அங்கு அவர் எந்த நாட்டைப் பற்றிக் கேள்வியுற்ருர் ?
5. ரூயிஸ் என்பவர் யாவர் ? அவர் ஏன் குறிக்கத் தக்கவர் ஆயினர் ?
6. பிஸாரோ சான்ஜுவன் ஆற்றங்கரையில் அடைந்த அநுபவம் யாது ?
7. 'தும்பிஸ்' என்பது யாது ?
8. 'இன்கர்' மரபினர் நாகரிகம் வாய்ந்தவர் என்பது எவ்வாறு பொருந்தும் ?
9. இன்கர் எவ்வாறு வெல்லப்பட்டனர் ?
10. தம்மை வரவேற்று உபசரித்த இன்கரைப் பிஸாரோ அடிமைப்படுத்தினர் - இது நேர்மையாகுமா ? உங்கள் கருத்தென்ன ?

II. பிஸாரோவின் கப்பற் செலவு—சுதேசிகள் செல்வவளம்—பிஸாரோவின் வெற்றி : இக்குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

## 4. கம்பரது கரந்துறை வாழ்க்கை

1. கம்பரைப்பற்றிக் கூறப்படும் கதைகள் பல. அவை உண்மை என்று உறுதியாகக் கூறுதற்குச் சான்றுகள் இல்லை. அக் கதைகளுள் அவர் சேரனிடம் அடைப்பைக்காரராக இருந்த வரலாறு ஒன்றுகும். கம்பர் சோழ மன்னனது அவைப் புலவராக இருந்தவர் ; சோழனிடம் மனம் வேறுபட்டவராய்ச் சேர வேந்தனிடம் சென்றுர் ; கம்பரிடம் அடைப்பைக் காரராக இருந்தவர் என்று தம்மைக் கூறிக் கொண்டு சேரனிடமே அடைப்பைக்காரராக இருந்து வரலாஞர்.

2. சேரனது அவையில் தமிழ்ப்புலவர் பலர் இருந்தனர். அவர்கள் கம்பர் செய்த இராமாயண நூலை முறையாகப் படித்து அரசன் முன்னிலையில் பொருள் விரித்து வந்தனர். ஒரு செய்யுளுக்குப் புலவர்கள் பொருள் கூறியது சிறப்புறவில்லை. அதனுல் அரசன் பக்கத்தில் அடைப்பைக்காரராக இருந்த கம்பர் அச் செய்யுளுக்கு அழகாகப் பொருள்கூறி, 'இது கம்பர் கூறிய பொருள்' என்றுர். மன்னன் மிக்க மகிழ்ச்சி அடைந்து, அவரை அன்று முதல் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் நடத்திவரலாஞன் ; அவருக்குத் தனி நாற்காலி ஒன்று தந்து தன் அருகில் அமரச் செய்தான்.

3. சேரன் அவைப்புலவர் அடைப்பைக்காரர் மீது அளவற்ற பொருமை கொண்டனர் ; அவரை இழிந்தவர் எனக் காட்டி அரசனிடமிருந்து பிரிக்கச் சூழ்ச்சி செய்தனர். அப்பொருமையாளர் அரண்மனை நாவிதனை நெருங்கி, "உனக்கு இரண்டாயிரம் வராகன் தருவோம். நீ அரசர் எதிரில்

அடைப்பைக்காரனை உன் அண்ணன் என்று கூறிக் கட்டித் தழுவு; அவன் உன் இனத்தவன் என்பதைப் பிறர் நம்புமாறு செய். நாம் உனக்குத் தீங்கு வராமற் காப்போம்,'' என்றனர். பண ஆசையால் நாவிதன் புலவர்கள் யோசனைப்படி செய்வதாக ஒப்புக்கொண்டான்.



நாவிதன் கம்பரை உறவு கொண்டாடுதல்

4. ஒரு நாள் அவையில் இருந்த அடைப்பைக் காரர் எழுந்து வெளியிற் செல்ல முயன்றார். அப் பொழுது அவை ஓரத்தில் நின்றிருந்த நாவிதன் ஓடி வந்து அடைப்பைக்காரரைத் தழுவிக்கொண்டு, “ அண்ணா, நீ இதுவரை எங்கே சென்றிருந்தாய்?” என்று கூறிக் கோவென்று கதறி அழுதான். நுண் ணறிவிற் சிறந்த கம்பர் நாவிதன் நாடகத்தின்

காரணத்தை உடனே உணர்ந்துகொண்டார். எனினும் அதனை வெளிக்காட்டாது, நாவிதனைக் கட்டிக்கொண்டு அழுதார். அரசனும் புலவர் ஒழிந்த பிறரும் அக்காட்சியைக் கண்டு வியப்பும் திகைப்பும் கொண்டனர்.

5. நாவிதன் அடைப்பைக்காரரைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்; தன் மனைவி மக்களை அவருக்குக் காட்டினான். அடைப்பைக்காரர் அவர்களை ஆசீர்வதித்தார். பின்னர் நாவிதன் அவரை உணவுண்ண அழைத்தான். அப்பொழுது அவர், "தம்பீ, நமது முன்னோர் சொத்தில் எனக்குரிய பங்கைக் கொடு; நாளை முதல் நான் அரசர்க்கு நாவிதத் தொழில் செய்யும் உரிமையைக் கொடு. பிறகு உண்பேன்," என்றார். உடனே நாவிதன் தன்னிடம் புலவர் கொடுத்திருந்த இரண்டாயிரம் வராகனையும் கொண்டு வந்து கொடுத்தான்; அவரது இரண்டாம் விருப்பத்திற்கும் இசைந்தான். பின்னர் அடைப்பைக்காரர், "தம்பீ, நான் ஊழியம் செய்வதை நமது அரசர் ஏற்பாரோ? மறுப்பாரோ? அவரைக் கேட்டு அறிவோம், வா," என்றார். உடனே இருவரும் அவையை அடைந்தனர்; அரசன் இசைவைப் பெற்று மீண்டனர்.

6. அடுத்தநாட் காலையில் கம்பர் நீராடிப் பூசை முடித்து நாமகளை வழிபட்டு, "அம்மையே என்னை நீயே காக்கவேண்டும். நினது காற்சிலம்பு ஒன்று தேவை," என்று வேண்டினார். திருவருளால் அவர் கையில் நாமகளது காற்சிலம்பு ஒன்று வந்து சேர்ந்தது. அவர் அதனை மறைத்து எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார்;

அரசனைப் பணிந்து சிலம்பைக்காட்டி, "பெருமானே, இந்தச் சிலம்பு எங்கள் முன்னேருடையது. இதுபோன்ற மற்றென்று என் தம்பியிடம் இருக்கின்றது; ஏழை மக்களாகிய எங்கட்கு இது தேவையில்லை. இஃது அரசமாதேவியார் காலில் அணியத் தக்கது. இதனைப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்," என்ருர். வேந்தன் அச்சிலம்பைக் கையில் எடுத்தான்; அதன் பேரொளியையும் உயரிய வேலைப்பாட்டையும் கண்டு வியந்தான்.

7. மன்னவன் உடனே தன் பழைய நாவிதனை வரவழைத்தான்; "உன் அண்ணன் இந்தச் சிலம்பைக் கொடுத்தான். இதுபோன்ற மற்றொரு சிலம்பு உன்னிடம் இருக்கின்றதாம். அதனைக் கொண்டுவா," என்ருன். நாவிதன், "இதேது! கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற்போல வந்து விடிந்ததே!" என்று அலறிக் கைகால்கள் நடுங்க, வாய் குழற, "அரசரே, என்னிடம் சிலம்பு இல்லை," என்ருன்.

8. உடனே அரசன் ஏவலரைப் பார்த்தான். அவன் குறிப்புணர்ந்த ஏவலர் நாவிதனைத் தூணிற் கட்டி நையப் புடைத்தனர். நாவிதன் அடி பொறுக்க இயலாது அலறி அழுது, "பெருமானே, இவர் என் தமையனுர் அல்லர். இவரைப்பற்றி ஒன்றுமே எனக்குத் தெரியாது. நமது அவைப் புலவர் தூண்டுதலால் நான் இவர் தம்பிபோல நடித்தேன்," என்று, அவைப்புலவர் சூழ்ச்சியைத் தெளிவாக எடுத்துரைத்தான். அரசன் உண்மை உணர்ந்து அவனை விட்டு விட்டான்; அவைப் புலவர்மீது சினம் கொண்டான்; அவர்கட்குத் தண்டனை விதிக்க எண்ணினுன்; ஆயினும்

அடைப்பைக்காரர் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களை மன்னித்து விட்டான்.

9. பின்னர்ச் சேரவேந்தன் அடைப்பைக்காரரைப் பார்த்து, "இச்சிலம்பு உமக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டான். அடைப்பைக் காரர், "இச்சிலம்பை அணியும் பெருமகளைக் காட்டுவேன்," என்று கூறி, அரண்மனை மண்டபத்தில் நாமகளுக்குப் பூசை இடுவித்துப் பாடலானார். அப்பொழுது நாமகள் திரைக்கு அப்பால் சிலம்போசையுடன் தோன்றி, "கம்பா, என் சிலம்பு எங்கே?" என்று கேட்டாள். கம்பர் உடனே தம்மிடம் இருந்த சிலம்பை மேலே தூக்க, அது மறைந்தது. நாமகளும் மறைந்தாள்.

10. 'கம்பா!' என்று நாமகள் அழைத்ததைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டான். அவள் மறைந்தவுடன் அரசன் கம்பரை இறுகத் தழுவி, முகமலர்ச்சியுடன், "ஐயா, புலவர் பெருமானே, கவிச்சக்ரவர்த்தியாகிய நீர் அடைப்பைக்காரராகவா இங்கு வர வேண்டும்! உண்மை அறியாமல் உம்மை அடைப்பைக் காரராக வைத்திருந்தமைக்கு மன வருத்தப்படுகிறேன்," என்றான். கம்பர் தாம் அங்ஙனம் மறைந்து வாழ்ந்தமைக்குக் காரணம் கூறி, அரசனை அமைதிப்படுத்தினர். அரசன் அன்றுமுதல் கம்பரிடம் பேரன்பு காட்டி, அவரை மிக்க சிறப்பாக நடத்திவந்தான்.

### அருஞ்சொற்பொருள்

அடைப்பைக்காரர் = அரசன் அருகில் நின்று தாம்பூலம் கொடுப்பவர். அடைப்பை = வெற்றிலைப்பை; அடைப்பைக் காரன் வெற்றிலைப்பை எடுத்து ஊழியம் செய்பவன்; இச்சொல்

அடைப்பக்காரன் எனவும் வழங்கும். முறையாக = முதலிலிருந்து ஒவ்வொரு செய்யுளாக. காவலன் = குடிகளைக் காப்பவன்; அரசன். நாவிதன் = க்ஷவரத் தொழிலாளி. இசைவு = சம்மதம். நாமகள் = சரசுவதி. திகைப்பு = பிரமிப்பு.

### பயிற்சி

I. விடை தருக :—

1. சேரனது அவைப்புலவர் அடைப்பைக்காரர்மீது ஏன் பொறாமை கொண்டனர்?
2. அவைப்புலவர் செய்த சூழ்ச்சி யாது?
3. கம்பர் சமயோசித அறிவுடையவர் என்பது எதனால் விளங்குகிறது?
4. புலவரது சூழ்ச்சி எவ்வாறு பொய்த்தது?
5. அடைப்பைக்காரர் 'கம்பர்' என்பதை அரசன் எவ்வாறு உணர்ந்தான்?
6. கம்பர் பெருந்தன்மை உடையவர் என்பதற்கு ஒரு சான்று தருக.

II. சேரன் அவையில் கம்பர்—அவைப்புலவர் சூழ்ச்சி—கம்பர் சூழ்ச்சி—கம்பரது வெற்றி: 'இக்குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

# 5. நல்லவர் நட்பு

(பஞ்ச தந்திரக் கதை)

1. கோதாவிரிக் கரையில் ஒரு பெரிய வன்னி மரம் இருந்தது. பறவைகட்கு யமன் என்று சொல்லத்தக்க வேடன் ஒருவன் ஒருநாட்காலை அங்கு வந்தான்; தான் கொண்டுவந்த வலையை விரித்து அதன்மீது பலவகைத் தானியங்களைத் தெளித்து, ஒரு செடி மறைவிற் பதுங்கிக்கொண்டான்.

2. அப்பொழுது சித்திரக் கிரீவன் என்ற பெயர்கொண்ட புரு அரசு தன் பரிவாரத்துடன் அந்த வன்னிமரத்தில் வந்து தங்கினது. அது கீழே இறைத்திருந்த தானியங்களைப் பார்த்து, "அமைதி குடிகொண்டுள்ள இந்த இடத்தில் தானியங்கள் எவ்வாறு வந்தன? யாரேனும் கொண்டுவந்து போட்டிருத்தல் வேண்டும். நாம் உண்மையை அறியாது இவற்றைத் தின்னப் போகலாகாது. 'பொற்காப்பிற்கு ஆசைப் பட்டுப் பிராமணன் புலிக்கு இரையானாற்போல்' நாம் தானியங்கட்கு ஆசைப்பட்டு ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ளுதல் ஆகாது," என்றது.

3. புரு அரசு புகன்றதைக் கேட்டு ஒரு புரு மிக்க செருக்குடன், "இவ்வாறு ஒவ்வொரு சமயத்திலும் யோசிப்பதாயின், நமக்கு ஓர் இரையும் அகப்படாது. வெட்கப்படுபவன், பொறாமை உள்ளவன், மகிழ்ச்சி கொள்ளாதவன், பகைமை உள்ளவன், தீராத ஐயம் கொள்பவன், பிறர் பொருளாற் பிழைப்பவன் ஆகிய ஆறுபேரும் துன்பத்தையே நுகர்வர்," என்றது.

4. அதனைக்கேட்டுப் புருக்கள் எல்லாம் அச்

சத்தையும் ஐயத்தையும் அகற்றியனவாய்த் தானியங்களைத் தின்னக் கீழே பறந்து சென்றன. ஆனால், பாவம்! அவை நிலத்தில் இறங்கி வலையில் அகப்பட்டன. புரு அரசு, 'அந்தோ! என் சொல்லைக் கேளாது எல்லாப் புருக்களும் சென்று வலையில் அகப்பட்டுக் கொண்டனவே! நான் மட்டும் தனித்திருந்து பயன் என்ன?' என்று சொல்லிக் கீழே பறந்து சென்று வலையிற் பட்டது.



வேடன் புருக்கள் சென்ற பக்கம் ஓடுதல்

5. பறவைகள் வலையிற்பட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த வேடன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வலையை நோக்கிவரத் தொடங்கினான். புருக்கள் அவன் வருகையைக் கண்டு அஞ்சித் தம் அரசினைப் பார்த்து, "நாங்கள் நின் சொல்லை அவமதித்தது தவறு. அதன் பயனை அநுபவிக்கிறோம்," என்றன.

உடனே புரு அரசு, "நண்பர்களே, நடந்தது பற்றி வருந்த வேண்டா. வேடன் வருகின்றான். இப்பொழு தேனும் நான் சொல்வது போலச் செய்க. எல்லோ ரும் வலையோடு பறந்து செல்வோம். அப்படிச் செய் தாற்றான் நாம் உயிருடன் தப்பலாம்," என்றது.

6. அதன் யோசனையைக் கேட்ட புருக்கள் மகிழ்ச்சி கொண்டு வானிற் பறக்கலாயின; வேடன் சேய்மையிலிருந்து பார்த்து வியப்புற்றான்; "என்ன வியப்பு! புருக்கள் செய்த சூழ்ச்சி மனி தர் சூழ்ச்சியினும் விஞ்சியதாக இருக்கிறதே! என் வலை போய்விட்டதே, நான் என்ன செய்வேன்!" என்று மனம் வருந்திப் புருக்கள் பறந்து செல்லும் பக்கமாக விரைந்து ஓடினான். சிறிது நேரத்திற் குள் புருக்கள் கண்ணுக்கு மறைந்தன. வேடன் உடல் களைப்பும் மனக்கலக்கமும் உற்றுப் பின் தங்கிவிட்டான்.

7. புரு அரசு தன் கூட்டத்தைப் பார்த்து, "கண்டகி ஆற்றங்கரையில் சித்திரவனம் இருக் கின்றது. அங்கு என் நண்பனான இரணியகன் என்னும் எலி அரசன் வாழ்கின்றான். அவன் பல்லி னால் இவ்வலையை அறுப்பான். ஆதலின் அங்குப் பறந்து செல்வோம்," என்றது. பறவைகள் எலி அரசன் இருந்த இடத்தை நோக்கிப் பறந்து சென் றன; தம் அரசு குறித்த எலியரசன் வளையண்டை இறங்கின. அப்பொழுது எலியரசு, ஆபத்து நேரும்பொழுது தப்பித்துக்கொள்ளத் தன் வளைக் குப் பல வழிகளை அமைத்துக் கொண்டு இருந்தது; புருக்கள் இறங்கின ஓசையைக் கேட்டு அஞ்சி வளையில் பதுங்கிக் கொண்டது.

8. புரு அரசு வளையருகில் நின்று, "நண்

பனே, இரணியனே,'' என்று அழைத்தது. உடனே எலியரசு தன் நண்பன் குரலை உணர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் வளையைவிட்டு வெளியே வந்தது. "வருக! நண்பா, வருக! நின் வரவு நல்வரவு ஆகுக! உணர்ச்சி ஒத்த நண்பருடன் பேசி மகிழ் தலினும் இவ்வுலகில் மகிழ்ச்சி தரத்தக்கது வேறென்ன இருக்கிறது?,'' என்று கூறியது. இவ் வாறு கூறிய எலியரசு பறவைகள் கால்களில் மாட்டியிருந்த வலையைப் பார்த்து, "அடாடா! இதென்ன? நண்பா, சிறந்த அறிஞனாகிய நீயுமா வலையில் அகப்பட்டாய்?'' என்று வியப்புடன் கேட்டது. புரு அரசு நடந்ததை நவின்றது.

9. எலி அரசு முதலில் புரு அரசின் கால்களிற் சிக்கியிருந்த வலைக் கயிற்றை அறுக்கத் தொடங் கியது. அப்போது புரு அரசு, "நண்பா, முதலில் என் பரிவாரத்தைப் பிணித்துள்ள கயிற்றை அறு. பிறகு என்னை விடுவிப்பாய்,'' என்றது. எலி அரசு, "தன்னைக் காத்துக்கொண்டு தன் பரிவாரத்தைக் காக்க வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றுக்கு உயிர் சிறந்த சாதனம். ஆதலால் உயிரைக் காப்பாற்றினால் எல்லாவற்றையும் காத் தாற்போல் ஆகும்,'' என்றது. புரு அரசு, "நண்பா, நீ கூறுவது முறையே ஆயினும் முதலில் என் பரிவாரம் இன்பமடைவதையே நான் விரும்புகிறேன்,'' என்றது. எலி அரசு அதற்கு உடன்பட்டு முதலில் பரிவாரத்தைப் பிணித்திருந்த கயிற்றை அறுத்தது. விடுதலை அடைந்த புருக்கள் அனைத்தும் விடுதலை பெற்ற மக்களைப்போல மகிழ்ச்சி அடைந்து எலி அரசை வாழ்த்தி விடை பெற்றுச் சென்றன.

## அருஞ்சொற்பொருள்

பரிவாரம் = அரசனைச் சூழ வருபவர்; சுற்றியிருப்பவர். புகன்றது = சொன்னது. செருக்கு = கர்வம். நுகர்வர் = அனுபவிப்பவர். அந்தோ = ஐயோ. பட்டது = அகப்பட்டது. மட்டும் = அளவு. சேய்மை = தூரம் × அண்மை = அருகு. விஞ்சியது = மேம்பட்டது. உற்று = அடைந்து. நவின்றது = சொன்னது. நட்டல் = நட்புக்கொள்ளுதல். நள் = பகுதி.

## பயிற்சி

I. விடை தருக :—

1. புரு அரசு, எலியரசு—இவற்றின் பெயர்கள் எவை?
2. புரு அரசு தானியங்களைக் கண்டவுடன் யாது கூறியது?
3. பொற்காப்பிற்கு ஆசைப்பட்ட பிராமணன் வரலாறு யாது?
4. செருக்குக் கொண்ட புரு என்ன சொல்லிற்று?
5. எந்த ஆறு பேரும் துன்பத்தையே நுகர்வர்?
6. புருக்கள் அகப்பட்டதைக் கண்ட புரு அரசு யாது கூறியது? என்ன செய்தது?
7. புருக்கள் எவ்வாறு தப்பிச் சென்றன?
8. அவை எவ்வாறு விடுதலை அடைந்தன?
9. எலியரசு புரு அரசனை வரவேற்றுக் கூறிய உபசார மொழி யாது?
10. புரு அரசினைப்பற்றி உன் கருத்து யாது?
11. இரணியகனுக்கும் சித்திரக்கிரீவனுக்கும் நடந்த உரையாடலை எழுதுக.

II. 1. வாக்கியங்களில் அமைக்க :—
பரிவாரம், சேய்மை, நட்டல், அந்தோ, செருக்கு, காணக்காண.

2. நட்பு × பகைமை<br>உண்மை × இன்மை<br>இன்பம் × துன்பம் — இவை எதிர்ச்சொற்கள். இவை போன்ற நான்கு எதிர்ச் சொற்களை இப்பாடத்திலிருந்து கூறுக.

III. புருக்களும் வேடனும்—புருக்களும் எலியரசும் என்னும் குறிப்புகளைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

## 6. பர்மாவும் பர்மியரும்

1. இலங்கை தேயிலை முதலியவற்றை நமக்குத் தருதல்போல அரிசி, தேக்கு, வைரம், மண்ணெண்ணெய் முதலியவற்றை அளித்து வருகின்ற நாடு பர்மா நாடாகும். பர்மா நமது இந்தியாவின் கிழக்குக் கோடி மாகாணமாகிய அஸ்ஸாமை அடுத்திருப்பது. அதுவும் இந்தியாவைப்போல ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தது. இந்தியா விடுதலை பெற்ற பிறகு பர்மாவும் விடுதலை பெற்றுத் தன் குடி மக்களாலேயே ஆளப்பட்டு வருகிறது.


2. பர்மா நாடு சம தட்ப-வெப்ப நிலையை உடையது; நீர்வளம் நிலவளம் முதலியவற்றில் மேம்பாடு பெற்றுள்ளது. அந்த நாட்டில் பல மலைத் தொடர்களும் பேராறுகளும் இருக்கின்றன. மலைத் தொடர்களை அடுத்து அடர்ந்த பெருங் காடுகள் மிக்குள்ளன. ஆறுகளில் சிறப்புடையது ஐராவதி என்பது. இஃது ஆழமும் அகலமும் உடைய பேராறு. இது கடலிற் கலக்குமுன் ஒன்பது கிளைகளாகப் பிரிந்து கடலருகில் உள்ள நிலப்பகுதியை மருதநில வளத்திற் சிறக்கச் செய்துள்ளது. இதன் கிளைகளுள் ஒன்றன் கரையில் இரங்கூன் அமைந்துள்ளது. அது பர்மாவில் மிகச் சிறந்த துறைமுகப்பட்டினமாகும். பெரிய கப்பல்கள் கடலிலிருந்து ஆற்று வழியே அப்பட்டினம்வரை வந்து மீள்கின்றன. இரங்கூன் பர்மாவின் தலைநகரமாகவும் இருந்து வருகிறது. இவ்விரு காரணங்களாலும் இரங்கூன் வாணிகத்திலும் நாகரிகத்திலும் சிறந்து காணப்படுகிறது.

3. பர்மா நாடு பரப்பில் ஏறத்தாழப் பம்பாய் மாகாணத்தை ஒத்துள்ளது. அந்நாட்டில் பொன், வெள்ளி, செம்பு, ஈயம், தகரம், இரும்பு முதலிய உலோகப் பொருள்கள் கிடைக்கின்றன. வைரக் கற்களும் இரத்தினக் கற்களும் அகப்படுகின்றன. பிற நாட்டு வைரக் கற்களைவிட இரங்கூன் வைரக் கற்கள் விலை குறைந்தவை; ஆதலின் நடுத்தர மக்கள் அவற்றை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். காடுகளில் தேக்கு மரங்கள் மிகுதியாகப் பயிராகின்றன.

4. பர்மாவில் விளையும் பயிர்களில் சிறந்தது நெல். அது மிகுதியாகப் பயிராக்கப்படுவதால், பர்மியருக்குத் தேவையானது போக எஞ்சிய பகுதி இந்தியாவுக்கு மிகுதியாக அனுப்பப்படுகிறது. பர்மாவில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை செய்து பிழைக்கின்றனர். அவர்கள் எண்ணெயை எடுத்துத் தூய்மை செய்து வெளி நாடுகட்கு அனுப்புகின்றனர். நமது நாட்டில் பி. ஓ. சி. என்ற பெயருடன் மண்ணெண்ணெய்க் கடைகளும் பெரிய அலுவலகங்களும் இருத்தலை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

5. பர்மா நாட்டு மக்கள் பர்மியர் எனப்படுவர். பர்மியர் சிறிதளவு குள்ளமானவர்; சிறிது வெண்மை கலந்த மஞ்சள் நிறம் உடையவர். ஆடவர் கூந்தலை நன்கு வளர்த்து முன்புறமாகச் சுற்றிக் கட்டி முடித்துக் கொள்வர். பெண்டிர் தம் கூந்தலை முழங்கால் அளவு வளர்த்துப் பலவாறு பின்னித் தொங்கவிடுவர். தலைமீது பந்துபோல் சுருட்டியும் கட்டிக்கொள்வர்; ஆடவர் தம் உடலில்

சிங்கம், புலி, யானை, சிறுத்தை இவற்றின் உருவங்களை அமைத்துப் பச்சை குத்திக்கொள்வர். அங்ஙனம் குத்திக் கொள்வதால் அவ்விலங்குகளின் வீரம் தங்கட்கு அமையும் என்பது அவர்கள் நம்பிக்கை. அவர்கள் பெரும்பாலும் பருத்தி ஆடைகளையே உடுத்துவர்; பட்டாடை ஒன்றை மேலாடையாக அணிந்துகொள்வர். ஆடவர் ஐந்தாறு முழ நீளமுள்ள ஆடையைத் தலையில் பாகையாகச் சுற்றிக்கொள்வர்; பெண்கள் உயர்ந்த நகைகளை அணிந்துகொள்வர்; உயர்ந்த ஆடைகளை உடுத்திக்




பர்மியர்

கொள்வர். அவர்களது அரையாடை ஐந்து முழ நீளம் உடையது; பல நிறங்களைக் கொண்டது. மேற்சட்டை பட்டாடையால் தைக்கப்பட்டதாகும்.

6. நமது நாட்டில் இருக்கின்ற பல்வேறு

சாதிப் பிரிவுகள் பர்மியரிடம் இல்லை. அவர்கள் அனைவரும் ஒரு தாயீன்ற மக்களைப்போல இன்ப மாய்ப் பழகுகின்றனர். உலோபம், பொறாமை, பேராசை முதலிய தீய குணங்கள் இல்லாதவர். அவர்கள் தாழ்ந்த வருவாயுடைய வேலைகளைச் செய்ய முன் வாரார்; இன்ப துன்பங்களை ஒப்ப நோக்கும் இயல்புடையவர். அவர்களிடம் பொரு ளைச் சேமித்து வைக்கும் பழக்கம் இல்லை.

7. பர்மியர் விளையாட்டுகளில் பெருவிருப்பம் கொண்டவர். நம் பழைய நூல்களிற் கூறப்பட் டுள்ள கோழிப்போர், ஆட்டுக்கிடாப்போர், மற் போர், குதிரைப் பந்தயம் முதலிய ஆட்டங்களில் தம் பெரும் பொருளைச் செலவிடுவர்; தம் சிறப் புடை அலுவல்களையும் கவனியாது மேற்சொல்லப் பட்ட ஆட்டங்களைக் காணச் செல்வர். அவர்கள் நாடகத்திலும் ஊக்கம் உள்ளவர்; தாமே நடிப்பர். நாடகத்திற்கு உரிய செலவைச் செல்வர் சிலர் ஏற் றுக்கொள்வர். அதனால் பொது மக்கள் கட்டண மின்றி நாடகம் பார்த்துக் களிப்பர். பர்மிய நாட கங்கள் பெரும்பாலும் சமயத் தொடர்பான கதை களாகவே இருக்கும்.

8. பெண்கள் தாமாகவே தம் கணவரைத் தேர்ந்து மணக்கும் வழக்கும் பர்மாவில் இருக்கின் றது. பர்மியப் பெண்கள் நுண்ணறிவு உடையவர்; பதினெட்டு வயதிற்கு மேற்றான் மணம் செய்து கொள்கின்றனர்; மிக்க திறமையுடன் இல்வாழ்க் கையை இனிது நடத்துகின்றனர். கணவனும் மனைவியும் கலந்து யோசித்த பிறகே எக்காரியத் தையும் செய்வர். அதனால் அவர்களிடம் அன்பு வளர்ச்சி பெறுகிறது. கணவன் இறந்துவிடின்

மனைவி மறுமணம் செய்து கொள்வாள். மணம் ஒன்றுபடாவிடின், மண நீக்கம் செய்துகொள்ள இரு திறத்தாருக்கும் உரிமை உண்டு. அவர்கள் அவ்வாறு பிரியும்பொழுது வீட்டுப் பொருள்களைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்; பிள்ளைகள் இருப் பின் ஆண் பிள்ளைகளைத் தந்தையும் பெண் பிள்ளை களைத் தாயும் அழைத்துச் செல்வர். பெண்கள் வெளியுலகில் தாராளமாகப் பழக உரிமையுண்டு. கணவன் இல்லத்தில் இல்லாதபொழுது மனைவியே விருந்தினரை வரவேற்று உபசரிப்பாள்.

9. பர்மியருள் பெரும்பாலோர் உழவரே யாவர். அவர்கள் பெரும்பாலும் நெல்லரிசி உண வையே கொள்கின்றனர். ஒரு பெரிய தட்டில் உணவை வைத்துக்கொண்டு வீட்டார் அனைவரும் சேர்ந்து உண்பதும் அவர்தம் வழக்கமாகும். ஒரே தட்டில் உள்ள உணவை ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய அளவு எடுத்து உண்பர்; மாலை நேரத் தில் காபி அல்லது தேநீர் அருந்துவர்.

10. பர்மியர் புத்த மதத்தைப் பின்பற்றுபவர். அவர்களது மொழி 'பர்மிய மொழி' எனப்படும். அஃது உருது மொழியைப்போல இடக்கைப் பக்க மாகத் தொடங்கி எழுதப்படும். அம்மொழியில் பௌத்த சமய நூல்கள் வரையப்பட்டுள்ளன. பர் மியச் சிறுவர் அந்நூல்களைப் படிப்பதையே உயர் வாகக் கருதுகின்றனர். பர்மியர் முழுமுதற் கட வுளை நம்புகின்றனர். ஆயினும் சிறு தெய்வங்களே தமக்கு இன்ப துன்பங்களை அளிக்கின்றன என் பது அவர்கள் நம்பிக்கையாகும்.

### அருஞ்சொற்பொருள்

மேம்பாடு=உயர்வு. மருத நிலம்=வயலும் வயல்சார்ந்த இடமும். அலுவலகம்=உத்தியோகசாலை. அரை ஆடை= இடுப்பில் கட்டும் ஆடை. ஊழ்=விதி. வலி=வலிமை. மண நீக்கம்=விவாகரத்து. கேடுறின்=கேடு அடையின். பி. ஓ. சி.—பர்மா ஆயில் கம்பெனி.

### பயிற்சி

I. விடை தருக :—

1. பர்மாவின் நீர் - நிலவளங்கள், தட்ப - வெப்பநிலை இவற்றைப்பற்றி யாது அறிவீர் ?
2. அந்நாட்டில் கிடைக்கும் உலோகங்கள் எவை ? பிற பொருள்கள் எவை ?
3. பர்மிய கூந்தல் அலங்காரம் பற்றி யாது அறிவீர் ?
4. பர்மியர் குணநலன்கள் யாவை ?
5. பர்மியர் மணமுறை எத்தகையது ?
6. பர்மியருக்குள் மணநீக்கம் எவ்வாறு நடைபெறுகிறது?

II. 1. பிரித்துக் காட்டுக :—
நுண்ணறிவு, பேராறு, ஓரளவு, அறிந்திருத்தல்.

2. சேர்த்துக் கூறுக :—
துறைமுகம் + பட்டினம், எண்ணெய் + கிணறு, பெற்று + உள்ளது, மலை + பகுதி.

# 7. உலகத்தின் வடகோடி

1. கடல் கடந்து பல நாடுகளைக் கண்டறிய வேண்டும் என்னும் வேட்கையின் விளைவாகக் கடந்த சில நூற்றுண்டுகளில் அஞ்சா நெஞ்சம் படைத்த ஐரோப்பியர் பலர் புதிய நாடுகள் பல வற்றைக் கண்டறிந்தனர். அவற்றில் முதன்மை யானது கொலம்பஸ் கண்டுபிடித்த அமெரிக்கா ஆகும். பின்னர் ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரே லியா முதலியனவும் கிழக்கிந்தியத் தீவுகள் போன்ற கணக்கற்ற தீவுகளும் கண்டுபிடிக்கப் பட்டன. மக்கள் குடியேறி வாழத்தக்க நாடுகளி லும் தீவுகளிலும் ஐரோப்பியர் சென்று குடியேறி வாழலாயினர்; அவ்வந் நாட்டு இயற்கைச் செல் வங்களைக் கண்டறிந்து, தங்கள் நலனுக்குப் பயன் படுத்தி இன்றும் இன்ப வாழ்வு வாழ்கின்றனர்.


2. இன்னும், 'உலகம் உருண்டை என்பது தெரிகிறது; எனினும் அதன் வடகோடியையும் தென் கோடியையும் கண்டறிவோம்' என்று புறப் பட்டவர் பலர். வட கோடியைக் கண்டறிய ஏறக் குறைய முந்நூறு ஆண்டுகளாகவே முயற்சிகள் நடந்து வந்தன. இறுதியில் 1873-இல் நான்சென் என்பவர் புறப்பட்டு வடகோடியைக் காண முயன்று கிரீன்லந்தைக் கண்டறிந்தார். அதனைக் கடந்து மேலும் வடக்கிற் செல்ல அவராற் கூட வில்லை. ஆயின் பல துன்பங்கட்கு இடையே வடக்கு நோக்கிச் சென்று முதன் முதல் வட கோடியைக் கண்டறிந்தவர் பியரி என்ற அமெரிக் கர் ஆவர்.

3. பியரி என்பவர் அமெரிக்க ஐக்கிய நாடுக

ளின் கடற்படையில் வேலேபார்த்து வந்தவர். அவர் நான்சென் முயற்சியைப் பற்றிய நூலேப் படித்தார். தாமும் கிரீன்லந்து செல்லவேண்டும் என்று விரும் பினுர்; 1887-இல் கிரீன்லந்தை அடைந்தார்; அந் நிலப்பகுதி முழுவதையும் பார்வையிட்டு, 'கிரீன் லந்து ஒரு தீவாகும்' என்பதை முதன் முதல் உல கறியச் செய்தார். அதனுல் அவர் பெயர் உலகம் முழுவதும் பரவியது. அமெரிக்க அரசாங்கத்தார் அவரைப் பெருமைப்படுத்தினர்.

4. உலகத்தின் வடகோடியைக் காணவேண் டும் என்பது பியரிக்கு இருந்த ஆவலாகும். அவர் அதனைத் தம் நண்பர் பலரிடம் கூறினுர். அவர் ஆவல் இன்னது என்பது அக்கால அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் என்பவருக்கு எட்டியது. அவர் அதனை ஆமோதித்தார்; பிய ரியை ஊக்கப்படுத்தி, அவருடன் செல்ல விரும்பின வரையும் ஊக்கப்படுத்தினுர்; அவர்கள் நியூயார்க் நகரத் துறைமுகத்தில் 'ரூஸ்வெல்ட்' என்ற கப்ப லில் ஏறிப் புறப்பட்டபொழுது அருகில் இருந்து வாழ்த்தி அனுப்பினுர்.

5. பியரி 1908-ஆம் ஆண்டு ஜுலைத் திங்க ளில் தம் கடற் செலவைத் தொடங்கினுர்; ஆகஸ்ட் திங்கள் முதல் நாள் அன்று கிரீன்லந்தில் உள்ள யார்க் முனை என்னும் இடத்தை அண்மினுர். பியரிக்குமுன் வடக்கு நோக்கிச் சென்றவர் அனை வரும் அந்த முனை வரையிற்றுன் சென்று மீண்ட னர். அதற்கு அப்பால் அதுகாறும் ஒருவரும் அடி யெடுத்து வைத்திலர். இந்த இடம் நாகரிக உலகத் திற்கும் வடக்கேயுள்ள ஆர்க்டிக் உலகத்திற்கும் நடுவில் அமைந்திருப்பது. பியரி அந்த முனையரு


பியரி 6-4-1909
வட துருவ சமுத்திரம்
கிரீன்லாந்து
ஐஸ்லந்து
கனடா
நியூயார்க் 1908
ஐக்கிய நாடுகள்
மெக்ஸிகோ
அட்லாண்டிக் சமுத்திரம்

உலகத்தின் வடகோடி

கில் சில நாட்கள் தங்கினர்; பனி நாட்டிற்குச் செல்வதால் பனிக்கட்டிகளைக் கொண்டு வீடுகட்டி வாழும் எஸ்கிமோ எனப்படும் மக்களையும் ஏறத் தாழ இருநூற்றைம்பது நாய்களையும் தம்முடன் கப்பலில் ஏற்றிக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்றார்.

6. கப்பல் வடக்கு நோக்கிச் சென்று பாப்பின் வளைகுடாவை அடைந்தது; அங்கிருந்து ஆர்க்டிக் கடலை நோக்கிச் செல்லத்தொடங்கியது. அப்பொழுது கப்பலுக்கு முன் ஏறத்தாழ முந்நூற்றைம்பது கல் தொலைவுவரை ஒரே பனி நிலம் காட்சி அளித்தது. அப்பனிக் கட்டிகளைச் சமாளித்துக்கொண்டு கப்பல் சென்றது. ஆயின் செப்டெம்பர் மாதம் ஐந்தாம் நாள் அன்று கப்பலைச் சூழ்ந்து பனி நன்கு உறைந்து விட்டது. கப்பல் மேல்செல்லக்கூடவில்லை. அதனால் பியரியும் பிறரும் கப்பலைவிட்டு இறங்கினர்; பக்கத்தில் ஓர் இடத்தைச் செவ்வைப்படுத்திக்கொண்டு பல கூடாரங்களை அடித்தனர். பிரயாணிகள் அவற்றில் தங்கி வாழலாயினர். பனி நாட்டில் பிறந்து பழகிய எஸ்கிமோக்கள் கூட்டுறவினல் பியரியும் அவர் தோழரும் இன்பமாகக் காலம் கழித்தனர். அக்டோபர் மாதம் 12-ஆம் நாள் கதிரவன் மறைந்தான். இருள் நாடெங்கும் சூழ்ந்தது. ஊதற் காற்றும் பிரயாணிகளைச் சுற்றி வீசியது. பெரிய பனிப் பாறைகள் அசையும்பொழுது இடும் ஓசை இரவு பகல் கேட்ட வண்ணம் இருந்தது. பியரி இருந்த அந்த இடத்திற்கும் வடகோடிக்கும் ஏறக் குறைய நானூற்றைம்பது கல் தொலைவிருந்தது. பியரி 1909-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ஆம்

நாள் வரை—அப்பகுதியில் இருளும் மாரியும் நீங்கும் வரை அங்கேயே தங்கியிருந்தார்.

7. பியரி பிப்ரவரி 15-ஆம் நாள் தம் நண்பருள் எழுவரையும் 95 எஸ்கிமோக்களையும் 150 நாய்களையும் 28 வண்டிகளையும் உடன் கொண்டு தமது செலவைத் தொடங்கினர். ஒவ்வொரு வண்டியிலும் நால்வர் அமர்ந்தனர்; ஐம்பது அல்லது அறுபது நாட்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டனர். அவர்கள் வடக்கே செல்லத் தொடங்கிய பொழுது வானம் குளிர்ச்சியாகவும் தூய்மையாகவும் அமைதியாகவும் இருந்தது. பிரயாணம் தொடர்ந்து செய்யப்பட்டது. பிரயாணிகளில் காய்ச்சல் கண்டவரும், அச்சம் கொண்டவரும், கை கால் ஒடிந்தவரும், புறப்பட்ட இடத்திற்குத் திருப்பி அனுப்பட்டனர்; பிரயாண நிலையைப் பின்னே தங்கியிருப்பவர்க்கு அறிவிக்க அவ்வப்போது சிலர் அனுப்பப்பட்டனர். இதனல் பின் தங்கியவர்கட்கும் முன் சென்றவர்க்கும் தொடர்பு இருந்துகொண்டே இருந்தது.

8. மார்ச்சு மாதம் 15-ஆம் நாளுக்குள் பலர் நோயுற்றுத் திரும்பிவிட்டனர். பியரியுடன் எஞ்சியிருந்தவர் எஸ்கிமோக்கள் நால்வரும் பியரியின் வேலை யாளுமே ஆவர். அவர்கள் மேலும் ஏறத்தாழ நூற்றுமுப்பத்தைந்து கல் தொலைவு செல்ல வேண்டியவராக இருந்தனர். அப்பொழுது அவர்களிடம் ஐந்து வண்டிகளும், நாற்பது நாய்களும், நாற்பது நாட்களுக்குப் போதிய உணவும் இருந்தன. பியரி மனந்தளராது மேற்கொண்டு செல்லலானர்; பத்து மணி நேரம் பிரயாணம் செய்வதும், பிறகு சிறிது நேரம் உறங்குவதும், மீண்டும் பிர

யாணம் செய்வதுமாக இருந்தார். அவர் இங்ஙனம் சென்று ஏப்ரல் ஐந்தாம் நாள் வடகோடிக்கு முப்பத்தைந்து கல் தொலேவில் தங்கினர். அங்கு வானம் நிறம் அற்றதாகக் காட்சி அளித்தது; வானவட்டம் கருகித் தோன்றியது. பியரி மிக்க மகிழ்ச்சி அடைந்து மேலும் பிரயாணத்தைத் தொடங்கி, ஏப்ரல் ஆறும் நாளன்று உலகத்தின் வடகோடியை அடைந்தார்; அந்த இடத்தில் பனிமலே ஒன்றின் மீது தமது (அமெரிக்க ஐக்கிய) நாட்டுக் கொடியைப் பறக்கவிட்டார்.

9. "நான் இருபது ஆண்டுகளாகக் கண்ட கனவு இன்று நனவாயிற்று. உலகத்தின் வடகோடி இதுதான். இங்கு நிலம் காணப்படவில்லே. எங்கும் பனியே காணப்படுகிறது,'' என்று பியரி தமது நாட்குறிப்புச் சுவடியில் ஏப்ரல் ஆறும் நாளன்று எழுதினர்; பின்னர்த் தம் தாய்நாடு நோக்கி மீண்டார். அமெரிக்க மக்களும் அரசாங்கத்தினரும் அவருக்குப் பெருஞ் சிறப்பளித்து அவரை உளமார வாழ்த்தினர்.

அருஞ்சொற்பொருள்

வேட்கை=பெரு விருப்பம். வியத்தகும்=வியக்கத்தகும். ஆர்க்டிக் கடல்=வடகடல். அண்மினர்=நெருங்கினர்.

பயிற்சி

I. விடை தருக :—

1. மேனுட்டாரிடம் காணப்படும் சிறந்த பண்பு யாது?
2. பியரி முதன் முதலில் எங்ஙனம் புகழ் பெற்றர்?
3. பியரி தம் வடகோடி யாத்திரைக்கு யாரை உடனழைத்துச்சென்றர்? காரணம் என்ன?
4. கப்பல் நின்றுவிட்ட பிறகு பியரி யாது செய்தார்? அவரது அநுபவம் யாது?
5. வடகோடி எவ்வாறு கண்டறியப்பட்டது?

II. பியரியே தம் அநுபவத்தைக் கூறுவதுபோலக் கூறுக.

# 8. நகைச் சுவை

1. ஒன்பது சுவைகளில் நகைச்சுவை ஒன்று. அது 'ஹாஸ்யம்' என வடமொழியில் கூறப்படுகிறது. சிரிப்பு உடலைக் குலுங்கச் செய்கிறது; இரத்த ஓட்டத்தை வளர்க்கிறது; உள்ளத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. ஆதலின் ஒவ்வொருவரும் சிரிப்பதைச் சிறந்த பயிற்சியாகக் கொள்ளுதல் நல்லது என்று மேனாட்டு மருத்துவ அறிஞர்கள் கூறியுள்ளனர்.

2. அரசன் தன் நாட்டைக் காக்கும் கவலையும் பிற நாட்டார் படையெடுப்பாரோ என்னும் கவலையும் கொண்டிருத்தல் இயல்பு. சாதாரணக் குடிமக்களுக்கே வாழ்க்கையில் பல கவலைகள் உண்டாகின்றன எனின், பல குடும்பங்களைக் காக்கும் அரசனுக்கு உண்டாகும் கவலைகட்கு அளவுண்டோ? அவன் அரசனாக இருக்குமளவும் கவலைகள் இருந்து கொண்டே இருக்கும். அந்நிலையில் அவன் வாழ்க்கை பயனற்றுப் போய்விடும். ஆதலின், கவலையினூடே மனம் மகிழ்ச்சி கொள்ளவும் கவலைகளைச் சிறிதளவு மறக்கச் செய்யவும் அரசனுக்கு வசதி வேண்டும். அவ்வசதியை உண்டாக்கவே அரசன் அவையில் கூர்த்த அறிவும் சிறந்த புலமையும் நகைச்சுவை பொருந்தப் பேசும் ஆற்றலும் உடைய அறிஞன் ஒருவன் இருப்பது வழக்கம். அக்பர் தமது அவையில் வீரபாலன் என்ற நகைச்சுவைப் புலவனை வைத்திருந்தார்; கிருஷ்ண தேவராயர் தமது அவையில் தெனாலி இராமலிங்கனை வைத்திருந்தார்.

3. நாடகங்களில் நகைச்சுவை உண்டாக்கும்

நடிகர் இருப்பர்; இன்று காட்டப்பெறும் திரைப் படங்களில் நகைச்சுவை நடிகர் இருக்கின்றனர். உலகப் புகழ்பெற்ற சார்லி சாப்லின் நகைச்சுவை அரசராவர். தமிழ் நாட்டில் திருவாளர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நகைச்சுவை அரசர் எனப் பெயர் பெற்றவர் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவர் நடிக்காத திரைப்படக் காட்சி இல்லை என்னலாம். அவரும் அவர் மனைவியரான திருவாட்டி மதுரம் அம்மையாரும் நடிக்கும் காட்சிக்குத் தமிழ் மக்கள் கூட்டங் கூட்டமாகச் செல்லுகின்றனர் எனின், பொதுமக்கள் நகைச் சுவையில் எந்த அளவு ஈடுபட்டிருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும்.

4. நம் நாட்டுத் தமிழ்ப் புலவர்கள் பாக்களைப் பாடுவதுடன் அமையாது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நகைச்சுவை பெருக்கும் உரைகளை உரைப்பதிலும் சிறந்து விளங்கினர். பிறர் முன் பேசும் பொழுது இருபொருள் பயக்கும் சொற்களாய் இடத்துக்கு ஏற்ற தகுதியுடையனவாய், உடனுக்குடன் நயம்படப் பேசிக் கேட்போரை நகைக்கச் செய்யும் ஆற்றல் பெற்று இருந்தனர். அங்ஙனம் அப்பெருமக்கள் பேசிய அறிவுடை மறுமொழிகள் எண்ணிறந்தன. அவை கேட்போருக்கு இன்பம் பயப்பதுடன் அவர்தம் அறிவையும் கூர்மையாக்க வல்லன. அவை ஏட்டில் காணமுடியாதனவாய்ச் செவிவழிச் செய்திகளாக உலவி வருகின்றன. அவற்றுட் சில ஈண்டுத் தரப்படும். அவற்றின் பொருள் நோக்கி இன்புறுக.

5. எட்டயபுரத்துக் குறுநில மன்னரது அவைப் புலவராகக் கடிகை முத்துப் புலவர் என்

பவர் இருந்தார். அவர் நயம்படப் பேசுவதில் சமர்த்தர். அவர் ஒரு நாள் தம் மனைவியின் திவசத்திற்காகக் கடையில் சில பொருள்களை வாங்கி மூட்டையாகக் கட்டித் தலைமீது வைத்துக்கொண்டு தம் மனை நோக்கி நடந்தார். அப்பொழுது குறுநில மன்னர் அவ்வழியில் குதிரைமீது வந்துகொண்டிருந்தார். அவ்வரசர் தம் புலவர் தலைமீது மூட்டையைக் கண்டதும் வியப்புற்று, "புலவரே, என்ன செய்தி? மூட்டையை ஏன் தலை மீது வைத்துச் செல்கிறீர்?" என்று கேட்டார். புலவர் உடனே, "அரசரே, என்தலை விதிவசம்" என்று பதிலளித்தார். இப்பதில், 'என் தலைவி திவசம்' என்றும், மூட்டையைச் சுமப்பது 'என் தலை விதி வசம்' என்றும் இருபொருள்பட்டு நகைச்சுவை அளித்தலைக் கண்ட அரசர் அகமகிழ்ந்தார்; அன்று முதல் அவருக்கு ஏவலன் ஒருவனைத் தம் செலவில் அமர்த்தினர்.

6. கடிகை முத்துப் புலவர் நோய்வாய்ப்பட்டு இறக்குந் தறுவாயில் இருந்தார். அவரைப் பார்க்கப் புலவர்களும் பெரு மக்களும் அங்குக் கூடியிருந்தனர். அப்பொழுது அவர் மகள் பாலைத் தவறுதலாக அழுக்குத் துணியில் நனைத்துப் புலவர் வாயிற் பிழிந்தாள். பால் மணம் இன்றி அழுக்கு நாற்றம் வீசியதனால் புலவர் பாலை வெளியில் துப்பினர். "பால் கசக்கின்றது போலும்! இஃது இறப்புக்குறி," என்று எண்ணிய மகள் கண்ணீர் விட்டு, "அப்பா, பாலும் கசக்கிறதோ?" என்று கேட்டாள். புலவர், "பாலும் கசக்கவில்லை; கந்தையும் கசக்க வில்லை," என்று பதிலளித்தார்; தம் மகள் செய்த தவறுதலை நகைச்சுவை

பயக்கப் புலவர் எடுத்துக் காட்டியது அவரது அறிவு நுட்பத்தைக் காட்டுகிறதன்றே!

7. சிவகங்கை என்பது இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள ஊர். அதனை ஆண்டு வந்த அரசர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றி வளர்த்த பெருமக்களாவர். சிவகங்கை அரசர் ஒருவர் காலத்தில் வேல் கவிராயர் என்பவர் அவைப் புலவராக இருந்தார். அப்புலவர் ஒன்பது சுவைகளிலும் கவிபாடும் ஆற்றல் பெற்றவர்; நயம்படப் பேசித் தம் காவலரை மகிழ்விக்கும் திறன் மிக்கவர். அதனால் மன்னர் அப்புலவருடன் இருந்தே தம் பெரும் பொழுதைக் கழிப்பார். அவருடன் நயம்படப் பேசிப்பேசி அரசரும் சுவைபடப் பேசுவதில் பெயர் பெற்றார். அவர் ஒரு நாள் வேல் கவிராயருடனும் வேறு புலவர்களுடனும் அளவளாவிக் கொண்டு இருந்தார். அவ்வமயம் அவரைக் காணப் புலிக்குட்டிக் கவிராயர் என்பவர் வந்தார்; அரண்மனை வாயிற் காவலனைப் பார்த்து, "அரசரிடம் சென்று 'புலி வருகின்றது' என்று கூறு," என்றார். அரசர் புலிக்குட்டிக் கவிராயரை நன்கு அறிந்தவர், ஆதலின் அவர்தாம் வந்திருப்பவர் என்பதை அறிந்து புன்னகை கொண்டு, "அப்படியா, இங்கு 'வேல்' இருக்கின்றது; அச்சம் இன்றேல் 'புலி' வரட்டும்," என்றார். காவலர் பதிலைக் காவலன் கூறக்கேட்ட புலிக்குட்டிக் கவிராயர் புன்முறுவலுடன் உட்சென்று அவையை அடைந்தார். அரசர் உட்பட அனைவரும் அவரைக் கண்டு கைகொட்டி நகைத்து வரவேற்றனர்.

'புலிக்குட்டிக் கவிராயர் வருகிறார்' என்பதற்கு ஏற்ப, 'இங்கு அவரை எதிர்த்து நிற்கத் தக்கவேல்

கவிராயர் இருக்கிருர்' என்றும், 'புலி வரின் அதை ஒடுக்கத் தக்க வேல் இருக்கிறது' என்றும் அரசரது பதில் இருபொருள்பட்டு இன்பம் பயத்தல் காண்க.

8. சிங்கவனம் என்பது தஞ்சை ஜில்லாவில் இருக்கின்றது. சிங்கவனத்தில் அரசர் அவைப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் இலக்கண இலக்கியங்களில் நல்ல பயிற்சி பெற்றவர். அப்பயிற்சியுடன் சிலம்ப விளையாட்டிலும் சிறந்து விளங்கினர். அரசர் அவரிடம் மிக்க அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். ஒரு நாள் அரண்மனை வாயிலில் புலவரும் அரசரும் உலாவிக்கொண்டிருந்தனர். அப்பொழுது புலிக்குட்டிக் கவிராயர் அங்குச் சென்ருர். அவருக்கு அவர்கள் இருவரும் இன்னவர் என்பது தெரியாது. அரசர் சாதாரண உடையில் இருந்தமையால் கவிராயர் அவரை அறியக்கூட வில்லை. அவர்கள் தம்மைப் போலவே அரசரைக் காணவந்தவர் என்று கவிராயர் கருதினர். சிங்கவனப் புலவர் கவிராயரைப் பார்த்து, "ஐயா, தாங்கள் யார்?" என்று கேட்டார். கவிராயர் சிறிது இறுமாப்புடன் "நாம் புலிக்குட்டிக் கவிராயர்" என்ருர். அவரது இறுமாப்பைக் கண்ட புலவர், "ஓகோ? அப்படியா, சிங்கவனத்தில் புலிக்குட்டி உலாவ வந்துள்ளதோ?" என்று கூறிக் கவிராயர் இறுமாப்பு ஒடுங்க நகைத்தார். இக்கூற்று, 'சிங்கம் உலவும் வனத்தில் புலிக்குட்டிக்குப் பெருமை இல்லை' என்பது குறித்தல் காண்க.

### அருஞ்சொற்பொருள்

ஒன்பது வகைச் சுவை = நவரசம் ; சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, இரௌத்திரம், வீரம், பயம், குற்சை (அருவருப்பு),

அற்புதம், சாந்தம். இவை ஒன்பதும் தமிழில் இன்பம், நகை, அவலம், வெகுளி, வீரம், அச்சம், இளிவரல், வியப்பு, சமநிலை (அமைதி) எனப்படும். மறுமொழி=பதில் வார்த்தை. எட்டயபுரம்=திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தது; சுப்பிரமணிய பாரதியார் பிறந்த இடம். திவசம்=இறந்தவர் பொருட்டு ஆண்டுக்கு ஒரு முறை செய்யும் நினைவுச் சடங்கு. குறுநிலமன்னர்=ஜமீந்தார். திறன்=ஆற்றல். காவலன்=வாயிற் காவலன். காவலர்=குடிகளைக் காப்பவர், அரசர்.

### பயிற்சி

I. விடை தருக:—

1. ஒன்பது சுவைகள் எவை?
2. மேனாட்டு மருத்துவ அறிஞர்கள் நகையைப்பற்றி யாது கூறியுள்ளார்?
3. அரசன் அவையில் நகைச்சுவை அறிஞன் இருத்தல் வேண்டும். ஏன்?
4. வீரபாலன், தெனாலி ராமலிங்கம் என்பவர் யாவர்?
5. கடிகை முத்துப் புலவர் நகைச்சுவைபடப் பேசியவர் என்பதற்குச் சான்று யாது?
6. 'பாலும் கசக்கவில்லை, கந்தையும் கசக்கவில்லை'— இதனின் நகைச் சுவை எங்கு அமைந்துள்ளது?
7. சிவகங்கை அரசர் நகைச்சுவைப்படப் பேசியது யாது?
8. சிங்கவனப் புலவர் புலிக்குட்டிக் கவிராயர் இறுமாப்பை எங்ஙனம் நகைச்சுவைப்பட அடக்கினார்?

II. 1. வாக்கியங்களில் அமைக்க:—

நகைச்சுவை, ஈடுபட்டு, கூர்த்த அறிவு, ஏற்றவாறு, நயம்பட, செவிவழிச் செய்தி, தவறுதலாக.

2. எதிர்ச் சொல் கூறுக:—

இளைஞர், சிரிப்பு, குறுநில மன்னர், அறிஞன், அறிவு நுட்பம்.

## 9. கூட்டுறவுப் பண்டசாலைகள்

1. நாம் நம்வீட்டுக்குத் தேவையான பொருள்களைச் சில்லறைக் கடைகளில் வாங்குகிறேம். அச்சில்லறை வாணிகர் அப்பொருள்களைப் பெரிய வாணிகரிடம் வாங்கி நமக்கு விற்கின்றனர். பெரிய வாணிகர் அவற்றை உண்டாக்குபவரிடம் வாங்குகின்றனர். இங்ஙனம் ஒவ்வொரு பொருளும் அதனை உண்டாக்குபவரிடமிருந்து நம்மிடம் வந்து சேருவதற்குள் பல கைகளில் மாறுகின்றது. ஒவ்வொரு வாணிகரும் சிறிதளவு இலாபம் வைத்துக் கொள்ளினும் பொருளின் விலை மிகுதிப்படுகின்றது.

2. ஒவ்வொரு கடைக்காரரும் தமது உழைப்புக்காகச் சிறிதளவு இலாபம் பெறுதல் நேர்மையானது. ஆயின் பெரும்பாலான வாணிகர் அங்ஙனம் இல்லை; எவ்வளவு மிகுதியாக விலையேற்றி விற்கக் கூடுமோ அந்த அளவுவரை விலையேற்றி விற்றுப் பொருளீட்டுகின்றனர். அவர்கட்கு வாங்குபவரிடம் இரக்கமோ அன்போ கடுகளவும் இல்லை; சுருங்கக்கூறின், வாணிகருட் பெரும்பாலோர் தந்நலமே உருக்கொண்டவராக இருக்கின்றனர்.

3. இத்தகைய பொறுப்பற்ற வாணிகரிடம் மிகுந்த விலை கொடுத்துப் பண்டங்களை வாங்குதலை விடப் பொருள்களை உண்டாக்குபவரிடமிருந்து நாமே நேரில் வாங்குவோமாயின் குறைந்த விலைக்கு வாங்குதல் கூடும் அல்லவா? நாம் ஒவ்வொருவரும் அவ்வாறு வாங்குவதாயின் மிகுந்த பொருட்செலவு ஏற்படும். ஆயின், பலர்சேர்ந்து முதல் போட்டு இம்முயற்சியில் இறங்குவராயின், எல்லோரும்


நன்மை பெறுவர். இங்ஙனம் பலர் கூட்டுறவு கொண்டு பொருள்களை வரவழைத்து விற்பனை செய்யும் கடைகளே **கூட்டுறவுப் பண்டசாலைகள்** எனப் பெயர் பெறும்.

4. ஒரு கிராமத்தில் நூறு பேர் ஒரு கழகத்தை ஏற்படுத்துகின்றனர்; ஒவ்வொருவரும் நூறு ரூபாய் முதல் போடுகின்றனர்; அதனால் முதல் தொகை பதினாயிரம் ரூபாய் சேர்கின்றது. அவர்கள் அதைக்கொண்டு தம் கிராமத்தில் பெரிய கூட்டுறவுக் கடை ஒன்றைத் திறக்கின்றனர்; கடைக்குத் தேவையாகும் பொருள்களை அவை உண்டாக்கப்படும் இடங்களிலிருந்தே வரவழைக்கின்றனர்; அப்பொருள்களின் உண்மை விலையும் அவற்றைக் கொண்டுவர உண்டான செலவும் குறைந்த அளவு இலாபமும் சேர்த்துப் பொருள்களின் விலையாக வைத்து விற்கின்றனர்.

5. பண்டசாலையை நடத்துவோர் யார்? பண்டசாலையைத் தோற்றுவிக்க முதல் கொடுத்தவரே அதனை நடத்துகின்றவர். நூறுபேர் முதல் கொடுத்தவராயின், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அல்லது இருவர்—அவரும் முதல் கொடுத்தவரே—பண்டசாலையைப் பார்த்துக் கொள்வர். வேறு ஒருவர் அல்லது இருவர் பொருள்களை வாங்கும் வேலையைக் கவனித்துக்கொள்வர். இரண்டு மூன்று உறுப்பினர் கணக்கு முதலியவற்றைக் கவனித்துக் கொள்வர்.

6. இங்ஙனமாகப் பண்டசாலையை அதன் முதலாளிகளே நடத்துகின்றனர். அத்துடன் அதனில் பண்டங்களை வாங்குவோருட் பெரும்பாலரும் அம் முதலாளிகளே ஆவர். ஊர் மக்களும் பிறரும்

பொருள்களை வாங்கிப் பயன்பெறலாம். உறுப்பினரைத் தவிர மற்றவர் வாங்கினும் வாங்காவிடினும் கடை முதலாளிகட்குக் கவலை இல்லை. மாதா மாதம் உறுப்பினர் இவ்வளவு வாங்குவர் என்னும் ஓர் அளவு ஏற்படுவதால், அவ்வளவுக்கும் மிகுதியாகக் கடையில் பொருள்கள் தேங்கி இரா. தனிப்பட்டவர் கடையைப் பெரும்பாலும் ஒருவர் மற்றவர்க்கு அறிமுகம் செய்யார். ஆயின் கூட்டுறவுக் கடையை ஒருவர் தம் நண்பர் பலருக்கும் அறிமுகம் செய்து வைப்பார்.



கூட்டுறவுப் பண்டசாலை

7. தனிப்பட்டவர் கடைகளில் கடன் வியாபாரமும் நடைபெறுகிறது. கடன் பெறுவோருட் பலர் திங்கள்தோறும் அக்கடனைத் தீர்த்துவிடுவர்; சிலர் மோசம் செய்ய, இடம் மாறிவிடுவதும்

உண்டு. இவ்வாறு நஷ்டம் ஏற்படினும் அது தங்களைப் பாதிக்காமல் இருக்க, வியாபாரத்தில் எல்லாப் பொருள்களையும் மிகுந்த விலைக்குத்தான் அந்த வியாபாரிகள் கொடுக்கிறார்கள். கூட்டுறவுப் பண்டசாலைகளில் கடன் வியாபாரம் இல்லை; விலையேற்றமும் இல்லை.

8. தனிப்பட்டவர் கடைகளில் எல்லா வேலைகட்கும் சம்பள ஆட்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்நியமனத்தால் செலவு மிகுதிப்படுகிறது. அச்செலவு பொருள்களின் விலைமீது ஏற்றப்படுகிறது. ஆயின் கூட்டுறவுக் கடைகளில் முன் சொன்னவாறு உறுப்பினர்களே பெரும்பாலான வேலைகளைச் செய்கின்றனர். அவர்கள் குறைந்த செலவிலேயே பல வேலைகளைச் செய்து முடிக்கிறார்கள். ஒருவர் அல்லது இருவர் சம்பள ஆட்களாக இருக்கலாம்.

9. நாம் கூட்டுறவுப் பண்டசாலைகளில் வாங்கும் பொருள்களின் தொகை கணக்கு வைக்கப்படுகிறது. ஆறு மாதம் கழித்தோ, ஓர் ஆண்டு கழித்தோ பண்டசாலையின் கணக்குப் பார்க்கும் பொழுது வரும் இலாபம் பொருள் வாங்கிய அளவுக்கேற்பப் பங்கிட்டுத் தரப்படும். இது நமக்கு வரும் புதிய இலாபந்தானே!

10. கூட்டுறவுப் பண்டசாலைகள் குறைந்த விலையில் நல்ல பொருள்களை விற்பதனால் அப்பண்டசாலைகட்குப் பக்கத்தில் உள்ள தனிப்பட்ட கடைக்காரரும் தம் பொருள்களை ஓரளவு நியாயமான விலைக்கு விற்க முயல்கின்றனர். இது கூட்டுறவுப் பண்டசாலைகளால் பொது மக்கட்கு உண்டாகும் நன்மை என்னலாம்.

11. தொழிலாளராகிய ஏழை மக்கட்குக் கூட்டுறவுப் பண்டசாலைகள் பல நன்மைகளைச் செய்து வருகின்றன. அவற்றுள் ஒன்று, பணம் கொடுத்தே பொருள்களை வாங்கும் பழக்கத்தை உண்டாக்கி விடுதல் ஆகும்; சிக்கனத்தைப் பரவச் செய்து பணம் சேர்க்கும் பழக்கத்தை உண்டாக்கியிருத்தல் இரண்டாம் நன்மை ஆகும். பலரும் முதல் போட்டிருத்தலால் கூட்டுறவு முறையில் பலரும் பழகவும் நாகரிகமாக நடந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டிருத்தல் மூன்றும் நன்மையாகும். தொழிலாளரே பண்டசாலையைத் திறந்து கட்டுத்திட்டங்கட்கு அடங்கிய முறையில் தொழில் செய்தல், தவறி நடப்பவரை உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்குதல், புதிய உறுப்பினரைச் சேர்த்தல், உறுப்பினர் ஒன்றுகூடிக் கணக்குகளைப் பார்த்தல், நடைமுறைகளைக் கவனித்தல் ஆகிய பலவற்றிலும் பழக்கப்படுமாறு செய்வது நான்காம் நன்மையாகும்.

12. கூட்டுறவுப் பண்டசாலைகள் பெரிய அளவில் வேலை செய்யுமாயின் ஓர் ஊரில் அல்லது நகரத்தில் அவற்றின் இலாபத்தில் ஒரு பகுதிகொண்டு பொதுப் பள்ளிகளை வைத்து நடத்தலாம்; கூட்டுறவைப் பற்றிய நூல்களை வெளியிட்டு நாட்டில் பரப்பலாம்; பொதுமக்கள் அறிவு வளர்ச்சிக்காகப் பல நூல் நிலையங்களை வைத்து நடத்தலாம்; செய்தித் தாள்களை வரவழைத்துப் பொதுப் படிப்பகங்களை ஏற்படுத்தலாம். இவ்வாறு பல நன்மைகளைச் செய்யலாம்; ஒற்றுமையே வேண்டப்படுவது.

## அருஞ்சொற்பொருள்

பண்டம்=பொருள். பண்டசாலை=பொருட்கடை. படிப்பகம்=வாசகசாலை.

## பயிற்சி

I. விடை தருக :—

1. நாம் வாங்கும் பொருள்கள் எவ்வாறு பல கைகளுக்கு மாறுகின்றன? அம்மாற்றத்தின் பயன் என்ன?
2. பொதுவாக வாணிகர் எவ்வாறு இருக்கின்றனர்?
3. கூட்டுறவுப் பண்டசாலைகள் எவை?
4. கூட்டுறவுப் பண்டசாலைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன?
5. இப்பண்டசாலைகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன?
6. இப்பண்டசாலைகளால் உறுப்பினர் அல்லாதவர்க்கும் நன்மை உண்டாகிறது—எப்படி?
7. கூட்டுறவுப் பண்டசாலைகள் தொழிலாளருக்குச் செய்து வரும் நன்மைகள் எவை?
8. இவை பெரிய அளவில் செய்யப்படுமாயின், பொது மக்கட்கு விளையும் நலன்கள் யாவை?

II. 1. வாக்கியங்களில் அமைக்க :—
கூட்டுறவு, பண்டசாலை, படிப்பகம், நூல்நிலையம், விலையேற்றம்.

2. எதிர்ச் சொல் கூறுக :—
சிற்றூர், விலையேற்றம், மிகுந்த, முதலாளி.

## 10. கங்கைகொண்ட சோழன்

1. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் தென்னிந்தியாவை ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்ட முதலாம் இராஜராஜ சோழன் அருமை மகனே முதலாம் இராஜேந்திர சோழன் என்பவன். அவன் சிறந்த போர்வீரன்; தமிழிற் புலமை பெற்றவன். அவன் இளவரசனாக இருந்தும் சேனைத்தலைவனாக இருந்தும் அரசியல் அறிவும் போர்க்கலை அறிவும் நிரம்பப் பெற்றிருந்தான். அவன் கி. பி. 1012 முதல் 1044 வரை சோழப் பேரரசனாக இருந்தான். அக்காலத்தில் அவன் செய்த அருஞ்செயல்கள் இரண்டு. அவற்றுள், கங்கை நீரைக் கொண்டுவரச் சென்று, எதிர்த்த வடநாட்டு வேந்தரை வென்று, கங்கை நீருடன் மீண்டு, 'கங்கை கொண்ட சோழன்' எனப் பெயர் பெற்றது ஒன்று; கடற்படை கொண்டு மலேயா, சையாம், சுமத்ரா, ஜாவா முதலிய கடல் கடந்த நாடுகளை வென்றமை மற்றொன்று. இவ்விரு வெற்றிகளும் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவையாகும். இவற்றுள் முதற் செயல் இப்பாடத்தில் விளக்கமாகத் தரப்படும்.

2. தன் தந்தை தஞ்சாவூரிற் கட்டிய பெரிய கற்கோவிலைப் போன்ற ஒரு கோவிலைக் கட்ட இராஜேந்திரன் விரும்பினான்; அதனை ஒரு புதிய நகரத்தில் அமைக்க எண்ணினான். அப்புதிய நகரத்தையே தன் தலைநகராகக் கொள்ளவும் முடிவு செய்தான்; அந்நகருக்கு உரிய இடத்தைத் தேடினான். அவன் தன் தந்தை அமைத்த ஜயங்கொண்ட சோழபுரத்துக்கு ஐந்து கல் தொலைவில் இருந்த பெருங்காட்டை அழித்தான்; நிலத்தைப்


பண்படுத்தினான். அந்நிலத்தின்மீது கங்கை நீரைத் தெளித்து அதனைத் தூய்மை செய்தல் நல்லது என்று அறிஞர் யோசனை கூறினர்.

3. பத்தினியின் படிவம் சமைக்க இமயமலையிலிருந்து கல்லைக்கொண்டுவரச் சேரன்-செங்குட்டுவன் வடநாடு சென்றாற்போல, இராஜேந்திரன் தான் கட்ட விரும்பிய நகர இடத்தைத் தூய்மை செய்ய, கங்கை நீர் வேண்டுமென்று தன் பெரும் படையை வடக்கு நோக்கிச் செல்லவிடுத்தான். மிக்க அநுபவம் வாய்ந்த படைத்தலைவன் அப் பெரும்படைக்குத் தலைவனாகச் சென்றான்.

4. சோழப் பேரரசனால் வாழ்த்தி அனுப்பப் பட்ட பெரும்படை இராஜராஜ சோழன் காலமுதல் பல போர்களில் வெற்றி பெற்றதாகும். அப்படை கங்கையை நோக்கிச் சென்றது. வழியில் இருந்த பல நாட்டு அரசர்கள், முன்னரே சோழன் பெற்ற பெரு வெற்றிகளிற் பொறாமை கொண்டவர் ஆதலின், சோழப்படையை அங்கங்கே தாக்கினர் ; பகலவனுக்கு எதிர்ப்பட்ட பனிப்படலம் போலப் போருக்கு ஆற்றாது சிதறி ஓடி மறைந்தனர். சோழப்படை வீறுகொண்டு மேலே சென்றது. அது மேற்கு வங்காளத்தை அடைந்தபொழுது, அந் நாட்டை ஆண்டுவந்த 'பால'மரபினனான மகிபாலன் என்பவன் தன் சிற்றரசருடன் வந்து எதிர்த்தான்; தன்னால் இயன்றவரை போரிட்டான்; முடிவில் தோற்றுச் சிறைப்பட்டான்.

5. பின்னர்ச் சோழப்படை கங்கை ஆற்றை அடைந்தது ; பல பொற்குடங்களில் கங்கைநீரை நிரப்பிக்கொண்டது ; தோற்ற மன்னர்கள் முடிமீது பேரரசன் ஆணைப்படி அக்குடங்களை வைத்துத்

திரும்பியது. தனது பெரும்படையின் வெற்றி மீட்சி யைக் கேள்வியுற்ற இராஜேந்திரன் மிக்க மகிழ்ச்சி




யுற்று, அப்படையை வரவேற்க வேங்கைநாடு சென் ருன். அப்பெருமானைக் கண்ட சோழப் படை வீரர் வெற்றிமுழக்கம் செய்தனர். அரசன் அவர்களைப்

பாராட்டி அழைத்து வந்தான்; வரும் வழியில் பல இடங்களில் தங்கித் தானதருமங்கள் செய்வித்தான். கோவில்களில் சிறப்புப் பூசைகள் செய்தான்.

6. அவன் தான் நகரத்தை அமைக்க இருந்த இடத்தில் கங்கை நீரைத்தெளித்து மகிழ்ந்தான்; அவ்விடத்தில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரத்தை அமைத்தான்; அப்பெருநகரின் நடுவில் தன் அரண்மனையை அடுத்துத் தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்றதொரு பெரிய சிவன் கோவிலைக் கட்டினுன்; அதற்குக் கங்கைகொண்ட சோழேசுவரம் என்று பெயரிட்டான்; நகரத்தை அடுத்து மிகப் பெரிய ஏரியை உண்டாக்கினுன்; அதனில் கங்கைநீரைக் கலந்தான்; அதற்குச் சோழ கங்கம் என்று பெயர் வழங்கினுன்.

7. இராஜேந்திரன் கங்கை நீரைக் கொண்டு வந்த காரணத்தால் கங்கைகொண்ட சோழன் என்றும் கங்கைகொண்டான் என்றும் அழைக்கப்பட்டான். வடநாட்டு வெற்றிக்குப் பிறகு, தமிழ் நாட்டில் பல கோவில்கட்கு முன்னர், 'கங்கை கொண்டான்' என்ற பெயரால் மண்டபங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் ஒவ்வொன்றும் 'கங்கை கொண்டான் மண்டபம்,' எனப் பெயர் பெற்றது. நமது நாட்டில் பல ஊர்களில் இப்பெயர் கொண்ட மண்டபங்கள் இன்றும் இருந்து வருதலைக் காணலாம். கங்கை கொண்டானுல் அமைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் சோழப்பெருநாட்டின் தலைநகரமாக இருந்தது. பின்னர்ப் பாண்டியர் படையெடுப்பினுலும் கவனிப்பார் இன்மையாலும் சிதைவுற்றது; கோவில் மட்டும் அழிந்தநிலையில் காணப்படுகிறது;

சோழ கங்கம் மேடிட்டுக் கவனிப்பார் இன்றிக் கிடக்கின்றது.

8. சோழப் பேரரசருள் இராஜேந்திரனுக்கு இணையானவரைக் காண்பது அரிது. சங்க காலத்திற் கரிகாற் சோழன் சோழப் பேரரசனாக விளங்கினான்; இடைக்காலத்தில் இராஜேந்திரன் இணையற்ற பேரரசனாக இலங்கினான். அவனது வெற்றி தமிழர் வெற்றி ஆகும். தமிழர் போர்த் திறனையும் பேரரசினைக் கட்டி ஆளுந்திறனையும் வட நாட்டவரும் கிழக்கு நாட்டவரும் அறியச் செய்த பெருமை அப் பெருமகனுக்கே உரியதாகும். அவன் காலத்தில் தமிழர் வாழ்வு சிறந்திருந்தது. அவனுடைய போர்ச் செயல்களும் ஆட்சி முறையும் நம்மைப் பெருமை கொள்ளச் செய்வன. ஆதலின் அப்பெருமகனது முழுவரலாற்றையும் அறிவிக்கும் நூல்களைப் படித்துப் பயன்பெறுவது தமிழ் மாணவரது நீங்காக் கடமையாகும்.

அருஞ்சொற்பொருள்: போர்க்கலை = போர் செய்யும் முறைகள்; போர்க் கருவிகள் முதலியவை பற்றிய சாத்திரம். விழைந்தான் = விரும்பினான். புக்கனர் = புகுந்தனர். மாற்றான் = பகைவன். பகலவன் = சூரியன். இலங்கினான் = விளங்கினான்.

பயிற்சி

I. விடை தருக:—

1. இராஜேந்திரனாட்சியில் நடந்த அருஞ்செயல்களெவை?
2. படத்தைப் பார்த்துப் படைசென்று மீண்ட நாடுகளைக் குறிப்பிடுக.
3. சோழன் கங்கை நீரை எவ்வாறு பயன்படுத்தினான்?
4. இராஜேந்திரன் வரலாறு இணையற்றது என்பது எப்படிப் பொருந்தும்?
5. தமிழ் மாணவரது நீங்காக் கடமையாகும்—எது?


II. 1. வாக்கியங்களில் அமைக்க:—பேரரசு, போர்த்திறன், இணையற்ற, சுருங்கக்கூறின், தூய்மை, கடல்வாணிகம்.
2. எதிர்ச்சொல் கூறுக:— தூய்மை, மாற்றான்.

III. இராஜேந்திரன் படை செய்த வடநாட்டு யாத்திரையை அப்படைத்தலைவன் கூறுவது போலக் கூறுக.

# 11. நெற்பயிர்

1. எல்லாப் பயிர்களிலும் சிறந்தது நெற்பயிர். ஆதலின் 'நெற்பயிர் விளை' என்று ஔவையார் கூறினர். மக்கள் இனத்திற்கு உயிராக உள்ள நெல் எத்தனை வகைப்படும், அஃது எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது என்பவற்றைக் கவனிப்போம். நமது தமிழ்நாட்டு நெல் வகைகளுள் மிக உயர்ந்தது யானைக் கொம்பன் சம்பா என்பதாகும். அதற்கு அடுத்தபடியிற் சொல்லப்படுபவை சீரகச் சம்பா, தொப்பிச் சம்பா என்பன. இவற்றுக்கு அடுத்த படியில் கூறத்தக்கவை முத்துச் சம்பா, கருடன் சம்பா, நெல்லூர் சம்பா, வாசகச் சம்பா, ஆவாரம்பூச் சம்பா, கார்த்திகைச் சம்பா, விராலிச் சம்பா, சிறு மணியன், மிளகுச் சம்பா என்பன. மொழிக் கறுப்பன், மணல்வாரி, வெள்ளைக் கட்டை, சித்திரைக்கார், செங்கார், இரங்கல், குளியிடிச்சான், குழல் வாழை முதலியன பருநெல் வகையின.

2. நெற்பயிர் காலப் பயிர், கோடைப் பயிர் என இருவகைப்படும். சம்பா வகைகள் பெரும்பாலும் காலப் பயிர் வகையைச் சேர்ந்தவை. பரு நெல் வகைகள் பெரும்பாலும் கோடைப்பயிர் வகையைச் சேர்ந்தவை. காலப் பயிர்க்கு ஆவணி, புரட்டாசி மாதங்களே ஏற்றவை. கோடைப் பயிர்க்குச் சித்திரையும், வைகாசியும் ஏற்ற மாதங்கள் ஆகும். காலப்பயிர் விளைய ஆறு திங்கள் பிடிக்கும். கோடைப்பயிர் விளைய நான்கு திங்கள் செல்லும். இவை தவிர 'அறுபதாங் கோடை' என்று ஏறக் குறைய இரண்டு திங்களில் விளையும் நெற்பயிர்



நெற்பயிர்

உண்டு. அஃது 'இடைக் கோடை' எனப் பெயர் பெறும்.

3. சம்பா நெல்லை விதைத்து நாற்றைத் தயார் செய்ய நாற்றங்காலைப் பண்படுத்தி வைக்கவேண்டும். பிறகு நெல்லைப் பெரிய கொப்பரைப் பாத்திரங்களில் ஊறவைக்க வேண்டும். அவை ஊறிய பிறகு நீரை வடித்து, நெல் முளை கிளம்பும்படி வைக்கோலாற் சுற்றி மூடிவைக்க வேண்டும்; முளை கிளம்பும் பருவம் வந்ததும் நெல் விதையைக் கொண்டு சென்று நாற்றங்காலில் விதைக்க வேண்டும். விதைகள் சேற்றிற் பதிந்த பின்னர், நாற்றங்காலில் உள்ள தேவைக்கு மேற்பட்ட தண்ணீரைக் கழிவுவாய் மடை வழியாகப் போக்கி விடுதல் வேண்டும். நெல் முளை சேற்றில் வேரூன்றிப் பலப்பட்டுச் சில நாட்களில் பசுமை காட்டத் தொடங்கும். அப்பொழுது வயலில் சிறிதளவு தண்ணீரை நிறுத்தி வைக்கவேண்டும். நாற்று அழுகிக் கெட்டுப் போகாவண்ணம் அடிக்கடி நீரை வயலிலிருந்து எடுத்தெடுத்து விடவேண்டும். பின்னர் நாற்றுத் தலை நிமிர்ந்து வளர வளரத் தண்ணீரைப் பக்குவமாய் நிறுத்திவைத்தல் நல்லது. இவ்வாறு கவனித்துவரின் நாற்பத்தைந்து நாட்களுக்குள் நாற்று வளர்ந்து பக்குவம் பெறும். ஒன்றரை மாதத்திற்கு மேல் நாற்றை வளரவிடின் முற்றிக் கெட்டுவிடும். முற்றின நாற்றை நட்டால் நல்ல பயன் உண்டாகாது.

4. நாற்று பக்குவப்பட்டு வரும்பொழுதே அதனை நடுவதற்கு உரிய வயலை நன்றாக உழ வேண்டும். அங்ஙனம் உழுதல் 'சேற்றுழவு' எனப் பெயர் பெறும். நிலம் பலமுறை உழுது பக்குவம்

செய்யப்பட வேண்டும். பொதுவாக உழவர் நான்கு அல்லது ஐந்து முறை உழுது பச்குவப்படுத்துவர்; 'அகலவுழுவதினும் ஆழ வுழு' என்னும் பழமொழிக்கு ஏற்ப ஆழமாக உழுவர்; பின்னர் இரண்டு உழவு போட்டுப் பரம்படிப்பர். மேடு பள்ளங்களைச் சமப்படுத்திப் புல் பூண்டுகளை நீரில் அழுகச் செய்தற்குச் சாதனமாக இருப்பதே பரம் படிப்பு என்பது. அதனுல் உழவை விடப் பரம் படித்தல் சிறப்புடையது ஆகும். இதனுற்ருன் 'எட்டேர் உழவும் சரி, ஒரு பொட்டைப் பரம்பும் சரி' என்று உழவர் கூறுவர்.

5. இங்ஙனம் வயலை நன்ருக உழுது பரம் படித்த பிறகு, பசுந்தழைகளை உரத்திற்காகப் போட்டு அவை சேற்றில் மறையும் வரை உழவர் அவற்றை மிதிப்பர். அங்ஙனம் போடப்படும் தழைகளுள் ஆவாரந்தழை மிக்க உரமளிக்க வல்லது. 'ஆடு பயிர் காட்டும், ஆவாரை நெற்காட்டும்' என்பது பழமொழி. ஆவாரை இல்லாத இடங்களில் கொழுஞ்சி, எருக்கு, ஆதாளை, புரசை முதலிய தழைகள் பயன்படுத்தப்படும். உழவர் ஒரு போகம் அறுவடையான நிலத்தில் மாசி, பங்குனி மாதங்களில் இத்தழை வகைகளைப் பயிராக்கி விடுவர்; அவை வளர்ந்து செழித்த பிறகு அவற்றுடனே நிலத்தை நன்ருக உழுது இரண்டாம் போகத்துக்கு உரிய நாற்றை நடுவர். இம் முறையினுல் இரு போக விளைவு ஒரு போகத்திற் கிடைக்கும்; அரிசியும் மிக்க சுவையுள்ளதாக இருக்கும். இங்ஙனம் வயலைப் பலவாறு பக்குவம் செய்த பின்னர், அவ் வயலில் நாற்று நடப்படும்.

6. சில நாட்களுக்குப் பின் நாற்று வேரூன்

றிப் பசுமை நிறம் காட்டி அரும்புபோலத் தோகையை நீட்டிக்கொண்டு நிற்கும். உழவர் பயிருக்குத் தேவையான அளவு தண்ணீரை வயலில் விட்டு வைப்பர். 'நீர் உயர நெல் உயரும்' என்பது அவர் கூறும் பழமொழி ஆகும். வயலில் உள்ள சத்துப்பொருள் எவ்வாறு பயிருக்குச் செல்கிறது? நெற்பயிரின் தண்டு கவனிக்கத் தக்கது; அது கனமற்றது; ஆயின் பலம் உடையது. அதனுல் அது காற்றினுல் அலேப்புண்டு நிற்கவும் நெல் மணிகளேத் தாங்கவும் முடிகிறது. தண்டு குழல் வடிவாக அமைந்துள்ளது; இடையிடையே நுண்ணிய துளேகளேக் கொண்ட கணுக்களேப் பெற்றுள்ளது. இக்கணுக்களின் உதவியாற்றுன் நெல் தாள் நான்கு அல்லது ஐந்து அடிவரை வளர்ந்து வன்மைபெற்று நிற்கின்றது. வயலில் உள்ள சத்துப் பொருளும் நீரும் குழை வடிவத் தண்டின் வழியே மேல் நோக்கிச் செல்லுகின்றன; கணுக்களின் நுண்ணிய துளேகளால் வடிகட்டப்பட்டுக் கதிரில் உள்ள நெல்மணிகட்கு உணவாகின்றன. கதிர் நன்கு முற்றிப் பக்குவம் பெற்ற பின்னர்க் கணுக்கள் சுருங்கி நுண்ணிய துளேகள் அடைபட்டு விடும். அதன் பிறகு நெல்மணிகட்கு வேண்டும் சத்துப் பொருளும் நீரும் மேல் நோக்கிச் செல்ல இயலாது.

7. மேற்சொன்ன கணுக்களின் இரு பக்கங்களிலும் இரண்டு தோகைகள் நீண்டு விரிந்திருக்கும். அவை பனித் துளிகளேச் சேர்த்துக் கணுக்களின் நுண்ணிய துளேகள் வழியே கதிருக்கு உணவளிக்க உதவுகின்றன. இத்தகைய தோகைகள் இரண்டு கதிரைச் சுற்றியும் இருக்கும். அவை கதிரைச் சிறிது காலம் காக்க அமைந்தவையாகும்.

கதிர் முற்றத் தொடங்கியதும் அத்தோகைகள் உலர்ந்து இறுதியில் உதிர்ந்துவிடும். அவை வீழ்ந்த பின்னரே கதிர்கள் நன்ருக முற்றத் தொடங்கும்.

8. நெற்கதிர் முற்றிப் பக்குவம் பெற்ற பிறகு, உழவர் அதனை அறுத்துக் கட்டிக் களங்களிற் கொண்டு வந்து சேர்ப்பர்; பின்னர்க் கதிர்களைத் தலையடி அடித்து, நெல்லைப்பிரித்து, வைக்கோலைப் போராகப் போடுவர்; பிறகு மாடுகளை விட்டுப் போரடித்துத் தலையடியில் உதிராமல் இருந்த நெல் மணிகளைப் பிரித்து எடுப்பர். அதன் பிறகு நெல்லைத் தூற்றிக் காயவைத்துக் களஞ்சியங்களிற் சேர்ப்பர்; கோணிப்பைகளிற் போட்டுத் தைப்பர்; வைக்கோலைப் பெரும் போராகப் போட்டு வைப்பர். வைக்கோல் மாடுகட்கு உணவாகும்; கூரைவீடுகள் மீது போடப் பயன்படும்.

9. தமிழ் நாட்டவராகிய நமக்கு நெல்லே சிறந்த உணவுப் பொருளாகும். தானிய வகைகளில் நெல்லே தலைமை பெற்றது. நெல் விளைச்சல் குறையுமாயின் நாட்டில் உணவுப் பஞ்சம் தோன்றும். ஆதலின் பொறுப்புள்ள அரசாங்கம் பயிர்த் தொழிலை வளர்க்கப் பல துறைகளில் முற்படவேண்டும். இதுவரை பயிர் செய்யப்படாத நிலங்களை எளிய மக்கட்குக் கொடுத்து நீர்ப்பாசன வசதிகள் அளித்து அவற்றை விளைநிலங்களாக மாற்ற முயலவேண்டும். நம் அரசாங்கத்தார் இம் முயற்சியில் ஓரளவு ஈடுபட்டிருத்தல் பாராட்டத்தக்கது.

அருஞ்சொற்பொருள்

திங்கள், மாதம் = ஒரு பொருட் சொற்கள். கொப்பரை = அண்டா. ஆவாரை = ஆவாரஞ் செடி. கொழுஞ்சி = கொள்

ளுக்காய்; வேளை என்னும் ஒருவகைச் செடி. ஏற்ப=பொருந்த. பொட்டைப் பரம்பு=சமமாகும்படி பரம்புப் பலகையால் நிரவுதல். பொட்டை=சமப்படுத்தல். பரம்பு=உழுத வயலைச் சமப்படுத்தும் பலகை. தட்பம்=குளிர்ச்சி. வெப்பம்=சூடு. தலையடி=முதல் அடி.

### பயிற்சி

I. விடை தருக :—

1. நெல்லின் பலவகைப் பெயர்கள் யாவை?
2. காலப் பயிர், கோடைப் பயிர், அறுபதாங்கோடை என்பன யாவை?
3. நாற்றங்கால், சேற்றுழவு, பரம்படிப்பு—விளக்குக.
4. உழவர் எவ்வாறு நாற்றைத் தயாரிக்கின்றனர்?
5. நடவுக்கு முன் வயல் எவ்வாறு பக்குவப்படுத்தப்படும்?
6. பயிருக்கு உணவு எவ்வாறு செல்கிறது?
7. தோகைகள் என்பன யாவை? அவற்றின் பயன் என்ன?
8. உழவர்கள் எவ்வாறு நெல்லை வேருகவும் வைக்கோலை வேருகவும் பிரிக்கின்றனர்?
9. பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமை யாது?

II. 1. இப்பாடத்தில் வந்துள்ள உழவைப் பற்றிய பழமொழிகளைக் கூறுக.

2. உழவைப் பற்றிய வேறு பழமொழிகளுள் நான்கினைக் கூறுக.

III. நாற்று விடுதல், நாற்று நடவும் பயிரும், அறுவடை: இக் குறிப்புக்களைக் கொண்டு நெற்பயிர் பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 12. புலவர் குண நலன்கள்

## I. தம்மைப் போன்ற புலவரைக் காத்தல்

1. சங்க காலச் சோழ மன்னருள் சோழன் நலங்கிள்ளி என்பவன் ஒருவன். அவன் பங்காளி சோழன்-நெடுங்கிள்ளி என்பவன். அவ்விருவரும் எக் காரணம் கொண்டோ தமக்குள் போரிடத் தொடங்கினர். நெடுங்கிள்ளி நலங் கிள்ளியின் படைக்கு ஆற்ருமல் ஒடி, திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள உறையூரில் இருந்த கோட்டைக்குள் புகுந்துகொண்டான். நெடுங் கிள்ளியால் கைவிடப் பட்டதும் மாயூரத்தை அடுத்திருப்பதும் ஆகிய ஆவூரில் நலங்கிள்ளி தங்கி யிருந்தான்.

2. அப்பொழுது இளந்தத்தர் என்ற புலவர் பெருமான் வறுமைக் கொடுமையால் வாட்டமுற்றுப் பொருள் வேண்டி நலங்கிள்ளியை நாடினர்; பைந் தமிழ்ப் பாக்களைப் பாடி அவன் மனத்தை மகிழ் வித்தார். தமிழ்ப்பாடலுக்கு இரங்கும் பெரு வீர ஞன நலங்கிள்ளி, இளந்தத்தருக்கு வேண்டிய பொருள்களை ஈந்து மகிழ்ந்தான். புலவர் அவனை வாயார வாழ்த்தி விடைபெற்று நேரே உறையூரை அடைந்தார்; கோட்டைக்குள் இருந்த நெடுங் கிள்ளியைக் கண்டு தம் வறுமையை விளக்கமாக உரைத்தார்; தாம் ஆவூரிலிருந்து வந்ததையும் அறிவித்தார். அச்சத்தையே அணிகலனுகக் கொண்டிருந்த நெடுங்கிள்ளி, அப்புலவர் நலங் கிள்ளியால் ஏவப்பட்டவர் என்றும், ஒற்றறிய வந்தவர் என்றும் தவருக எண்ணினுன்; அதனுல் அவரைக் கொல்லத் துணிந்தான்.

3. நெடுங்கிள்ளியின் துணிவைக் கோவூர் கிழார் கேள்வியுற்ருர். அவர் அக்காலத்திற் சீரும் சிறப்பும் பெற்ற பெரும் புலவர் ; தமிழ் நாட்டுப் பேரரசர்களையும் சிற்றரசர்களையும் நன்கு அறிந் தவர் ; அஞ்சா நெஞ்சினர் ; அரசர்க்கும் அறிவுரை புகட்டும் ஆண்மையாளர். நேரிய ஒழுக்கமுள்ளவர். ஆதலின் அவரை மன்னர் அனைவரும் மதித்துப் போற்றினர். அவர் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள் ளிக்கும் இருந்த பகைமையைப் போக்க விரும் பியவர் ; அவ்வமயத்தில் முன் சொன்னவாறு நெடுங்கிள்ளி புலவர் ஒருவரைக் கொல்லத் துணிந் தான் என்பதைக் கேள்வியுற்றதும் திடுக்கிட்டார். அவர் பிறர் துன்புறுதலைக் காணப்பொருத உத்த மர் ஆதலின் நெடுங்கிள்ளியினிடம் காற்றெனக் கடிதிற் சென்ருர். வேந்தன் மலர் முகத்துடன் அவரை வரவேற்று உபசரித்தான்.

4. கோவூர் கிழார் அவனை அன்புடன் பார்த்து, "ஐயனே, இளந்தத்தர் என்போன்ற தமிழ்ப் புலவர். இவரை ஒற்றர் என்று எண்ண வேண்டா. இவர் தம் வறுமையைப் போக்க நலங் கிள்ளியிடம் சென்ருர். வழியில் உன்னைக் கண்டு ஏதேனும் பெற்றுச் செல்லலாம் என்ற எண்ணத் தால் இங்கு வந்தவராவர். உங்கள் இருவருக்கும் உள்ள பகையை இவர் அறியாதவர் ; கள்ளம் கபடு அற்ற தூய உள்ளத்தினர். பழுத்த மரங்கள் நெடுந் தூரத்தில் இருப்பினும் கிளிகளும் வௌவால்களும் அவற்றை நாடிச் செல்கின்றன அல்லவா ? அவற் றைப் போலவே நின்போன்ற வள்ளல்கள் எங்கு இருப்பினும் எம்போன்ற புலவர்கள் தேடிச் சென்று கண்டு பரிசில் பெறுதல் வழக்கமாகும். வறியவர்

நெடுந் தொலைவையும் வழியின் துன்பங்களையும் கருதார்; கொடையாளிகளைக் குறுகித் தம்மால் இயலும்வரை தமது புலமையை வெளிப்படுத்திப் பரிசில் பெற்று மீள்வர்; மீண்டு, தாமும் உண்டு தம் சுற்றத்தையும் உண்பிப்பர். அவர்கள் தாம் பரிசிலாகப் பெற்ற பொருளைத் தமக்கென்று பாது காவாமல், தம்மினும் எளியாரைக் கண்டவிடத்து ஈந்து மகிழும் இயல்பினராவர்; தம்மைப் பாது காக்கும் வள்ளல்களால் மதிக்கப்படுதல் ஒன்றையே பெரிதாகக் கருதுவர். அவர்கள் பிறர்க்குத் தீங்கு செய்ய ஒருபோதும் நினையார். தம்மைக் கல்வி யால் எதிர்ப்பவரை மட்டுமே வென்று வீறுகொண்டு விளங்குவர். ஆதலின், இத்தகைய புலவரது கல்விப் பொருளும் நினது செல்வப் பொருளும் ஏறத்தாழச் சமமேயாகும். இவற்றை எல்லாம் ஆராயாது இவ்வெளிய புலவரைக் கொல்லக் கருதி யது நினது பெருமைக்கு ஏற்றதன்று. இவரை இன்னே விட்டு விடுக,'' என்று தெளிவாகவும் உருக்கமாகவும் அழுத்தமாகவும் உரைத்தார். நெடுங்கிள்ளி மனம் இளகியது; தான் அறியாது செய்யத் துணிந்த செயலை எண்ணி வருந்தினான்; புலவரை விடுதலை செய்து அவர் மனம் மகிழும்படி பரிசில் வழங்கி விடை கொடுத்தான். அப்பொழுது கோவூர் கிழார் முகம் அன்று அலர்ந்த செந்தாமரை மலரினை வென்றது.

## II. பழகாத நண்பருடன் உயிர் விடுதல்

5. சங்க காலத்தில் உறையூரைத் தலைநக ராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்ட அரசருள் கோப்பெருஞ் சோழன் என்பவன் ஒருவன்.

அவன் குடிகளைத் தன் உயிராகக் கருதிப் பாது காத்து வந்தான்; முத்தமிழ்ப் புலவர்களை முழு மனத்துடன் ஆதரித்துவந்தான். அவன் சிறந்த ஒழுக்கமும் பரந்த நோக்கமும் உடையவன். ஆதலின் அவனுடைய நல்லியல்புகள் சேர, பாண்டிய நாடுகளிலும் பரவியது.

6. அப்பொழுது பாண்டிய நாட்டுப் பிசிர் என்ற ஊரில் ஆந்தையார் என்ற புலவர் இருந்தார். அவர் சோழனுடைய நல்லியல்புகளைப் புலவர் பலர் வாயிலாகக் கேள்வியுற்றார்; அவனைத் தாம் பார்த்துப் பழக விரும்புவதாகப் புலவர்களிடம் பகர்ந்தார். பிசிராந்தையார் ஒழுக்கத்தை விழுக் கலனாகப் பூண்டவர்; சிறந்த தமிழ்ப் புலவர்; பொறுமை, அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களை ஒருங்கே பெற்றவர். ஆதலின் அப்புலவரின் பெயர் மூன்று தமிழ் நாடுகளிலும் பரவியது. கோப்பெருஞ் சோழன் அவரைக் கண்டு அளவளாவ ஆவல் கொண்டான். பிசிராந்தையாரும் சோழனைக் கண்டு அவனது அன்பைப் பெறவேண்டும் என்று அவாவினார். ஆயினும் இருவரும் சந்திக்க வாய்ப்பு நேராதிருந்தது.

7. இந்நிலையில் கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்கட்கும் மனவேறுபாடு உண்டாயிற்று. அதனால் அரசன் புலவர் அறிவுரைப்படி அரசைத் துறந்து, வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான்; ஆற்றிடைக் குறையில் இருந்து ஒரு மர நிழலில் தங்கி உண்ணா நோன்பை மேற்கொண்டான். புலவரும் நாட்டுப் பெருமக்களும் அரசனைச் சூழ்ந்திருந்தனர். அப்பொழுது அரசன் அவர்களைப் பார்த்து, "என் உயிர் நண்பரும் பாண்டிய நாட்டுப் புலவ

ரும் ஆகிய பிசிராந்தையார் இங்கு வருவார். அவர் வடக்கிருக்க இடம் விட்டுவையுங்கள்,'' என்றான். அருகில் இருந்தவர், "நீர் வடக்கிருத்தலை அவர் அறிய வாய்ப்பில்லையே! அவர் எவ்வாறு இங்கு வருதல் கூடும்?'' என்று கேட்டனர். வேந்தன், "மனம் ஒன்றுபட்ட நண்பருள் ஒருவர் தமது உள் உணர்ச்சியால் மற்றவர் நிலையை அறிதல் கூடும். என் சொல் தவறாது. அவர் விரைவில் இங்கு வருவார் என்பது எனக்குத் தோன்றுகிறது,'' என்றான்.

8. ஆ! என்ன வியப்பு! சோழன் சொன்னவாறே பாண்டி நாட்டுப் புலவரான பிசிராந்தையார் சோழன்முன் தோன்றினார். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினர். அருகில் இருந்தவர் வியப்புற்றனர். 'புலவர் வருவார்' என்று கூறிய புரவலன் சொல் பொய்க்காதபடி புலவர் வந்தது அவர்களை வியப்புறச் செய்தது. அப்பொழுது அருகில் இருந்த **கண்ணகனார்** என்ற புலவர், "பொன், பவளம், முத்து, மணி என்பன ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத வேறு வேறான இடங்களில் தோன்றுவனவாகும். அவ்வாறு இருந்தும் ஓர் அணிகலத்தைச் செய்யுங் காலத்தில் அவை அனைத்தும் கோவையாய் ஓர் இடத்தில் தோன்றும். அவைபோலத் தொடர்பற்ற சேய்மை இடங்களில் இருந்தபோதிலும் தேவை உண்டாகும் நேரங்களில் சான்றோர் சான்றோருடன் வந்து கலந்துகொள்வர். பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழருடன் இங்கு வந்து கலந்துகொண்டதே இதற்குச் சிறந்த சான்றாகும்,'' என்று கூறிப் பாராட்டினர்.

9. உணர்ச்சி ஒத்த அரசனும் ஆந்தையாரும்

வடக்கிருந்து உயிர் நீத்தனர். அவர்கள் உயிர் விட்ட இடங்களில், அக்கால வழக்கப்படி, பெரு மக்கள் அரசனுக்கு ஒரு கல்லும் ஆந்தையாருக்கு ஒரு கல்லும் நட்டனர். அவற்றில் அவரவர் உருவம், பெயர், சிறப்பியல்புகள் முதலியன பொறிக்கப் பெற்றன. இவ்வாறு பொறிக்கப் பெற்று நடப் படுவனவே நடு கற்கள் என்பன.

10. சோழ வேந்தன் பிசிராந்தையாரைப் பார்த்தறியான்; பிசிராந்தையாரும் சோழனைப் பார்த்தறியாதவர். எனினும், உணர்ச்சியில் இரு வர் உள்ளங்களும் ஒன்றுபட்டன. அதனாற்றான் குறித்த காலத்தில் 'புலவர் வருவார்' என்ற உணர்ச்சி புரவலனுக்கு ஏற்பட்டது. உள்ளத்து உணர்ச்சியாற்றான், வேந்தனது துன்ப நிலையைப் புலவர் உணர்ந்து உறையூருக்கு ஓடிவந்தார். அவர் தமது உயிரைத் தியாகம் செய்ததற்கும் ஒத்த உணர்ச்சியே காரணமாகும். பிசிராந்தை யாரது இச் சீரிய நட்பு நிலை பண்டைப் புலவர் களாற் பாராட்டப்பட்டது.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."

—திருக்குறள்

அருஞ்சொற்பொருள்

ஆற்றுனய் = தாங்கமுடியாதுய். அணிகலன் = நகை. கடிது = விரைவாக. கபடு = வஞ்சனை. ஈந்து = கொடுத்து. வீறு = பெருமிதம். இன்னே = இப்பொழுதே. விழுக்கலன் = சிறந்த நகை. அளவளாவ = பேசி மகிழ. வாய்ப்பு = சந்தர்ப் பம். ஆற்று இடைக்குறை = ஆறு இரண்டாகப் பிரியுமிடத்து உள்ள நடுத் திட்டு. புரவலன் = வள்ளல்; அரசன். சான்றோர் = கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர். கிழமை = உரிமை.

## பயிற்சி

I. விடை தருக :—

1. கோவூர் கிழார் நல்லியல்புகள் எவை?
2. இளந்தத்தர் யாவர்? அவருக்கு நேர இருந்த தீமைக்குக் காரணம் யாது?
3. கோவூர் கிழார் அத்தீமையை எவ்வாறு போக்கினர்?
4. கோப்பெருஞ் சோழனுடைய நற்பண்புகள் எவை?
5. பிசிராந்தையாருடைய நல்லியல்புகள் யாவை?
6. 'வடக்கிருத்தல்' என்பது யாது?
7. வடக்கிருந்த வேந்தன் தன்னைச் சூழ இருந்தவரிடம் பிசிராந்தையாரைப்பற்றி யாது கூறினன்?
8. 'நடுகல்' என்பது யாது?
9. ஒத்த உணர்ச்சியின் சிறப்பு யாது?

II. நீவிர் படித்த வேறு நூல்களிலிருந்து ஒரு புலவரது சிறந்த குணம் ஒன்றினை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சி ஒன்றைக் கூறுக.

III. 1. வாக்கியங்களில் அமைக்க :—
விளக்கமாக, சீரும் சிறப்பும், நேரிய ஒழுக்கம், வீறு கொண்டு, அளவளாவ.

2. எதிர்ச்சொல் கூறுக :—
விளக்கமாக, மதித்து, கொடையாளி, பரவியது.

IV. 1. கோவூர் கிழாரது தொண்டினை நன்கு விளக்கி இருபது வரிகள் வரைக.

2. பிசிராந்தையார் நட்பு நலனைப் பாராட்டி இருபது வரிகள் வரைக.

# 13. நான் கண்ட நல்லிடம்

(செஞ்சிக் கோட்டை)

நான் காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி மாணவன். என் பெயர் திருமாவளவன் என்பது. நான் இப்பொழுது ஏழாம் வகுப்பில் வாசித்து வருகிறேன். நான் சென்ற ஆண்டு நவ ராத்திரி விடுமுறையில் என் தமிழாசிரியருடனும் ஆரும் வகுப்பு மாணவருடனும் மேட்டூர் அணை யைச் சென்று பார்த்தேன். தமிழாசிரியர் கட் டளைப்படி மேட்டூர் அணையைப் பற்றி ஒரு கட் டுரை எழுதினேன். இந்த ஆண்டு நவராத்திரி விடுமுறையில் நாங்கள் வரலாற்றுப் புகழ் பெற் றதும் இயற்கைக் காட்சிகள் மலிந்த நல்லிடமும் ஆகிய செஞ்சிக்குச் சென்றோம்; செஞ்சிக்கோட் டையையும் பிற இடங்களையும் பார்வையிட்டோம். எங்கள் தமிழாசிரியர் அவற்றைப்பற்றிய செய்தி களை விரிவாகக் கூறினர்; பிறகு நாங்கள் பார்த்த வற்றைப் பற்றி ஒரு கட்டுரை வரையுமாறு பணித் தார். நான் கீழ்வரும் கட்டுரையை எழுதியுள்ளேன். நீங்கள் அதனைக் கூர்ந்து படித்து அது பற்றிய உங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

## செஞ்சிக் கோட்டை

குறிப்புகள் :—

1. இருப்பிடம்
2. கோட்டைப் பிரிவுகள்
3. கோட்டை வாயில்கள்
4. கோட்டைக் குன்றுகள்
5. செஞ்சி நகரம்
6. சிங்கபுரம்
7. இராஜகிரி
8. இராஜகிரியின் மேலிடம்
9. மலை அடிவாரம்
10. கிருஷ்ணகிரி
11. வரலாற்றுச் சிறப்பு

## கட்டுரை

1. தென்னிந்தியாவில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்கள் பல. அவற்றுள் செஞ்சிக் கோட்டை ஒன்ருகும். தென்னிந்திய வரலாற்றின் ஒரு பகுதி இதனுள் புதைந்து கிடக்கின்றது என்று கூறலாம். இன்று இக்கோட்டை அரசியல் வாழ்வி லிருந்து ஒதுங்கி, பழைய காட்சிப் பொருளாகவே கருதப் படுகிறது. இது தென் ஆர்க்காடு ஜில்லா வின் வடமேற்கு மூலையில் இருக்கின்றது. இஃது ஏறக்குறையப் பதினைந்து கல் நீளம் பரவியுள்ளது. இஃது அமைந்துள்ள இடம் வறண்டது; குன்று களும் பாறைகளும் நிறைந்தது. இதன் குன்று கள் மனிதனது முயற்சி இன்றியே இயற்கை அரண்களாக உருப்பெற்றவை. இதனை ஆண்ட அரசர்கள் இவ்வியற்கை அரண்களைப் பலப்படுத் தினரே தவிர வேருென்றும் செய்யவில்லை.

2. செஞ்சிக்கோட்டை முக்கோண வடிவில் மூன்று குன்றுகட்கு நடுவில் அமைந்துள்ளது. இது வெளிக்கோட்டை, உட்கோட்டை என இரு பிரிவுகளைக் கொண்டது. வெளிக் கோட்டை முன் சொன்ன முக்கோண வடிவின் மூன்று மூலை களாக அமைந்துள்ள குன்றுகளை உள்ளடக்கி இவற்றை இணைத்து நிற்பது; அஃது ஏறத்தாழ இருபத்து நான்கு கல் சுற்றளவு உடையது. மதிற் சுவர்கள் கருங்கற்களால் கட்டப்பட்டவை. அவை அறுபது அடி வரை அகலம் உடையவை. அவற் றைச் சூழ எண்பது அடி அகலம் உள்ள ஆழமான அகழி இருக்கின்றது. உட்கோட்டை ஏறக்குறைய மூன்று கல் சுற்றளவு உடையது.

3. இந்த இரண்டு கோட்டைகளிலும் கோட்டை வாயில்கள் இருந்தன. வெளிக்கோட்டையின் வாயில்கள் அடைக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது இருப்பவை இரண்டு வாயில்கள். அவை திண்டிவனத்திலிருந்து திருவண்ணுமலேக்குப் போகும் பாதைக்காக மதிலே இடித்து அமைக்கப்பட்டவை. அவற்றின் வழியாகவே இப்பொழுது கோட்டைக்குள் போகக்கூடும். உள்கோட்டையில் இருந்த வாயில்கள் இன்றும் அப்படியே இருக்கின்றன. அவற்றுள் ஒன்று வடக்கில் உள்ள ஆர்க்காட்டு வாயில் என்பது; மற்ருென்று புதுச்சேரி வாயில் என்பது.

4. கோட்டையின் மூன்று கோடிகளிலும் உள்ள குன்றுகள் முறையே பெரியமலே அல்லது இராஜகிரி, வடகோடியில் உள்ள கிருஷ்ணகிரி, தெற்கில் உள்ள சந்திராயன துர்க்கம் என்பவை ஆகும். சக்கிலி துர்க்கம் என்பது நான்காம் குன்று. இவற்றுள் இராஜகிரியே மிகப் பெரியதும் சிறந்ததும் ஆகும். இக்குன்றுகள் அனேத்தும் மதில்களாலும் அகழிகளாலும் வலுப்படுத்தப்பட்டவை. ஒவ்வொரு குன்றின் நடு இடமும் தலேயைச் சுற்றச்செய்யும் செங்குத்தான கற்பாறைகளாக இருக்கின்றது. சுற்றியுள்ள பகுதி கற்களும் எவரும் எளிதில் ஏற முடியாத பெரிய கற்பாளங்களாக அமைந்துள்ளன. இந்த இயற்கைப் பாதுகாப்புகளுடன் அங்கங்குப் பெரிய மதில்கள் எழுப்பப்பட்டுள்ளன; துப்பாக்கி வைத்துச் சுடுவதற்கான கண்ணறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குன்றிலும் படைத்தளங்கள், கொலுமண்டபங்கள் முதலியனவும் கோவில்களும்,

இருக்கின்றன. மலை அடிவாரங்களில் வீரர்கள் தங்குவதற்கான இடங்கள் அமைந்துள்ளன.

5. இம்மலைகளை அடுத்துள்ள இன்றைய செஞ்சிப் பகுதிகளில் பழைய கால மக்கள் வாழவில்லை. அவர்கள் அரங்கநாதர் கோயில் உள்ள **சிங்கபுரம்** என்னும் இடத்தில் வாழ்ந்தனர்; அதற்கு அப்பால் இருந்த மேலைச்சேரி என்ற பழைய செஞ்சியிலும் உறைந்தனர். தேஜ்சிங்குக்கு முற்பட்ட அரசர் காலங்களில் பழைய செஞ்சியே தலை நகரமாக இருந்தது. அப்பழைய செஞ்சியும் புறக்கோட்டை ஒன்றால் இணைக்கப்பட்டிருந்தது. சிங்கபுரம் 'விஷ்ணு செஞ்சி' எனப்பட்டது; செஞ்சி 'சிவ செஞ்சி' எனப்பட்டது.

6. **சிங்கபுரம்** பண்டைக் காலத்தில் செஞ்சி நகரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. செஞ்சி அரசர்கட்கு அரங்கநாதர் விருப்பக் கடவுளராக விளங்கினர். இன்றும் அவ்வூர் சிறந்த வைணவத் தலமாக விளங்குகிறது. அரங்கநாதர் சிலை இருபத்து நான்கடி நீளமுள்ளது; திரு அரங்கத்தில் உள்ள சிலையிலும் பெரியது.

7. இராஜகிரி ஏறக்குறைய ஐந்நூறு அல்லது அறுநூறு அடி உயரம் உள்ளது. அது மிகவும் செங்குத்தானது; நாற்புறங்களிலுமிருந்து எளிதில் நெருங்க முடியாதது; மூன்று புறங்களிலும் ஏற முடியாத பாறைகள் நிறைந்த பாதுகாப்பை உடையது; நான்காம் பக்கத்திற் செங்குத்தான மலைப்பிளவு ஒன்றை இயற்கை அகழியாக உடையது. இந்தப் பிளவு இருபத்துநான்கடி அகலமும் அறுபதடி ஆழமும் உடையது.

கோட்டையை ஆண்ட அரசர்கள் இதனை மேலும் ஆழமாக்கிவிட்டனர்.

8. இராஜகிரி அடிவாரத்தில் கமலக்கண்ணி அம்மன் கோவில் இருக்கிறது. அக்கோவிலுக்கு அப்பால் இராஜகிரி மீது செல்ல ஏழு வாயில்களைக் கடக்கவேண்டும். மலை உச்சியில் அரங்கநாதர் கோவில் ஒன்று உண்டு. அதன் எதிரில் மண்டபம் ஒன்று சிற்ப அழகு பெற்று விளங்குகிறது. செங் கற்களால் கட்டப்பட்ட தானியக் களஞ்சியங்கள் இரண்டும் கொடிமேடை ஒன்றும் இருக்கின்றன. மிக்க உறுதியான சுவர்களைக்கொண்ட அறை ஒன்று 'செல்வ அறை' என்று கூறப்படுகிறது. அதற்கு அப்பால் உள்ள மண்டபத்தில் பதினேரடி நீளமும் ஏழடிச் சுற்றளவும் உள்ள பீரங்கி ஒன்று இருக்கிறது.

9. இராஜகிரி அடிவாரத்தில் மசூதிகள், கோவில்கள், கொலுமண்டபங்கள் முதலியவை காணப்படுகின்றன. வெளிக் கோட்டையில் வேங் கட ரமண சுவாமி கோவில் ஒன்று இருக்கிறது. அது மிக அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட கோவி லாகும். பட்டாபிராமசுவாமி கோவில் என்பது ஒன்று. அதற்கு மேற்கே யானைக்குளம், சக்கரக் குளம், செட்டிக்குளம் என்னும் குளங்கள் இருக் கின்றன. செட்டிக் குளத்துக்கு அருகிற்ருன் தேஜ்சிங்கின் உடல் கொளுத்தப்பட்டதாம். உள் கோட்டையில் பெரிய களஞ்சியங்களும் உடற் பயிற்சிக்கூடமும் இருக்கின்றன. சிறிது கிழக்கில் அரசனும் அரசியும் நீராடப் பயன்பட்ட பெரிய சதுரக் கற்கள் இரண்டு காணப்படுகின்றன. அவற்றுக்கு வடக்கே குதிரை லாயங்கள் என்று

நினைக்கத்தக்க கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றுக்குக் கிழக்கில் அரசன் கொலுமண்டபம் இருக்கின்றது. அதன்கண் அந்தப்புர மாதர்க்கு அமைந்த அறைகள் இருக்கின்றன. நடுவில் எட்டு அடுக்குகளைக் கொண்ட கோபுரம் இருக்கிறது. இதுவே கோட்டையிற் சிறந்த பகுதியாகும்.

10. கிருஷ்ணகிரி மீது ஏற ஒழுங்கான படிக்கட்டுகள் உள்ளன. இங்கும் கொலுமண்டபம் ஒன்று இருக்கின்றது. இம்மலை மீது களஞ்சியங்கள், எண்ணெய்க்கிணறு முதலிய கட்டடங்கள் காணப்படுகின்றன. சுனைகள் சில இருக்கின்றன. சந்திராயன துர்க்கமும் சக்கிலி மலையும் கோட்டை மதில்களை உடையவை. ஆயினும் போர்ச் சிறப்புப் பெற்றவை அல்ல.

11. செஞ்சிக்கோட்டை முதன் முதலில் யாரால் அமைக்கப்பட்டது என்பது திட்டமாகக் கூறக்கூடவில்லை. அது விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்ட நாயக்கரிடம் இருந்தது; பின்னர் மஹாராஷ்டிரர் கைக்கு மாறியது; அதன் பிறகு ஔரங்கசீப் காலத்தில் தேஜ்சிங்கின் தகப்பனாரது ஆட்சியில் இருந்தது. தேஜ்சிங்கு கி. பி. 1714-இல் போரில் இறந்த பிறகு செஞ்சிக்கோட்டை ஆர்க்காட்டு நவாபு ஆட்சிக்கு உட்பட்டது; இறுதியாக ஆங்கிலேயர் வசப்பட்டது. செஞ்சிக்கோட்டைக்கு வாயிருக்குமாயின், அது தன் வரலாற்றைப் பெருமிதத்துடன் எடுத்துரைக்கும் அல்லவா?

அருஞ்சொற்பொருள்

திருமாவளவன் = கரிகாற் சோழன், நாட்டை வளப்படுத்தியதால் இப்பெயர் பெற்றான். வரலாறு = சரித்திரம். அரண் = பாதுகாப்பு. தேஜ்சிங்கு 1714-இல் பத்து மாத காலமே

அரசாண்டவன், சிறந்த வீரன், ஆர்க்காட்டு நவாபிற்குத் திறை கட்டாது போர் புரிந்து மாண்டான். அவன் வரலாறே ‘தேசிங்குராஜன்’ கதை என்பது. விருப்பக் கடவுளர் = இஷ்ட தெய்வம்.

பயிற்சி

I. விடை தருக :—

1. செஞ்சிக் கோட்டையின் பொது அமைப்பைப் பற்றிக் கூறுக.
2. ஆர்க்காட்டு வாயில், புதுச்சேரி வாயில் என்பன யாவை?
3. கோட்டைக்கு உட்பட்ட சிறந்த குன்றுகள் எவை?
4. சிங்கபுரம், மேலைச்சேரி என்பன பற்றி யாது அறிவீர்?
5. இராஜகிரியின் அமைப்பு யாது?
6. அதன் அடிவாரத்தில் காணத்தக்கவை யாவை?
7. கிருஷ்ணகிரியின் அமைப்பு யாது?
8. செஞ்சி வரலாற்றைச் சிறப்புடையது என்பது எவ்வாறு பொருந்தும்?
9. இத்தகைய பழைய இடங்களைப் பார்ப்பதால் உண்டாகும் பயன் என்ன?

II. நீவிர் பார்த்த வரலாற்றுப் புகழ்பெற்ற வேறோர் இடத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

III. செஞ்சிக் கோட்டையின் பொது அமைப்பு, கட்டடங்கள், கோட்டையின் வரலாறு—என்பவற்றைத் துணையாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

# 14. வானொலி

1. மக்கள் தம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சித்துறையில் இறங்கிய நாள்தொட்டு உலகத்தில் புதிய புதிய ஆராய்ச்சி முடிபுகள் வெளி வந்த வண்ணம் இருக்கின்றன. நம்மைச் சூழ்ந் துள்ள இயற்கைப் பொருள்களின் தன்மைகளை ஆராய்ச்சியாளர் ஆராய்கின்றனர் ; அவற்றில் அமைந்துள்ள இயற்கைச் சக்திகளின் இயல்பு களைக் கண்டறிகின்றனர் ; அச்சக்திகளின் துணை யைக்கொண்டு புதிய புதிய அரும்பொருள்களைத் தோற்றுவிக்கின்றனர். இங்ஙனம் ஒவ்வோர் அரும் பொருள் வெளிப்படும் பொழுது உலக மக்கள் வியப்புறுகின்றனர்; அதன் பயனைப் பார்த்த பிறகு மகிழ்ச்சியுற்று, அதனைத்தோற்றுவித்த ஆராய்ச்சி அறிஞரைப் பாராட்டுகின்றனர்.


2. இவ்வாறு ஆராய்ச்சி அறிஞரால் தோற்று விக்கப்படும் அரும்பொருள்கள் பலவற்றுக்கும் முதற்காரணமாக இருப்பது மின்சாரம் என்பது ; அதுவே அறிஞரால் முதன் முதல் கண்டறியப் பட்ட இயற்கைச் சக்தி ஆகும். மின்சாரத்தின் இயல்புகளையும் பயன்களையும் நன்கு ஆராய்ந்து அறிஞர் அதனைப் பல துறைகளிலும் பயன்படுத்த லாயினர். அங்ஙனம் பயன்படுத்திப் பல அரிய புதுமைப் பொருள்களை அமைத்துக்கொள்ள முயன்றனர். அம்முயற்சியில் வெற்றியும் பெற் றனர் ; இன்றும் மேற்கொண்டு பல சோதனைகளை நடத்தி வருகின்றனர். மின்சாரச் சக்தி கொண்டு அமைக்கப்பட்டுள்ள அரும்பொருள்களுள் தலை சிறந்தது வானொலி எனப்படும் ரேடியோ ஆகும்.

3. வானொலி என்பது புதுமையும் முதன்மையும் வாய்ந்தது. இஃது ஒரே நாளில் திடீரெனத் தோன்றியதன்று. ஓர் இடத்தில் நிகழும் பேச்சையோ பாட்டையோ மற்ற இடங்களில் கேட்குமாறு செய்யத்தக்க அமைப்புக்கள் இக்கருவியில் நெடுநாள் வரை அமைக்கப்படாமல் இருந்தன. ஆராய்ச்சியாளர் மேன்மேலும் முயன்று தேவையான அமைப்புக்களை ஒவ்வொன்றாக அமைத்து வந்தனர். ஏறத்தாழச் சென்ற பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் இது முற்றுப் பெற்றதாக இல்லை. அக்காலத்தில், இங்கிலாந்தில் உள்ள ரக்பி என்னும் இடத்தில் வானொலிக் கருவி ஒன்று அமைக்கப் பட்டது. ஆயின், அக்கருவி தன்மேல் தாக்கும் ஒலி அலைகளைச் சிறிது தூரமே பரப்பக் கூடியதாக இருந்தது. பின்னர் அறிஞர் பலவாறு முயன்று நெடுந்தூரத்தில் உள்ளவர்க்கும் பேசுவது நன்கு கேட்குமாறு ஏற்பாடு செய்தனர். அதன் பயனாக, நடுக்கடலில் சென்றுகொண்டிருந்த கப்பல் ஒன்றில் இருந்த மக்கள் தங்கட்கு ஏறத்தாழ ஆயிரம் கல் தொலைவில் உள்ள ரக்பியிலிருந்து அனுப்பப்பட்ட செய்தியைத் தெளிவாகக் கேட்டனர். அதன் பின்னரே வானொலி உலகிற் சிறப்புறத் தொடங்கியது.

4. வானொலியின் அமைப்பும் அஃது இயங்கும் முறையும் பற்றி மேற்போக்காகச் சில விவரங்களை அறிந்திருத்தல் நல்லது. ஒரு குளத்தில் கல் ஒன்றைப் போட்டால், கல் விழுந்த இடத்திலிருந்து சிற்றலைகள் உண்டாகி வட்டமாக அகன்று நெடுந்தூரம் பரவிச் செல்கின்றன; அவ்விடங்களில் மிதக்கும் இலை முதலிய இலேசான பொருள்கள்

அவ்வலைகளால் தள்ளப்பட்டுச் சேய்மையிற் சேர்க்கப் படுகின்றன. குளத்தில் நீர் பரவி யிருத்தல் போலவே எல்லா இடங்களிலும் நமது கண்ணுக்குப் புலனாகாத நுண்ணிய காற்று நிறைந்து இருக்கின்றது. கல்லால் தாக்கப்பட்ட நீரில் அலைகள் உண்டாதல் போல, ஒலிகளால் தாக்குண்ட அக்காற்றில் மின்சார அலைகள் உண்டாகின்றன. அந்த அலைகள் தம்மைத் தாக்கிய ஒலிகளைத் தாங்கிக்கொண்டு மிக்க விரைவுடன் நெடுந்தூரம் பரவிச் செல்கின்றன. அப்பொழுது அவை 'ஒலி அலைகள்' எனப் பெயர் பெறும். ஒலி அலைகள் ஒலியைப் பிரித்துக் கொள்ளும் சக்திவாய்ந்த ஒருவகைக் கருவிமேல் தாக்குமாயின், அக்கருவி ஒலியைக் கவர்ந்து கொண்டு வெளிப்படுத்தும். ஆதலால் அவ்வொலி அலைகட்குக் காரணமாக முன்பு நிகழ்ந்த ஒலிகள் அங்கு மீண்டும் அவ்வாறே நிகழும். நுண்ணிய அவ்வொலிகளை நாம் நேராகக் கேட்க இயலாது. ஆதலின் நுண்ணிய ஒலிகளைக் கவர்ந்து பல மடங்கு பெருக்கி நாம் கேட்பதற்கு ஏற்ற வகையில் வெளியிட மற்றொரு கருவி அமைக்கப் பட்டுள்ளது.

5. மேற் கூறியவற்றால் வானொலி மூவகைக் கருவிகளைக் கொண்டது என்பதை அறியலாம். அவற்றுள் பேசுவோர் அல்லது பாடுவோரது ஒலியை ஏற்றுக் காற்றில் செலுத்தும் கருவி ஒன்று. அஃது ஒலி செலுத்தி எனப் பெயர் பெறும். காற்றில் மின்சார அலைகளால் தள்ளப் பட்டுவரும் அவ்வொலிகளைக் கவர்ந்துகொள்ளும் கருவி மற்றொன்று. அஃது ஒலி கொள்ளி எனப் பெயர் பெறும். ஒலி கொள்ளி பெற்றுக்கொண்ட



வானொலி

நுட்ப ஒலியை வாங்கிப் பலமடங்கு பெருக்கி வெளி யிடும் கருவி மூன்றாவதாகும். அஃது ஒலிபெருக்கி எனப்படும்.

6. இம்மூன்று கருவிகளிலும் முதற்கருவி ஒரே இடத்தில் நிலையாக அமைந்திருப்பது. அக் கருவி ஒரு தனி அறையில் வைக்கப்பட்டிருக்கும். அவ்வறை எவ்வித வெளி ஒலியும் உட்செல்ல முடி யாதவாறு அமைக்கப்பட்டதாகும். பேசுபவர் அதற்கு எதிரில் இருந்து பேசுவர்; பாடுபவரும் அவ்வாறே எதிரில் இருந்து பாடுவர். ஒலி செலுத்தி என்னும் அக்கருவி அவ்வொலிகளை வாங்கிக் காற் றிற் செலுத்தும். அவ்வொலிகள் காற்றில் தாக்கி மின்சார அலைகளை உண்டாக்கும். மின்சார அலை கள் ஒலிகளை இழுத்துக் கொண்டு நெடுந்தூரம் பரவிச்செல்லும்; ஒலி கொள்ளி அவ்வொலிகளைக் கவர்ந்து வெளிப்படுத்தும். ஒலிபெருக்கி என்னும் கருவி ஒலி கொள்ளியுடன் இணைக்கப்பட்டிருக்கும். அஃது ஒலி கொள்ளியால் ஈர்க்கப்பட்ட ஒலிகளைப் பல மடங்கு பெருக்கி நாம் கேட்கும்படி வெளிப் படுத்தும்.

7. நமது இந்திய நாட்டில் இன்று வானொலி இல்லாத நகரமே இல்லை என்னலாம். அரசியலார் சென்னை, திருச்சி, விஜயவாடா முதலிய இடங்களி லும் அகில இந்திய வானொலி நிலையங்களை அமைத் துள்ளனர். எல்லா நகரங்களிலும், ஊர்களிலும் உள்ள செல்வர் இல்லங்களிலும், சிற்றுண்டிச் சாலை களிலும், உணவு விடுதிகளிலும், பூங்காக்களிலும் ஒலி கொள்ளியும் ஒலி பரப்பியும் அமைக்கப்பட் டுள்ளன. மக்கள் மேற்சொல்லப்பட்ட இடங்களில் இருந்தபடியே அகில இந்திய வானொலியிற் பரப்பப்

படும் பாடல்களையும், பேச்சுக்களையும் அன்றாடச் செய்திகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். சென்ற 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14-ஆம் நாள் இரவு இந்தியா உரிமை பெற்றதைக் குறித்துப் பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரூ முதலிய தலைவர்கள் பேசிய உருக்கம் மிகுந்த பேச்சுகளை நாம் கேட்டு மகிழக் காரணமாக இருந்தது வானொலியே அன்றோ?

8. வானொலியால் உண்டாகிவரும் நலன்கள் மேலும் பலவாகும். வானொலி வாயிலாக ஒரு நாட்டிலிருந்து பிறநாடுகட்குச் செய்திகளை மிக்க விரைவில் அறிவிக்கலாம். ஒரு நாட்டில் ஒரே சமயத்தில் அவசரமாக ஒரு செய்தியைப் பரப்பலாம்; ஓரிடத்தில் நடைபெறும் சொற்பொழிவுகள், இன்னிசைப் பாடல்கள், அறிவுரைகள், அரசியற் பிரசாரங்கள், நாடோறும் நடைபெறும் உலக நிகழ்ச்சிகள், உலக வாணிக நிலவரங்கள், கல்வித் தொடர்பான பேச்சுகள், உரையாடல்கள் இன்ன பிறவும் அதே சமயத்தில் எல்லா மக்களும் கேட்டுப் பயன் பெறலாம். வானவூர்திகளிற் செல்பவரும் தமக்குத் தீங்கு நேரும் அறிகுறி தோன்றியவுடன் வானொலி வாயிலாகத் தம் நாட்டிற்குச் செய்தி சொல்லி உதவி பெறலாம்.

### அருஞ்சொற்பொருள்

வியத்தகு=ஆச்சரியப்படத்தகும். தலை சிறந்தது=முக்கியமானது. புலனாகாத=தெரியாத. ஈர்க்கப்பட்ட=இழுக்கப்பட்ட. வாயிலாக=மூலமாக. வாணிக நிலவரங்கள்=பொன், வெள்ளி முதலிய உலோகங்களின் விலைகள்; பருத்தி முதலிய பொருள்களின் விலைகள் முதலியன. இவை செய்தித் தாள்களிலும் வெளிவருகின்றன. வானவூர்தி=ஆகாய விமானம்.

## பயிற்சி

I. விடை தருக :—

1. ஆராய்ச்சியாளர் எவ்வாறு அரும்பொருள்களைத் தோற்றுவிக்கின்றனர்?
2. புதிய அரும்பொருள்கள் தோன்றுவதற்கு முதற் காரணமாக இருப்பது எது?
3. வானொலி எவ்வாறு தோன்றி முழுநிலையை அடைந்தது?
4. ஒலி அலைகள் என்பன யாவை?
5. வானொலியில் அமைக்கப்பட்டுள்ள மூவகைக் கருவிகள் எவை?
6. வானொலியால் உண்டாகும் நலன்கள் யாவை? அவற்றின் வேலைகள் யாவை?

II. வாக்கியங்களில் அமைக்க :—

1. புலனாகாத, பயன்பெற, அறிகுறி, பகுத்தறிவு, காரணமாக, அறிவுரை.
2. எதிர்ச் சொல் கூறுக :—

   அறிஞர், மகிழ்ச்சி, தக்க, நெடுநாள், தெளிவாக.
3. இப்பாடத்தில் உள்ள அடுக்குத் தொடர்களைக் கூறுக.

III. மின்சார ஆராய்ச்சி, வானொலி அமைப்பு, அதன் பயன்கள் : இந்தக் குறிப்புக்களைக் கொண்டு 'வானொலி' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

# 15. உரையாடல்

## I

[சாதுவன் என்பவன் காவிரிப்பூம்பட்டினத்து வணிகன். அவன் பொருள் ஈட்டிவரக் கப்பல் ஏறி அயல்நாடுகட்குச் சென்ருன்; அங்குச் சிறிது காலம் தங்கிப் பொருள் சம்பாதித்துத் தன் ஊருக்குத் திரும்பினுன். அவன் பிரயாணம் செய்த கப்பல் புயல் காற்றில் அகப்பட்டு மூழ்கியது. சாதுவன் ஒரு மரத்துண்டைப் பற்றி நீந்தி ஒரு தீவை அடைந்தான்; அடைந்து, கரையில் இருந்த மரத்தின் நிழலில் களைப்பு மிகுதியாற் படுத்து உறங்கினுன். அவன் சேர்ந்த தீவில் நாகர் என்னும் முரட்டு மக்கள் வாழ்ந்து வந்தனர். அம்மக்கட்குக் கல்வியறிவு இல்லை. அவருள் இருவர் சாதுவன் இருந்த இடத்தை அடைந்தனர்.]

**முதலாம் நாகன் :** (நாகர் மொழியில்) இந்தப் புதியவன் யாவன் என்பது தெரியவில்லை; நன்ருய் உறங்குகின்ருன்.

**இரண்டாம் நாகன் :** இவன் கப்பல் உடைந்து உயிர் பிழைத்தவனுக இருக்கவேண்டும்; நீந்தி வந்த களைப்பினுலும் பசியின் களைப்பாலும் அயர்ந்து தூங்குகிருன்.

**மு. நா. :** இவன் எந்த நாட்டவனே தெரியவில்லை.

**இ. நா. :** இவன் எவனுயிருப்பின் நமக்கென்ன? இவன் கொழுத்துக் காணப்படுகிருன்; நமக்கு நல்ல உணவு ஆவான்.

**மு. நா. :** தூங்கும்பொழுது இவனைத் துன்புறுத்தலாகாது. இவன் எழுந்தபிறகு இவனை என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசிப்போம்.

[சாதுவன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே எழுதல்.]

**இ. நா. :** அண்ணு இவன் எழுந்துவிட்டான்.

**சாதுவன் :** (நாகர் மொழியை நன்கு அறிந்தவன். ஆதலால் அம்மொழியிலேயே பேசுதல்) ஐயன்மீர், நீங்கள் யார் ?

**மூ. நா. :** (வியப்புடன்) என்ன ! உனக்கு எங்கள் மொழியில் பேசத் தெரியுமா ?

**சாதுவன் :** (புன்னகையுடன்) தெரியும். நீங்கள் இந்தத் தீவில் வாழ்பவரா ?

**மூ. நா. :** ஆம். நாங்கள் நாகர் மரபினர் ; இந்தத் தீவில் வாழ்கின்றவர். நீ யார் ?

**சாதுவன் :** ஐயன்மீர், நான் சோழநாட்டினன் ; வாணிகத்தின் பொருட்டு அயல்நாடுகளுக்குச் சென்று மீண்டு வந்தேன். வழியில் கப்பல் கடலில் மூழ்கியது. நான் தப்பிப்பிழைத்து அல்லற்பட்டு உணவின்றி இங்கு வந்தேன் ; இப்புதிய தீவில் உங்களைக் கண்டேன். நீங்கள் தாம் என்னைக் காக்க வேண்டும்.

**இ. நா. :** உன் செல்வம் கடலுக்கு இரையானதோ ?

**சாதுவன் :** ஆம். என் வாழ்வே ஒழிந்தது.

**மூ. நா. :** நீ நல்லவனுய்க் காணப்படுகிருய். உன்னை எங்கள் தலைவனிடம் அழைத்துச் செல்வோம் வா.

(மூவரும் செல்லுதல்)

## II

[நாகர் தலைவன் ஒரு பெரிய எலும்புக் குவியல்மீது அமர்ந்திருந்தான். அவன் பக்கத்தில் அவன் மனைவி இருந்தாள். அவர்களைச் சுற்றிலும் உலர்ந்த எலும்புத் துண்டங்கள் சிதறிக் கிடந்தன. ஒரு பக்கம் பதப்படுத்தப்பட்ட இறைச்சித் துண்டங்களும் மற்ருெரு பக்கம் கட் குடங்களும் வைக்கப்பட் டிருந்தன. அவை அனைத்தையும் கண்ட சாதுவன் வியப்பும் திகைப்பும்

அடைந்தான். அவனை அழைத்துச் சென்ற நாகர் தம் தலைவனைப் பணிந்து சாதுவனைப்பற்றி அவனிடம் தெரிவித்தனர்.]

நா. தலைவன்: ஐய, அமர்க. நீ எங்கள் மொழி பேசியதைக் கேட்டு இவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனராம். நீ மிகவும் களைத்திருக்கிறாய். (வந்த நாகர் இருவரையும் பார்த்து) இவ்வாணிகனுக்குப் பதப் படுத்தப்பட்ட இறைச்சியும் கள்ளும் கொண்டுவந்து கொடுங்கள்.

சாதுவன்: (தன் காதுகளைப் பொத்திக்கொண்டு) ஐயா, அவை எனக்கு வேண்டா. நான் அவற்றை உட்கொள்ளுவது இல்லை.

நா. தலைவன்: (வியப்புடன்) என்ன! உணவு வேண்டாவா?

சாதுவன்: உணவு வேண்டும். ஆனால் நீ சொன்ன ஊனும் கள்ளும் வேண்டா?

நா. தலைவன்: ஏன்?

சாதுவன்: கள் மயக்கம் தருவது; அறிவை இழக்கச் செய்வது; உடல் உறுப்புகளை வன்மை இழக்கச் செய்வது; நாளடைவில் உயிரை மாய்த்து விடுவது. இறைச்சி ஓர் உயிரைக் கொல்வதால் கிடைப்பது. அங்ஙனம் ஓர் உயிரைக்கொன்று அதன் இறைச்சியை உண்பது அறிவுடையோர்க்கு அழகன்று. நமது வாழ்க்கையே நிலையற்றது. உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு. பிறப்பு மாறி மாறி வருகின்றது. நாம் ஒரு பிறப்பில் நல்லது செய்யின் அடுத்த பிறப்பில் அதன் பயனைப் பெறுவோம். தீயது செய்யின் அதன் பயனாக நரகத்தைப் பெறுவோம்.

நரகம் தரத்தக்க பொருள்களுள் நீ சொன்ன கள்ளும் ஊனும் அடங்குவன. ஆதலால் இந்த இரண்டும் தகாதவை என்று பெரியோர் விளக்கியுள்ளனர். அவை எனக்கு வேண்டா.

நா. தலைவன்: (வியப்புடன்) நீ உடலை விட்டுச் செல்லும் உயிர் வேறு இடம் புகும் என்னும் கருத்துப்படப் பேசினை. அவ்வுயிர் எப்படி வேறு இடம் புகும்? அதனை விளக்கிக் கூறுக.

சாதுவன்: ஐயனே, நமது உடலில் உயிர் இருக்கையில் ஏதேனும் ஒரு துன்பம் வரின், அதை உணர்ந்து உடல் வருந்துகின்றது. உயிர் நீங்கிய பின் உடலை நெருப்பில் இட்டுக் கொளுத்தினும் அவ்வுடல் அதனை உணரவில்லை அன்றோ? ஆதலால் உடம்பை விட்டு ஏதோ ஒன்று போய்விட்டது என்பதை உணர்கிறோம் அல்லவா? அந்த ஒன்றே உயிர் என்பது. அது வேறோர் புகுமிடம் உடையது. நாம் கனவு காண்கையில் நமது உடல் ஒரே இடத்தில் இருக்கிறது. ஆயின் உயிர் வேறோர் உடலின் வழியே மற்றோர் இடத்தை அடைகின்றது என்பதை உணர்கிறோம் அல்லவா?

நா. தலைவன்: ஐயா, நீ கூறியது உண்மையே. நாங்கள் கள்ளும் ஊனும் இன்றி உயிர் வாழ்தல் இயலாது. ஆதலின் எங்களுக்கு ஏற்கும் வகையில் அறிவுரை கூறுக. நாங்கள் அதன்படி நடப்போம்.

சாதுவன்: நீங்கள் என்னைப்போலக் கப்பலிலிருந்து உயிர் தப்பி வருபவர் உயிரைக் கவரலாகாது; அவர்கள் பொருள்களைக் கொள்ளையிடலாகாது; தானே இறக்கின்ற உயிரின்

ஊனைத்தவிர வேறோர் உயிரைக்கொன்று தின்னலாகாது. அங்ஙனம் இருப்பின் நீங்கள் ஓரளவு நல்வாழ்வு பெற்றவராவீர்.

நா. தலைவன் : ஐயா, நீ கூறியது எம்மால் பின்பற்றத் தகுவதே ஆகும். உமது நல்லுரைக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! நாங்கள் இதுவரை வாணிகர் பலரை இங்குச் சந்தித்திருக்கிறோம். அவர்களைக் கொன்று தின்று அவர்கள் பொருள்களை ஒரு குகையில் போட்டு வைத்திருக்கிறோம். அப் பொருள்கள் எங்களுக்குப் பயன்படா. ஆதலால் நீ அவற்றை எடுத்துச் செல்லலாம்.

நாகர்கள் : (தலைவனைப் பணிந்து) ஒரு கப்பல் நமது தீவின் ஓரம் வந்து தங்கியிருக்கிறது.

நா. தலைவன் : அப்படியா! அதன் தலைவனிடம் சென்று காவிரிப்பூம்பட்டினத்து வாணிகர் ஒருவர் வருகிறார் என்பதைக் கூறுங்கள்.

[சாதுவனும் நாகர் தலைவனும் கப்பலை நோக்கிச் சென்றனர். அவர்கட்குப் பின்புறம் நாகர் சிலர் குகையில் இருந்த பலவகைச் செல்வப் பொருள்களைப் பெரும் பைகளிற் கட்டிச் சுமந்து வந்தனர். அப்பைகள் கப்பலில் ஏற்றப்பட்டன.]

சாதுவன் : ஐயா, உனது அன்பை என்றும் மறவேன். நான் விடை பெறுகிறேன்.

நா. தலைவன் : ஐயா, சென்று வருக. நீ உரைத்த நன்மொழிகளை நாங்கள் மறவோம்; இயலுமளவு அவற்றின்படி நடப்பதாக உறுதி கூறுகிறோம். நின் வாழ்நாள் சிறப்பதாகுக!

(கப்பல் பாய்விரித்துச் சென்றது.)

இப்பாடப் பகுதி மணிமேகலை என்னும் தமிழ்க் காவியத்தில் இருப்பது. கோவலன் மகளான மணிமேகலை என்பவள் வரலாற்றைக் கூறுவது மணிமேகலை என்னும் காவியம். சேரன்—செங்குட்டுவனுக்கு நண்பரான மதுரைக் கூல வாணிகன் சாத்தனுர் என்பவரே இந்நூலின் ஆசிரியர். இந் நூல் எளிய செய்யுள் நடையில் அமைந்திருப்பது. அதனில் பண்டைக் கால மக்களுடைய பழக்கவழக்கங்கள், சமயச் செய்திகள், தமிழரசர் வரலாற்றுக் குறிப்புகள் முதலிய பல விவரங்களைக் காணலாம். தமிழ் மாணவராகவுள்ள நீங்கள் தக்க பருவத்தில் இந்நூலைப் படித்து இன்புறலாம்.

### அருஞ்சொற்பொருள்

ஈட்டி = சம்பாதித்து. அமர்க = உட்காருக. ஊன் = இறைச்சி. சாக்காடு = இறப்பு. புகுமிடம் = நுழையும் இடம். அறவுரை = தரும உபதேசம்.

### பயிற்சி

I. விடை தருக :—

1. சாதுவன் நாகர் வாழ்ந்த தீவை எவ்வாறு அடைந்தான்?
2. அவன் தூங்கும்பொழுது நாகர்கள் பேசிக்கொண்டவை யாவை?
3. சாதுவன் நாகரால் கொல்லப்படாமைக்கு உரிய காரணம் யாது?
4. சாதுவன் நாகர் தலைவன் வீட்டிற் கண்ட காட்சி யாது?
5. 'ஊனும் கள்ளும் வேண்டா'—ஏன்?
6. உயிர் என்பது யாது?
7. நாகர் தலைவன் சாதுவனை யாது வேண்டினன்?
8. அதற்குச் சாதுவன் கூறியது யாது?

9. நாகர் தலைவன் சாதுவனுக்குச் செய்த கைம்மாறு யாது?
10. நாகர் தலைவன் இறுதியாகக் கூறியவை யாவை?
11. இந்நகரைப் பற்றிய செய்தி எந்த நூலில் உள்ளது? அதன் பிற சிறப்புக்கள் யாவை?

II. வாக்கியங்களில் அமைக்க :—

1. துன்புறுத்தல், அல்லற்பட்டு, வியப்பும் திகைப்பும், பதப்படுத்தப்பட்ட, மாறி மாறி.

2. எதிர்ச்சொல் கூறுக :—

வேண்டும், நரகம், பயன்படா, துன்புறுத்தல்.

3. பிரித்து எழுதுக :—

உணவின்றி, மற்றொரு, அழகன்று, நிலையற்றது, தின்னலாகாது.

III. நாகரும் சாதுவனும், சாதுவனும் நாகர் தலைவனும், சாதுவன் நல்லுரை, நாகர் தலைவன் அன்பு: இக் குறிப்புகளைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக எழுதுக.

# 16. ஜோசப் தாம்ஸனும் கிழக்கு ஆப்பிரிக்காவும்

1. ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கண்டு அதன் விவரங்களை அறியப் பாடுபட்ட ஐரோப்பிய அறிஞர் பலராவர். அவர்கள் உழைப்புக்குப் பின்னரே ஐரோப்பியர் ஆப்பிரிக்காவிற் குடியேறி, நாட்டைத் திருத்தி வாழலாயினர். அவர்கள் குடியேறி வாழக் காரணமாக இருந்தவருள் முதல் இடம் பெறத் தக்கவர் டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர். அடுத்துக் குறிப்பிடத் தக்கவர் ஜோசப் தாம்ஸன் என்னும் அறிஞர் ஆவர். அவர் ஐந்து முறை ஆப்பிரிக்காவிற்குள் சென்று அதன் உள் நாட்டுப் பகுதிகளை அறிந்து வெளியிட்டார். அவர் செலவுகளிற் குறிப்பிடத் தக்கது மூன்றும் செலவாகும். 1882-வரை கிழக்கு ஆப்பிரிக்காவைப்பற்றி உலகத்திற்கு ஒன்றுமே தெரியாதிருந்தது. சான்ஸிபார், மொம்பஸா என்னும் கிழக்குக் கரையில் உள்ள இடங்கட்கும் விக்டோரியா ஏரிக்கும் இடையில் உள்ள நிலப்பகுதியை நன்கு ஆராய்ந்து, கூடுமாயின் நீர் வீழ்ச்சிக்கு நேரான பாதை ஒன்றைக் கண்டுபிடிக்குமாறு இங்கிலாந்தில் இருந்த நில ஆராய்ச்சிக் கழகத்தார் தாம்ஸனை அனுப்பினர்.

2. தாம்ஸன் 1892-இல் தமது முயற்சியை மேற்கொண்டார். அவருக்கு உதவியாக ஆங்கில வீரர் பதின்மர் சென்றனர்; அவருடைய உணவு உடை முதலியவற்றைச் சுமந்துகொண்டு கிழக்காப்பிரிக்கச் சுதேசிகள் நூற்றிருபதின்மர் அவருக்கு முன் வழி காட்டிச் சென்றனர். அந்த வேலையாட்களுட் பெரும் பகுதியினர் திருடர்கள்; புதியவரைத்

துன்பத்திற் செலுத்தி அவர்தம் பொருள்களைக் கவர்ந்து செல்லும் இயல்பினர். ஆயினும் என் செய்




கிழக்கு ஆப்பிரிக்கா

வது? அவர்களைக் கொண்டே உள்நாட்டுச் செலவை எவரும் மேற்கொள்ள வேண்டியவர் ஆயினர்.

ஜோசப் தாம்ஸன் வாக்கு நயம் உடையவர்; மலர்ந்த முகத்தோற்றம் உள்ளவர்; பொறுக்க இயலாத துன்ப நிலையிலும் பொறுமையைக் கையாள்பவர். ஆதலால் அவர் சுதேசிகளைப் பக்குவமாய் நடத்தி வரலானார்.

3. தாம்ஸன் சான்ஸிபார் தீவை விட்டு ஆப்பிரிக்காவிற்குள் நுழைந்து சென்றார். கரையோரப் பகுதியைக் கடந்ததும் அகன்ற பெரிய பொட்டல் நிலத்தைக் கண்டார். அங்குச் செடி கொடி இனங்கள் இல்லை; அருந்த நல்ல தண்ணீர் இல்லை; அப்பொட்டலைக் கடக்க அவர் அரும்பாடு பட்டார். அடுத்துப் பெரிய காடு ஒன்று காட்சி அளித்தது. அக்காட்டுப் பகுதியில் வானளாவிய மரங்களும் நீர்நிலைகளும் ஆங்காங்குச் சிற்றூர்களும் காணப்பட்டன. தாம்ஸன் அந்நிலப் பகுதியை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டே சென்று ஒரு மலைத் தொடரை அடைந்தார். அத்தொடரில் உள்ள குறிக்கத்தக்க கொடுமுடி கிலி மஞ்சரோ என்பது. அது சூட்டு நிலப்பகுதியில் இருப்பினும் அதன் உச்சியில் பனிப் படலங்கள் தலைப்பாகை போலக் காட்சி அளித்தன.

4. அந்த மலைத்தொடரை அடுத்திருந்தது மசை நாடு என்பது. அந்நாட்டு மக்கள் கொலை, திருட்டு இவற்றுக்கு அஞ்சாதவர். அவர்களைப்பற்றிப் பயங்கரமான கதைகள் கூறப்பட்டன. அவற்றைக் கேட்ட தாம்ஸன் புன்னகை புரிந்து அஞ்சா நெஞ்சினராய்த் தம் செலவை மேற்கொண்டார்; பல சிற்றூர்களைக் கடந்து சென்றார்; தம்மைத் தாக்க வந்த மக்களிடமிருந்து பக்குவமாகத் தப்பித்துக்கொண்டு மேலும் செல்லலானார். அப்

பொழுது அவர் சென்ற பகுதி மிக்க சூடுள்ள நிலப்பகுதி ஆகும். செவ்வனே சமைக்கப்படாத உணவு, பலவகைப் பூச்சிகளின் துன்பம், அமைதியுடன் தூங்க வசதியற்ற நிலைமை, காய்ச்சல் புழுக்களைக் கொண்ட கெட்ட நீர் முதலிய துன்பங்கட்கு இடையே அவரது செலவு தடைபடாது நடந்தது.

5. தாம்ஸன் ஒரு சிற்றூரில் தங்கியபொழுது அவ்வூரார் அவர் பொருள்களில் பலவற்றைக் கவர்ந்து சென்றனர். தாம்ஸன் பொறுமையோடு வழி நடக்கலானார்; நடந்து ஒரு சிற்றூரை அடைந்தார். அங்கு ஒருவன் தன் ஈட்டியால் தாம்ஸனைத் தாக்க முயன்றான். அவர் புன்முறுவலுடன் ஈட்டிக் குறியினின்று விலகி நின்றார்; அன்றிரவே மழையில் நனைந்துகொண்டே அயலூருக்கு நடந்தனர்.

6. தாம்ஸன் தம் செலவைத் தொடங்கி ஐந்து மாதங்கள் ஆயின. ஆயினும் அவர் விக்டோரியா ஏரியைக் கண்டறியவில்லை. அவர் பட்ட இன்னல்களோ பல. உணவுப் பொருள்களும் துணிமணிகளும் களவு போயின. ஆதலின், அவர் தம்முடன் வந்தவர்களை ஒரு கிராமத்தில் தங்கச்செய்து, மொம்பஸாவுக்குத் திரும்பினார்; பின்னர் அங்கிருந்து புதிய போர் வீரரையும் நம்பத்தக்க சுதேசிகளையும் தமக்குத் தேவையான பொருள்களையும் சேர்த்துக் கொண்டு வந்து பழைய ஆட்களுடன் கலந்து கொண்டார். அவர் மொம்பஸாவுக்குப் போய் மீள ஐந்து மாதங்கள் ஆயின.

7. அவரது புதிய செலவு 1893-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடக்கமாயிற்று. அவர் வழியில் ஒரு காட்டில் தங்கியிருந்தபொழுது காண்டா மிருகங்கள் வந்து தாக்கின. அவை அவருடன்

வந்த கோவேறு கழுதைகளைக் கொன்றன; பெருங் குழப்பத்தை உண்டாக்கிவிட்டன. தாம்ஸன் அவற்றின் தாக்குதலிலிருந்து தப்பியது அரிதாயிற்று. அவர் எஞ்சிய ஆட்களுடனும் கோவேறு கழுதைகளுடனும் வழிநடந்த பொழுது காட்டு எருமைகள் வந்து வளைத்துக்கொண்டன. அக்கொடிய விலங்குகள் தம் கொம்புகளால் கோவேறு கழுதைகளைத் தூக்கி வானத்தில் எறிந்தன; சுதேசிகள் சிலரைக் குத்திக்கொன்றன. தாம்ஸனும் ஆங்கில வீரரும் துப்பாக்கி வெடி தீர்த்துத் தங்களைக் காத்துக் கொண்டனர். அவர்கள் இவ்வாறு பல துன்பங்களை அடைந்து காட்டைக் கடந்தனர்; பாலை வனத்தை அடைந்தனர்; அங்கு ஒட்டைச் சிவிங்கிகளும் வரிக்குதிரைகளும் கூட்டம் கூட்டமாக இருந்ததைக் கண்டனர்.

8. பாலைவனத்துக்கு அப்பால் சுதேசிகள் ஊர்கள் இருந்தன. தாம்ஸன் ஓர் ஊரிற் சென்று தங்கினர். அவ்வூர் மக்கள் தாம்ஸன் முதலியோரை வளைத்துக் கொண்டனர். அவரவர் தத்தமக்குத் தேவையான பொருள்களைத் தாம்ஸனைக் கேளாமல் அவர் எதிரிலேயே எடுக்கலாயினர். அவர் எல்லாப் பெட்டிகளையும் பூட்டிக் காவலரை நியமித்து ஒய்வு கொண்டார். இரவு முழுவதும் கொடிய விலங்குகளின் ஓசை கேட்டவண்ணம் இருந்தது. மறுநாள் தாம்ஸன் முதலியவர் புறப்பட்டு நடக்கலாயினர். அவர்கள் மசை நாட்டைக் கடந்து, வ-கிகுயூ என்னும் இனத்தவர் வாழ்ந்த நாட்டை அடைந்தனர். அந்நாட்டு மக்கள் போர்வீரர் அல்லராயினும் திருடுவதில் சமர்த்தர் எனப்பெயர் பெற்றவர்.

9. தாம்ஸன் முதலியோர் அச் சுதேசிகள் ஊர்

ஒன்றில் தங்கினர். அன்றிரவு அவர்களைச் சிங்கங்கள் தாக்கத் தொடங்கின. அவை சில கோவேறு கழுதைகளைக் கொன்றன. தப்பிப் பிழைத்தவை காட்டிற்குள் ஓடிவிட்டன. ஆங்கில வீரரும் சுதேசிகளும் மரங்களில் ஏறிக்கொண்டனர்; இருட்டில் சிங்கங்கள் என்று கருதித் தம் கோவேறு கழுதைகளையே சுட்டுக்கொன்றனர். வெடியோசை கேட்டவுடன் சிங்கங்கள் மறைந்தன.

10. இவ்வாறு பல இன்னல்களுக்கு இடையில் பிரயாணம் செய்துகொண்டே தாம்ஸன் நாடோறும் தமது பிரயாணக் குறிப்பை எழுதிவந்தார்; தாம் பிரயாணம் செய்த நிலப்பகுதியின் படத்தை வரைந்து வந்தார்; தாம் சென்ற பாதைக்கு அருகில் இருந்த மலைகள்மீது ஏறிக் கண்ணுக்கெட்டிய வரை தாம் கண்ட காட்சிகளைக் குறித்து வந்தார். அவர் இங்ஙனம் ஊக்கம் தளராது நடந்து நடந்து இறுதியில் 'நைவஷா' ஏரியைக் கண்டார். அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியைப் பார்வையிட்டார். பின்னர் மேலும் வழிநடந்து பரிங்கோ என்னும் அழகிய சிறிய ஏரியைக் கண்டார். அந்த ஏரிக்கும் விக்டோரியா ஏரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி அஞ்சத்தக்கது என்று தாம்ஸனுடன் சென்ற சுதேசிகள் கூறினர். அஞ்சாமை மிகுந்த தாம்ஸன் ஆங்கில வீரருடன் அச்சமின்றி நடந்தார்; பல நாட்கள் நடந்தார். வழியில் ஒரு கெடுதியும் உண்டாகவில்லை. அவர் தமது செலவின் குறிக்கோளாகக் கொண்டிருந்த விக்டோரியா ஏரியை இறுதியிற் கண்டு மகிழ்ந்தார். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அல்லவா?

11. தாம்ஸன் முயற்சிக்குப் பிறகு ஆங்கிலே

யர் கிழக்கு ஆப்பிரிக்காவிற் புகுந்து காடுகளை அழித்து நகரங்களையும் கிராமங்களையும் அமைத்தனர்; வயல்களையும் தோட்டங்களையும் அமைத்துக்கொண்டனர். இன்று கிழக்கு ஆப்பிரிக்கா ஒரு குடியேற்ற நாடாக விளங்கி வருகிறது.

### அருஞ்சொற்பொருள்

சான்ஸிபார் = ஒரு தீவு. மொம்பஸா = கரை ஓர நகரம். கொடுமுடி = சிகரம். சூட்டுப் பகுதி = உஷ்ணப் பிரதேசம். பண்டமாற்று = நாணயம் தந்து பண்டங்களை வாங்காமல், பண்டங்களைக் கொடுத்து வேறு பண்டங்களை வாங்குதல். எஞ்சிய = உயிர் பிழைத்திருந்த. குறிக்கோள் = இலட்சியம்; நோக்கம்.

### பயிற்சி

I. விடை தருக :—

1. ஜோசப் தாம்ஸன் நல்லியல்புகள் எவை?
2. அவர் 1892-ல் எதனைக் கண்டறிய அனுப்பப்பட்டார்?
3. பொட்டலைக் கடந்த தாம்ஸன் கண்டவை யாவை?
4. சூட்டு நிலப்பகுதியில் அவர் அடைந்த துன்பங்கள் எவை?
5. தாம்ஸன் ஏன் இடைவழியில் மொம்பஸாவுக்குத் திரும்பினார்?
6. தாம்ஸனுக்குக் காண்டா மிருகங்களும், காட்டு எருமைகளும் எவ்வாறு துன்பம் இழைத்தன?
7. வ-கிகுயூ என்னும் இனத்தவர் எப்படிப்பட்டவர்?
8. தாம்ஸன் கண்ட ஏரிகள் யாவை?
9. அவர் பிரயாணத்தின்போது தயாரித்தவை எவை?

II. 1. தாம்ஸன் பிரயாணத்தின்போது பட்ட துன்பங்களைப் பற்றி 25 வரிகள் வரைக.

2. தாம்ஸன் பொறுமை, விடா முயற்சி, உழைப்பு என்பவற்றை விளக்கச் சான்றுகள் தருக.

88582

# 17. தோட்டக் கலை

1. கிராமக் கைத்தொழில் வகைகளில் தோட்டத்தொழில் ஒன்ருகும். அத்தொழிலை அறிஞர் நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். அவை (1) பழங்களை உண்டுபண்ணுதல், (2) காய்கறிகளை உண்டுபண்ணுதல், (3) மலர்ச்செடிகளைப் பயிராக்குதல், (4) பூங்காக்களையும் வெளிகளையும் அமைத்தல் என்பன.

2. மேனுடுகள் தோட்டத்தொழிலை ஒரு கலையாக வளர்த்துவருகின்றன; இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்சு, ஹாலந்து, ஐக்கிய நாடுகள், கானடா, மேற்கு இந்தியத் தீவுகள் முதலிய நாடுகளில் தோட்டக்கலை நன்கு வேரூன்றி வளர்ந்து வருகிறது. அந்நாடுகளில் இக்கலையைக் கற்பிக்கப் பல பள்ளிகள் இருக்கின்றன. கல்லூரிகளில் இக்கலை தனிப்பாடமாக அமைந்துள்ளது. மேனுட்டுப் பெண்கள் இக்கலையில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர். மேற்சொல்லப்பட்ட நாடுகளில் தோட்டக்கலை படிப்பளவில் நிற்கவில்லை. 'தோட்டக் கழகங்கள்' எனப் பல கழகங்கள் தோன்றி வேலை செய்துவருகின்றன. குறிப்பிட்ட காலத்தில் எல்லா நாட்டுக் கழகப் பிரதிநிதிகளும் சேர்ந்து 'மாநாடு' நடத்தி இக்கலையை மேலும் மேலும் வளர்த்து வருகின்றனர்.

3. மேல்நாடுகளில் தோட்டக்கலை தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் நூற்றுக்கணக்கானவை என்னலாம். அவை பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. மரம், செடி, கொடிகளை வளர்த்தலைப் பற்றிக் கூறும் நூல்கள், அவற்றுக்குவரும்

நோய்களைப்பற்றிக் கூறும் நூல்கள், பழவகைகளைப்பற்றிக் கூறும் பொதுநூல்கள், ஒவ்வொரு பழத்தைப் பற்றியும் சிறப்பு முறையிற் கூறும் நூல்கள் என்று இவ்வாறு இக்கலை பற்றி வெளிவந்துள்ள நூல்கள் மிகப் பல ஆகும். இவற்றை நோக்க, மேனாட்டு அறிஞர் தோட்டக் கலையைப் பற்றி எந்த அளவு ஆராய்ச்சி செய்திருக்கின்றனர், அதனை எவ்வளவு ஊக்கத்துடன் வளர்த்து வருகின்றனர் என்பன நன்கு தெளிவாகின்றன அல்லவா!

4. மேனாடுகளிலிருந்து நமக்கு ஆப்பில், ஆரஞ்சு முதலிய புதிய பழங்களும், பாடம் செய்யப்பட்ட அத்திப்பழம் திராட்சைப் பழம் முதலிய பழ வகைகளும் வருகின்றன. பாடம் செய்யப்பட்டவை நீண்டநாள்வரை கெடாமல் இருப்பதைப் பார்க்கிறோம். இவை எவ்வாறு கெடாமல் இருக்கின்றன? இவை விஞ்ஞான முறையில் பாடம் செய்யப்பட்டு அனுப்பப்படுவதால் நீண்டகாலம் வரை கெடுவதில்லை. இங்ஙனமே பயிருக்கு வேண்டும் எருவினைத் தேர்வதற்கும், செடிகளை எங்குப் பயிராக்க வேண்டும் என்பதற்கும், எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதற்கும், இருவகைச் செடிகளையோ மரங்களையோ ஒட்டுப் போடுவதற்கும், பயிராக்குவதற்கும், இவை போன்ற பிறவற்றுக்கும் விஞ்ஞான அறிவு தேவையாகும். எனவே, தோட்டக் கலைக்கு விஞ்ஞான அறிவு தேவை என்பது அறியப்படும்.


5. தோட்டக்கலைக்குத் தேவையான விஞ்ஞான நூல்கள் எவை? மரம், செடி, கொடிகள் என்பன சூரிய வெப்பம் வெளிச்சம் இவற்றுடன் எவ்விதத் தொடர்பை உடையவை, பயிர்த்தொழி

லுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள் எவை, அவற்றின் இயக்கத்தை அறிவதெங்ஙனம் என்பன போன்ற விவரங்களைத் தெளிவாகக் கூறவல்லது பூத நூல் என்பது.

தாவரங்கள் எவ்வாறு பிழைக்கின்றன, எங்ஙனம் வளர்கின்றன, எவ்விதம் பெருகுகின்றன, அவற்றுக்கு வரும் நோய்கள் எவை, அந்நோய்களைப் போக்கும் முறைகள் எவை. ஒருவகை மரம், செடி, கொடிகட்கும் மற்றொரு வகை மரம், செடி, கொடிகட்கும் உள்ள தொடர்பு எத்தகையது, நிலத்துக்கும் தட்ப வெப்ப நிலைமைக்கும் ஏற்ப அவை எவ்வாறு மாறுபடுகின்றன, ஒட்டுப்போட்டு நல்ல ராசிகளை உண்டாக்குதல் எவ்வாறு என்பன போன்ற துறைகளைப்பற்றிய அறிவைத் தருவது பயிர் நூல் என்பது. தோட்டத்தொழிலுக்குத் துணை செய்யும் கால் நடைகளை வளர்ப்பது எப்படி, அவற்றை நன்கு வளரச் செய்யும் உணவுப் பொருள்கள் எவை, அவற்றை நோயின்றிப் பாது காத்தல் எங்ஙனம், நோய்களைப் போக்கும் முறைகள் எவை, தோட்டப் பயிர்கட்கு நட்பும் பகையுமாக உள்ள பூச்சி இனங்கள் எவை, பகைப் பூச்சிகளால் பயிர்கட்குத் தீங்கு நேராவண்ணம் காப்பது எப்படி என்பன போன்ற விவரங்களை அறிவிக்கும் நூல் விலங்கு நூல் என்பது.

பயிர்கட்குத் தேவைப்படும் செயற்கை எருக்கள் எவை, அவற்றைத் தயாரிப்பது எங்ஙனம், அவற்றை இட்டுப் பயிரைப் பெருக்குதல் எப்படி என்பன போன்ற செய்திகளைத் தெரிவிக்கும் நூல் வேதி நூல் என்பது.

இந்நூல்களிற் காணப்படும் விவரங்களில்



தோட்டத் தொழில்

ஓரளவேனும் அறிந்திருப்பவரே தோட்டத் தொழிற்குத் தகுதியுடையவர் ஆவர்.

**6. தோட்டத்தொழில் நமக்குத் தேவையா?** பண்டைக் காலத்தில் நமது நாட்டில் மக்கள் தொகை குறைவு. பெரிய நகரங்கள் சிலவே இருந்தன. அக்காலத்தில் ஒவ்வொரு வீட்டிற்குப் பின்புறமும் தோட்டம் இருந்தது. ஒவ்வொரு வீட்டாரும் தமக்குத் தேவையான காய்கறிகளைத் தத்தம் தோட்டத்திலேயே பயிர் செய்துகொண்டனர். இரண்டொருவர் தோட்டத்தொழிலை நடத்தி வந்தனர் என்னலாம். ஆயின், இப்பொழுது நாட்டில் பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ளது. மக்கள் தொகை விரைந்து பெருகிக் கொண்டே வருகிறது. தொழிற்சாலைகளும் இயந்திர சாதனங்களும் வளர்மதி போல வளர்ந்து வருகின்றன. நகரங்கள் பல தோன்றிக்கொண்டே இருக்கின்றன. பழைய நகரங்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன. நகர வீடுகளில் தோட்டங்கள் இல்லை. காய்கறிகளைப் பயிர் செய்ய நகரத்தாருக்கு நேரமுமில்லை. நாள் முழுவதும் வேலை செய்யும் பலவகை அலுவலாளரும் மாலை நேரத்தில் ஓய்வு கொள்ளப் பூங்காக்களும் புல்வெளிகளும் தேவைப்படுகின்றன. கைக்குத்தல் அரிசி சத்துடையது. நாம் உண்ணும் அரிசி இயந்திரத்தில் அரைக்கப்படுவதால் சத்துப் பொருள் இழந்ததாகிறது. காய்கறிகளிலும் பழங்களிலும் உயிர்ச்சத்துப் பொருள்கள் மிக்குள்ளன என்று விஞ்ஞான அறிஞர் கூறுகின்றனர். ஆதலின் காய்கறிகளும் பழங்களுமே நமக்குத் தேவைப்படும் சத்துப்பொருளைத் தரவேண்டுபவை ஆகின்றன. இக்காரணங்களாற்றான் நாம் தோட்டத் தொழிலில்

மிகுந்த கவனம் செலுத்த வேண்டுபவராக இருக்கின்றோம்.

7. சேலம், சித்தூர் ஜில்லாக்களில் பெரிய மாந்தோப்புகள் இருக்கின்றன. புதிய மாமரங்கள் வைத்துப் பயிராக்கப்படும் தோட்டங்களும் உள்ளன. சென்னை மாகாணத்துக்குத் தேவைப்படும் மாம்பழங்களிற் பெரும்பகுதி இந்த இரண்டு ஜில்லாக்களில் உள்ள தோட்டங்களிற்றான் பயிராகின்றன. இத்தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் பெரிய கிணறுகளிலிருந்து நீரை இறைத்த வண்ணம் இருக்கின்றன. இந்த இரண்டு ஜில்லாக்களும் மாம்பழத் தொழிலுக்குப் பெயர் பெற்றவை.

8. சென்னையை அடுத்த சேய்க்காடு, கோடம்பாக்கம் என்னும் இடங்களிலும், பெங்களூரிலும் நல்ல காய்கறித் தோட்டங்கள் இருக்கின்றன. 'பெங்களூர் காய்கறிகள்' பெயர் பெற்றவை. அவை புகை வண்டி மூலமும் லாரிகள் மூலமும் நாடெங்கும் அனுப்பப்படுகின்றன. சாத்ரீய முறையில் காய்கறிகளைப் பயிராக்கும் தொழில் வளர்ச்சி பெறத்தக்க இடங்கள் கிராமங்களே ஆகும். அங்குத் திறந்த வெளிகளில் தோட்டங்களை அமைத்துப் பயிராக்க வசதி இருக்கின்றது.

9. தஞ்சாவூர் ரோஜாத் தோட்டங்கட்குப் பெயர் பெற்ற இடமாகும். அங்குப் பரந்த வெளியில் பெரிய தோட்டங்கள் அமைந்துள்ளன. அங்கு நூறு ரோஜாப்பூக்கள் நான்கணு முதல் எட்டணு வரை விற்கப்படுகின்றன. பல கிராமங்களில் இத்தகைய மலர்த் தோட்டங்கள் வைத்து நடத்தல் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஏற்றதாகும்.

10. சென்னை போன்ற நகரங்களில் பூங்காக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னைக் கடற்கரையில் ஏறக்குறைய இரண்டு கல் நீளம் அழகிய புல்வெளிகளும் மலர்ச்செடி வகைகளும் செவ்வையாக வைத்துப் பயிராக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் மாலை நேரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி ஒய்வு கொள்ளுகின்றனர். கிராமங்களிலும் இத்தகைய பூங்காக்களையும் புல்வெளிகளையும் அமைக்கலாம். நாள் முழுவதும் உடல் வருந்த வேலை செய்யும் உழவரும் தொழிலாளரும் மாலை வேளையில் இனிதாக அமர்ந்து நற்காற்றை நுகர்ந்துகொள்ள இத்தகைய பூங்காக்களும் புல்வெளிகளும் பெரிதும் பயன்படும். தோட்டக்கலை உணர்ச்சி இருப்பின் கிராமத்தார் இவற்றை அமைத்துக்கொண்டு இன்புறலாம்.

### அருஞ்சொற்பொருள்

கலை = கல்வி; சாத்திரம். மாநாடு = பல கழகப் பிரதிநிதிகளும் கூடி நடத்தும் பெருங்கூட்டம். விஞ்ஞான அறிவு = பூதக்கலை வேதிக்கலை முதலிய சாத்திரக்கலை அறிவு. வேதி நூல் = இரசாயன நூல். ராசி = வகை.

### பயிற்சி

I. விடை தருக:—

1. தோட்டத் தொழில் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
2. தோட்டத் தொழில் மேனுடுகளில் எவ்வாறு வளர்ந்து வருகிறது?
3. தோட்டக் கலை பற்றிய நூல்கள் எவை?
4. தோட்டக் கலைக்கு விஞ்ஞான அறிவு தேவை என்பது எவ்வாறு பொருந்தும்?
5. தோட்டக் கலைக்குத் தேவையான நூல்வகைகள் எவை?

6. ஒவ்வொரு வகை நூல்களும் தோட்டக் கலைக்கு எவ்வாறு தொடர்புடையன ஆகும்?
7. தோட்டத் தொழில் நமக்குத் தேவையானதா?
8. மாம்பழத் தொழில் எங்கு மிகுதியாக நடைபெறுகிறது? எவ்வாறு நடைபெறுகிறது?
9. காய்கறித் தோட்டங்களைப் பற்றி நீவிர் அறிந்ததைக் கூறுக.
10. மலர்த் தோட்டங்களைப் பற்றி யாது அறிவீர்?

II. வாக்கியங்களில் அமைக்க:—

1. இயற்கை × செயற்கை, தட்பம் × வெப்பம், உழைப்பு × ஓய்வு.
2. பரந்த வெளி, இறைத்தவண்ணம், உயிர்ச்சத்து, கல்லூரி, மாநாடு.

III. நீவிர் நேரிற் பார்த்த பழத்தோட்டம், காய்கறித் தோட்டம், மலர்த் தோட்டம் இவற்றில் ஒன்றைப்பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

# 18. குமண வள்ளல்

(நாடகம்)

## காட்சி 1

முதிரமலைத் தலைவனான குமண வள்ளல் தன் அரச மண்டபத்தில் இருக்கின்றான். அமைச்சர், சேனைத் தலைவர் முதலியோர் இருக்கின்றனர்.

**குமணன் :** (முதல் அமைச்சரைப் பார்த்து) முதல் அமைச்சரே, நீர் நமது நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து மீண்டீர் அல்லவா ?

**மு. அ :** ஆம், அரசே ?

**குமணன் :** இவ்வாண்டில் பயிர் விளைவு எப்படி இருக்கிறது ?

**மு. அ :** இவ்வாண்டு தொடக்கத்தில் நாம் பெரிய குளங்களைப் பல இடங்களில் வெட்டுவித்தோம் ; வயல்கட்கு நீர் கொண்டு செல்லத் தக்க கால்வாய்கள் பலவற்றைப் புதியனவாக வெட்டுவித்தோம். ஆதலால் சென்ற ஆண்டு விளைவைவிட இந்த ஆண்டு விளைவு மிகுதியாகும் என்பதில் ஐயமில்லை.

**குமணன் :** மிக்க மகிழ்ச்சி. நம் குடிமக்கள் நமது அரசாட்சியைப்பற்றி என்ன பேசுகிறார்கள் ?

**மு. அ :** குடிமக்கள் நமது அரசாட்சியை மனமாரப் பாராட்டுகின்றனர். நாம் ஆண்டுதோறும் அவர்கள் நன்மைக்காகப் பல துறைகளிலும் பாடுபட்டு வருவதே அவர்கள் பாராட்டுக்குக் காரணம் ஆகும்.

**குமணன் :** நமது நாட்டில் வீடு இல்லாத மக்களுக்கு வீடுகள் கட்டித் தர ஆணை பிறப்பித்தோமே. அந்த ஆணைப்படி அனைவரும் வீடுகளைப் பெற்றனரா ?

மு. அ : அரசே, அத்திட்டம் சென்ற ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றுவந்து இவ்வாண்டு முடிவுற்றது. இப்பொழுது வீடற்ற ஒரு குடும்பமும் நமது நாட்டில் இல்லை. எல்லா மக்களும் இத்திட்டத்தைப் பாராட்டிப் பேசுகின்றனர்.

குமணன் : (எல்லோரையும் பார்த்து) அமைச்சர்களே, தானைத் தலைவர்களே, பெருமக்களே, உங்கள் மனமார்ந்த ஒத்துழைப்பினால் நான் நம் குடிகட்குக் காவலனாக இருந்து வருகிறேன். எனது எட்டாண்டு ஆட்சியில் கரம்பு நிலங்கள் விளை நிலங்களாக மாறின; தண்ணீர் இல்லாத பல ஊர்கள் நன்னீர்க் குளங்களைப் பெற்றன; ஆண்டுதோறும் விளைவு மிகுதிப் பட்டு வருகிறது. கைத்தொழில்களும் வளர்ச்சி பெற்று வருகின்றன. இவ்விரண்டினாலும் நம் மக்கள் வறுமையின்றி வாழ்வதைக் காண நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். (முதல் அமைச்சரைப் பார்த்து) நமது நாட்டில் கல்வி நிலை எப்படி இருக்கிறது ?

மு. அ : பெருமானே, ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம் இருக்கின்றது. பிள்ளைகள் மிக்க ஆவலுடன் கல்வி கற்று வருகின்றனர்; 'எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்' என்பதைக் கிராம மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

குமணன் : நமது தாய் மொழியாகிய தமிழ் நன்றாக வளர வேண்டும் என்பது எனது ஆவல். நமது தமிழ் இயல்-இசை-நாடகம் என மூவகைப்படும் அல்லவா ? இயற்றமிழுக்கு உரிய புலவரும் இசைத் தமிழுக்கு உரிய பாணரும், நாடகத் தமிழுக்கு உரிய கூத்தரும்

நன்கு போற்றப்பட்டால்தான் முத்தமிழ் செழித்து வளரும். நாம் இதுவரை இம்மூவகை அறிஞரையும் போற்றி வந்திருக்கின்றோம்; இனியும் அவ்வாறே செய்வோம். தமிழைப் போற்றி வளர்க்காதார் தமிழர் ஆகார் அல்லவா?

மூ. அ: அரசே, முத்தமிழ் அறிஞரை நாம் போற்றிப் பாதுகாக்கும் அளவு வேறு எந்த அரசரும் பாதுகாப்பதில்லை என்று நம் அரண்மனைக்கு வந்து மீண்ட முத்தமிழ் அறிஞர்களே சொல்லக் கேட்டிருக்கிறேன். தங்கள் தொண்டர்களாகிய நாங்களும் தமிழர்கள். ஆதலால், எங்களால் இயலும் அளவு முத்தமிழ் அறிஞரை ஆதரித்து வருகிறோம் என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## காட்சி 2

[குமணன் தம்பியாகிய இளங்குமணன் குமணனைக் கொன்று அரசைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்தான். அதனை உணர்ந்த குமணன் காட்டிற்கு ஓடிவிட்டான். இளங்குமணன் அரியணை ஏறினன். மன்னன்மீது பற்றுக்கொண்ட பெருமக்கள் சிலர் அவனுக்கு வேண்டிய உணவினை மட்டும் தவறாது அனுப்பி வந்தனர். அந்நிலையில் குமணனைக் கண்டு பரிசில் பெற விரும்பிப் பெருந்தலைச் சாத்தனர் என்ற புலவர் அரண்மனைக்குச் சென்றார்; தாம் தேடி வந்த வள்ளல் அரசு துறந்து காட்டில் இருப்பதைக் கேள்வியுற்றார்; இளங்குமணனைக் காண மனம் வாராது காடு சென்றார்; மிக அரிதின் முயன்று குமணனைக் கண்டார்.]

புலவர்: அரசர் பெருமானே, நான் ஒரு புலவன். தங்களைக் காணத் தலைநகரம் சென்றேன்; தாங்கள் இங்கு இருப்பதை அறிந்து வந்தேன்.

**குமணன் :** புலவரே, உமது வரவு நல்வரவாகுக. நீர் எந்த நாட்டீர், எவ்வூரீர் ?

**புலவர் :** அரசரே, நான் புலவர் மரபில் வந்தவன். நானும் ஓரளவு தமிழ் வாசித்தவன். என்னை யும் புலவர் என்று மக்கள் கூறுவர்.

**குமணன் :** ஐயா, நீர் புலவர் மரபினர் என்பது கேட்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

**புலவர் :** பெருமானே, புலமை இருந்து பயன் என்ன ? புலமையுடன் வறுமை தொடர்ந்து வருகிறதே ! வறுமைக் கொடுமை புலவரை அன்றோ அடைக்கலமாகக் கொண்டிருக்கிறது! என் வீட்டில் சமைத்தல் தொழில் இல்லாமை யால் அடுப்பில் காளான் பூத்துக் கிடக்கின்றது. போதிய உணவு இல்லாததால் என் மனைவி உடல் வற்றிக் கிடக்கின்றாள். அவள் அந்த நிலையில் இருப்பதால் தாய்ப்பால் பருக வழி யின்றி என் குழந்தை அழுகை ஓய்வதில்லை. இவ்வாறு அழும் குழந்தை தாய் முகம் நோக்க, தாய் ' இதற்கு என் செய்வது ?' என்ற முறை யில் என் முகம் நோக்க, யான் தங்கள் முகம் நோக்க ஓடிவந்தேன் ; வந்த நேரம் சரியன்று. தாங்கள் முடிதுறந்து அடி நோவக் காட்டில் அலைகின்றீர்கள். இந்தக் காலத்தில் வர நேர்ந்தமை என் தவக்குறையே ஆகும்.

**குமணன் :** புலவரே, உமது வறிய நிலையைக் கேட்டு உள்ளம் உருகுகின்றது. நான் அரி யணை மீது இருந்து புலவர் மனம் குளிரப் பொருள் கொடுத்த காலத்தில் நீர் வரவில்லை. நான் உயிருக்கு அஞ்சிக் காட்டில் அலையும் இத்துன்பக் காலத்தில் நீர் வந்து துன்புறு

கிறீர். உமது துன்பத்தை எவ்வாறு போக்கு வேன்! (சிறிது நேரம் யோசித்து) சரி, நான் கூறுவதைக் கேளும்: என் தலையைக் கொண்டு வருபவர்க்குத் தக்க பரிசு தருவதாக என் அருமைத் தம்பி அறிவித்திருக்கிறான். ஆத லால், நீவிர் என் தலையை அறுத்துச் சென்று அவனிடம் கொடும்; அவன் பரிசளிப்பான்? உமது வறுமை நீங்கும். கொலையஞ்சான் ஒருவன் என்னைக் கொன்று என் தலையைக்



குமணனும் பெருந்தலைச் சாத்தனரும்

காட்டிப் பரிசு பெறுவதைவிட, அறிவும் கல்வி யும் ஒழுக்கமும் உடைய புலவராகிய நீர் என்னைக் கொல்லின், யான் மன அமைதி பெறுவேன்; என் தலை ஒரு புலவர் குடும்பத் தின் வறுமையைப் போக்கியது என்று மகிழ்

வேன். ஆதலின் ஐய, அன்புகூர்ந்து, மறு மொழி கூருது, என் தலையை இந்த வாளால் அரிந்து எடுத்துச் செல்க.

(அரசன் வாளைத் தருதல்.)

புலவர் : ('நாம் இந்த வாளை வாங்காவிடில் இவ் வரசர் இதனுல் தம் தலையை அறுத்துகொள்ளக் கூடும்' என்று எண்ணி வாளை வாங்கிக்கொண் டார்). அரசர் பெருமானே, நான் இந்த வாளுடன் செல்வேன்; தங்கள் தம்பியை இங்கு அழைத்து வருவேன்; தம்மை அரியணை யில் இருத்துவேன்; போய் வருவேன். (குமணனை வணங்கிப் போதல்.)

### அருஞ்சொற்பொருள்

முதிரமலை = கோவன்புத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டைத் தாலுகாவில் உள்ளது. கரம்பு நிலம் = விளைவற்ற நிலம். எண் = கணக்கு. இயற்றமிழ் = செய்யுளும் வசனமும் ஆகிய தமிழ். புலமை = அறிவு. மறுமொழி = பதில் வார்த்தை.

### பயிற்சி

I. விடை தருக :—

1. குமணன் குடிகட்குச் செய்த நலன்கள் யாவை ?
2. முத்தமிழ்—எவை ? முத்தமிழ் அறிஞர் யாவர் ?
3. குமணன் தமிழ்ப்பற்று மிக்கவன் என்பது எதனுல் தெரிகிறது ?
4. அவன் உத்தியோகஸ்தரும் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பதற்குச் சான்று யாது ?
5. குமணன் ஏன் காடு புகுந்தான் ?
6. புலவர் தம் வறுமையை எவ்வாறு விளக்கினர் ?
7. குமணன் அவர் வறுமையைப் போக்கக் கூறிய வழி யாது? அவன் அதனை எவ்வாறு எடுத்துரைத்தான்?
8. புலவர் யாது கூறி அகன்ருர் ?

II. வாக்கியங்களில் அமைக்க :—

முத்தமிழ், மறுமொழி, பலதுறை, விளைவு.

# செய்யுட் பகுதி

## I. கடவுள் வாழ்த்து

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (1)

—திருநாவுக்கரசர்

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம். (2)

—வில்லிபுத்தூர் ஆழ்வார்

### அருஞ்சொற்பொருள்

1. மன்னி = பொருந்தி. மேலை = முற்பிறப்பு.

2. வில்லிபுத்தூர் ஆழ்வார் என்பவர் சிறந்த வைணவப் பெரியார் ; பெருந்தவப் புலவர்: 500 ஆண்டுகட்கு முற்பட்டவர். இவர் பாரத வரலாற்றை 4440 பாக்களில் பாடியுள்ளார்.

ஆழி = சக்கரம். முகில் = மேகம். வண்ணன் = நிறத்தவன். முளரி = தாமரை. இறைஞ்சி = துதித்து.

# II. இயற்கை அழகு

## குற்றாலக் குறவஞ்சி

### குறத்தி மலைவளம் கூறுதல்

கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே!
கனகமக மேருவென நிற்குமலை அம்மே!
சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே!
சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே!
வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே!
வாளிரவி குழைகளூடு நுழையுமலை அம்மே!
துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடுந்
துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே! (1)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும். (2)

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும். (3)

கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. (4)

—திரிகூடராசப்பக் கவிராயர்

திருக்குற்றாலம் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சிவத்தலம். அவ்வூரைப் பற்றிய குறவஞ்சி என்னும் நூல் குற்றாலக் குறவஞ்சி எனப்படும். இதனைப் பாடிய திரிகூட ராசப்பக் கவிராயர் திருக்குற்றாலத்துக்குப் பக்கத்து ஊரினர்; 18 ஆம் நூற்றாண்டினர்; திருக்குற்றாலத்தைக் குறித்து 14 நூல்கள் பாடியுள்ளார். குறவஞ்சி = குறப்பெண், குறத்திப் பாட்டு; இப் பாட்டில் குற்றால மலைவளம் கூறப்பட்டுள்ளது.

1. கனக = பொன்மயமான. சயிலமலை = குற்றாலத்துக்குத் தெற்கில் உள்ளது. வாள் = ஒளி பொருந்திய. குழைகள் = தளிர்கள். துங்கர் = தூய்மையானவர், சிவபெருமான். துயிலுமவர் = திருமால் (சிவபெருமானைத் தேடினார் என்பது கதை).

2. மந்தி = பெண் குரங்கு. வான்கவிகள் = பெரிய குரங்குகள்.

3. அலர் = மலர். 4. கூனல் = வளைந்த. வேணி = சடை.

# III. அறவுரை

## 1. சதகத் திரட்டு

### (1) குமரேச சதகம்

#### செல்வச் சிறப்பு

திருமகள்க டாட்சமுண் டானல் எவர்க்கும்
சிறப்புண்டு ; கனதை யுண்டு ;
சென்றவழி எல்லாம் பெரும்பாதை யாய்விடும் ;
செல்லாத வார்த்தை செல்லும் ;
பொருதொரு துரும்புமரி யாதையாம் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம் ;
புவியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேச மாவார் ;
பெருமையொடு சாதியில் உயர்ச்சிதரும் ; அனுதினம்
பேரும் ப்ரதிட்டை உண்டாம் ;
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான் ;
பேச்சினில் பிழைவ ராது ;
வருகஎன நினைத்தபொருள் கைகூடி வரும் ; அதிக
வல்லமைகள் மிகவும் உண்டாம் ;
மயிலேறி விளையாடு குகனே !புல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே !

—குருபாத தாசர்

### (2) திருவேங்கட சதகம்

#### மனிதர்க்கு வேண்டுவன

புருஷராய்ச் சநநம தெடுத்தபேர் மெய்ஞ்ஞான
போதத்தை அறிவதொன்று ;
பூமியொடு மிக்கதன வானுவ தொன்று ; அலது
பூவலம் செய்வதொன்று ;

தருமவான் ஒன்று ; மிகு கீர்த்திமான் ஒன்று ; நற்
சற்குண விவேகி ஒன்று ;
சகலரும் புகழ்கின்ற வித்துவான் ஒன்று ; ரண
சங்க்ராம வீரன் ஒன்று ;
கருணைசேர் இந்தவகை இல்லாத மனிதரைக்
காசினியில் ஏன் படைத்தாய் ?
கருதுதாய் உதரமும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களும் செய்தவினையோ
மருவுலா வியதுளப மாலையணி மார்பனே ?
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே.

—நாராயண பாரதியார்

## (3) அறப்பளீசுவர சதகம்

### செய்ய வேண்டுவன

புண்ணிய வசத்தினால் செல்வமது வரவேண்டும் ;
பொருளை ரட்சிக்கவேண்டும் ;
புத்தியுடன் அதுவொன்று நூருக வேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும் ;
உண்ணவேண்டும் ; பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்கவேண்டும் ;
உற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
ஓங்குபுகழ் தேடவேண்டும் ;
மண்ணில்வெகு தருமங்கள் செய்யவேண்டும்; மோக்ஷ
வழியினைத் தேடவேண்டும் ;
வலிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம் ;

அண்ணலே! கங்காகு லத்தலைவன் மோழைதரும்
அழகனெம தருமை மதவேள்!
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீச் சுரதேவனே!

—அம்பலவாணக் கவிராயர்

நூறு செய்யுட்களைக் கொண்டது சதகம்.

1. திருமகள் = இலக்குமி; செல்வம். கனதை = சிறப்பு. பிரதிட்டை யுண்டாம் = நிலைபெறும். 'இச்சிறப்புக்கள் உண்டாதலின் பொருளை ஈட்டுக' என்பது நீதி.

2. சநநம் அது எடுத்தபேர் = பிறந்தவர். போதம் = அறிவு. பூவலம் = உலகைச் சுற்றிவருவது. காசினி = பூமி. உதரம் = வயிறு. மரு = வாசனை. வரதன் = அருள் செய்பவன். வேங்கடராயன் = வேங்கடமலைத் தலைவன். அலர்மேல்.மங்கை = இலக்குமி. வேங்கடத்தருகில் அலர்மேல் மங்கைபுரம் என்னும் ஊர் உள்ளது. அவ்வூரில் அலர்மேல்மங்கை அம்மன் கோவில் இருக்கிறது.

3. போதவும் = மிகவும். வறிதில் = வீணுக. தரு = மரங்கள். கிரி = மலை.

## 2. நன்னெறி

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே;—பொன்செய்(து)
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (1)

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க;—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (2)

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல்உதவி தாம்செய்வர்;—அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. (3)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் ;—நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று காக்கும் கடிது. (4)

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள் ;
மற்றவர்தாம் என்றும் மதியாரே ;—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் ! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (5)

—சிவப்பிரகாச அடிகள்

ஆசிரியர் சிவப்பிரகாச அடிகள் வீர சைவர் ; துறவறத்தினர் ; சுமார் முந்நூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர். இவர் செய்துள்ள நூல்கள் மிகப் பல.

நன்னெறி = மனிதர் அறிந்து நடந்துகொள்ள வேண்டும் வழிகளைக் கூறும் நாற்பது வெண்பாக்களைக் கொண்ட நீதி நூல்.

1. இருநீர் = மிக்க நீரையுடைய கடல். வியன் = பரந்த. உலகம் = உலகத்து மக்கள். இன்சொல் × வன்சொல். வளையாய் வளையலை அணிந்த பெண்ணே. இவ்வாறு பெண்ணை முன்னிலைப் படுத்தல் மகடூஉ முன்னிலை எனப்படும். மகடூஉ முன்னிலை × ஆடூஉ முன்னிலை. அழல் = வெப்பம். கதிர் = சூரியன். தண்ணென் கதிர் = குளிர்ச்சியைச் செய்யும் சந்திரன்.

2. எரி = நெருப்பு. இழுது = நெய். தெரியிழாய் = ஆராய்ந்தெடுத்த நகைகளை அணிந்தவளே. மண்டுபிணி = மிக்கநோய். கலுழும் = அழும். பின் இரண்டு அடிகள் உவமானம் ; முன் இரண்டடிகள் உவமேயம்.

3. கைம்மாறு = பதில் உதவி. உகவாமல் = விரும்பாமல். இயல் = செய்யமுடியும். எயிறு = பல். முதிர்சுவை = மிக்க ருசி. அம்மா ! = முன்னிலை அசைச்சொல். பின் இரண்டு அடிகள் உவமானம் ; முன் இரண்டடிகள் உவமேயம்.

4. பேரறிஞர் = பெருமை + அறிஞர் ; அறிவிற் சிறந்த பெருமக்கள். நேர் = அழகு. இழாய் = நகை அணிந்தவளே. கடிது = விரைந்து. பின் இரண்டடிகள் உவமானம் ; முன் இரண்டு அடிகள் உவமேயம்.

5. காமுறுவர் = விரும்புவர். மற்றவர் = கீழ்மக்கள். வேண்டும் = ஒத்திருக்கும். வாள் = ஒளி. புளிங்காடி = புளித்த காடி நீர். வேண்டும் = விரும்பும். பின் இரண்டடிகள் உவமானம்; முன் இரண்டும் உவமேயம்.

## 3. இனியவை நாற்பது

பிச்சைபுக் காயினும் கற்றல் மிகஇனிதே ;
நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே ;
முத்தேர் முறுவலார் சொல்லினி(து) ; ஆங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு. (1)

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே ;
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே ;
எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. (2)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே ;
அறம்புரிந்(து) அல்லவை நீக்கல் இனிதே ;
மறந்தேயும் மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்தல் இனிது. (3)

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே ;
தானம் அழியாமை தான்அடங்கி வாழ்வினிதே ;
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. (4)

வருவாய் அறிந்து வழங்கல் இனிதே ;
ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே ;
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. (5)

—பூதஞ் சேந்தனார்

இந்நூல் மனிதர்க்கு இனிமை தரத்தக்க நாற்பது வெண் பாக்களைக் கொண்டது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல் களில் ஒன்று. இதன் ஆசிரியர் காலம் சுமார் கி. பி. 6-ஆம் நூற்றண்டென்பர்.

1. அவை=சபை. கைகொடுத்தல்=உதவுதல். சாலவும்= மிகவும். முன்=முற்பட. ஏர்=அழகு. முறுவல்=பல். தெற்ற=தெளிவாக.

2. கையிகந்து=நீக்கி. உயர்வு உள்ளி=மேன்மேலும் உயர்தலை எண்ணி. ஒளிபட=புகழ் உண்டாக.

3. வெளவான் = அபகரியாதவனய். அல்லவை = தீய செயல்கள். மறந்தேயும்=மறந்தாயினும். மாணு=மாட்சிமைப் படாத. மயரிகள்=அறிவில்லாதவர்கள். சேராத்திறம் தெரிந்து =சேராத வழிகளை ஆராய்ந்தறிந்து.

4. மானம்=பெருமை. தானம்=தான் இருந்துவாழும் இருப்பு; ஸ்தானம். ஊனம்=குற்றம்.

5. வருவாய்=பொருள் வரும் வழி; இங்கு அதன் அளவு. பங்கு=பக்கம். ஆகாத=சாராத. ஊக்கம்=மன எழுச்சி. பெருவகைத்து=பெரும்பயனை உடையது. பெட்டவை = விரும்பியவை. செய்யார் = ஆராயாமல் செய்யாதவராய். திரிபு இன்றி=இயல்பில் வேறுபடாமல்.

## 4. திருக்குறள்

இனிய வுளவாக இன்னுத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (1)

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (2)

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (3)

இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (4)

கண்ணுடையர் என்போர் கற்ருேர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (5)

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (6)

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. (7)

உடையர் எனப்படுவ(து) ஊக்கம் ; அஃதில்லார்
உடைய(து) உடையரோ மற்று ? (8)

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (9)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்தியது
அற்றது போற்றி உணின். (10)

—திருவள்ளுவர்

திருக்குறள் - குறள் (இரண்டடி) வெண்பாக்களால் ஆகிய அழகிய (சிறந்த) நூல். இது 1330 குறட்பாக்களைக் கொண்டது; எல்லோருக்கும் ஒத்த நீதிகளைக் கூறுவது. இஃது ஆங்கிலம் முதலிய பல மேனுட்டு மொழிகளிலும், தெலுங்கு முதலிய இந்திய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் காலம் பலர் பலவாறு கூறுவர். இதன் காலம் சுமார் கி. பி. 2-ஆம் நூற்ருண்டு என்று பலர் கருதுகிருர்கள்.

1. இனிய = பிறரை இன்புறுத்தும் சொற்கள். இன்ஞத = இன்புறுத்தாத சொற்கள். இனிய × இன்ஞத.

2. யா = எவற்றை. நா = நாவினை. இழுக்கு = குற்றம். சோகாப்பர் = தாமே துன்பம் அடைவர்.

3. பொய்யாது = பொய்யை நினையாது. ஒழுகின் = நடந்தால். ஒருவன் தன் மனமறியப் பொய்யில்லாது நடப்பின் உயர்ந்தவனுக மதிக்கப்படுவான்.

4. இன்ஞ = துன்பம். ஒறுத்தல் = தண்டித்தல். அவர் = அத்துன்பம் செய்தவர். நல்நயம் = நல்ல உபகாரம்.

5. கண்ணுடையவர் கல்வி கற்றவரே. கல்வியில்லாதவர் கண் இல்லாதவர்.

6. எல்லாம்=எல்லாச் செல்வங்களையும். என்னுடைய ரேனும்=அறிவைத் தவிர வேறு எல்லாப் பொருள்களையும் உடையவராயினும். இலர்=ஒரு பொருளும் இல்லாதவர்.

7. கருமம்=செயல். எண்ணி = பயனை நினைத்து. துணிந்த பின் = தொடங்கிய பிறகு. எண்ணுவம்=ஆலோசிப் போம்.

8. உடையர் = செல்வத்தை உடையவர். ஊக்கம் = முயற்சி. உடையது = உடையனவாகிய பொருள்களைப் பெற்றிருந்தும். உடையரோ=உடையவர் ஆகார். ஊக்கம் இல்லாதவர் எவற்றைப் பெற்றிருந்தாலும் செல்வர் ஆகார்.

9. உறுபசி=மிக்க பசி. ஓவா=நீங்காத. செறு=அழிவு செய்யும். சேராது இயல்வது=அடையாது நடப்பது. நாடு= சிறந்த நாடாகும்.

10. அருந்தியது = உண்டவுணவு. அற்றது = ஜீரண மானது. போற்றி=தெளிய அறிந்து.

# IV. தொடர்நிலைச் செய்யுள்

## 1. கண்ணன்–என் வேலையாள்

### வேலையாட்கள் இயல்பு

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெல்லாம் தாம்மறப்பார்.
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார் ;
'ஏனடா நீ நேற்றைக் கிங்குவர வில்லை ?' என்றால்
'பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்த' தென்பார் ;
'வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்த' தென்பார் ;
'பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாள்' என்பார்;
ஓயாமல் பொய்யுரைப்பார் ; ஒன்றுரைக்க வேறுசெய்வார் ;
தாயாதி யோடே தனியிடத்தே பேசிடுவார் ;
உன்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்ப லத்துரைப்பார் ;
என்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார் ;
சேவகராற் பட்ட சிரமமிக வுண்டுகண்டீர் ;
சேவகரில் லாவிடிலோ செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்,

### புதிய வேலையாள்

எங்கிருந்தோ வந்தான்; "இடைச்சாதி நான்" என்றான்;
"மாடுகன்று மேய்த்திடுவேன் ; மக்களை நான் காத்திடுவேன் ;
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன் ;
சொன்னபடி கேட்பேன் ; துணிமணிகள் காத்திடுவேன் ;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன் ;
காட்டுவழி யானாலும் கள்வர்பய மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை ; தேவரீர் தம்முடனே
சுற்றுவேன், தங்கட்குத் துன்பமுறா மற்காப்பேன் ;
கற்றவித்தை ஏதுமில்லை ; காட்டு மனிதனையே !
ஆனபொழு துங்கோல் அடிக்குத்துப் போர்மற்போர்

நானறிவேன் ; சற்றும் நயவஞ் சனைபுரியேன்,''
என்றுபல சொல்லிநின்றான். 'ஏது பெயர்? சொல்' என்றேன்.
"ஒன்றுமில்லை கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை''
கட்டுறுதி உள்ளவுடல் கண்ணிலே நல்லகுணம் [என்றான்.
ஒட்டுறவே நன்றா வுரைத்திடுஞ்சொல் இங்கிவற்றால்
தக்கவன்என் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
" மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகின்றாய்;
கூலிஎன்ன கேட்கின்றாய்? கூறு'' கென்றேன் ; " ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏதுமில்லை ;
நானோர் தனியாள் நரைதிரைதோன் றாவிடினும்
ஆன வயதிற் களவில்லை ; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை ; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை'' என்றான்.
பண்டைக் காலத்துப் பைத்தியத்தில் ஒன்றெனவே
கண்டு மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன் ; அன்று முதற்கொண்டு

### உண்மையுள்ள வேலையாள்

நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரப் பார்க்கின்றேன் கண்ணனாற்
பெற்றவரு நன்மையெல்லாம் பேசி முடியாது ;
கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல் என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான் ; வாய்முணுத்தல் கண்டறியேன் ;
வீடு பெருக்குகிறான் ; வீதிசுத்த மாக்குகிறான் ;
தாதியர்செய் குற்றமெல்லாம் தட்டி அடக்குகிறான் ;
மக்களுக்கு வாத்தி வளர்ப்புத்தாய் வயித்தியனாய்
ஒக்கநயம் காட்டுகின்றான் ; ஒன்றும் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போல் பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனுமாய்ப்

பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் ; இடைச்சாதி என்றுசொன்னான்;
இங்கிவனை யான்பெறவே என்னதவம் செய்துவிட்டேன் !
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன்பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்சிறப்பு, நற்கீர்த்தி
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றுசொல்லும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண் ;
கண்ணனை நான் ஆட்கொண்டேன் ; கண்டுகொண்டேன் ;
கண்டுகொண்டேன் ;
கண்ணனை ஆட்கொள்ளக் காரணமும் உள்ளனவே.

—சுப்பிரமணிய பாரதியார்

இப்பாடற் பகுதி கண்ணன் பாட்டு என்னும் நூலைச் சேர்ந்தது. தாயாதி=பங்காளி. ஊர் அம்பலம்=ஊர்ப் பொது இடம். முரசு அறைவார்=நன்கு வெளிப்படுத்துவர். இடர்= துன்பம். காதல்=அன்பு. சந்ததிகள்=பிள்ளைகள். ஒக்க= சமமாக. பண்பு=குணம். அகம்=வீடு. விசாரம்=கவலை.

## 2. குரங்கு பழிவாங்கிய கதை

தவமிகு மயோத்தி யாளுஞ் சந்திர சேனன் றன்சேய்
கவிகளி னுடல் காணுங் கருத்தறிந் தொருசா லைக்கண்
சவிபெறு குரங்க னேகந் தான்வளர்த் திடுமந் நாளில்
புவிபுக ழரச னேவல் புரிபவர் சண்டை யிட்டார். (1)

ஒருகுரங் கதுகேட் டுத்தன்
உறவினர்க் குரைக்கும்: "இப்போர்
பெருகுறில் தீதாம் ; மற்றோர்
வனத்தில்நாம் பெயர்வோம்," என்ன
உரைசெயக் "கிழநின் சொற்கேட்
டுண்பதை யறோம்," என்றேவா
னரமெலாம் இகழ்ந்து பேச,
நடுங்கியங் கவரை விட்டே, (2)

தன்குடும் பத்தி னேடோர் கானிடைச் சார்ந்த தப்பால்
பின்பொரு நாளச் சண்டை பெரிதுற, அவரி லேயோர்
வன்பினன் கொள்ளிக் கட்டை மற்றவன் மேலே வீச,
முன்புறு குதிரைச் சாலை மேலது மூண்ட தன்றே. (3)

சாலையு மெரிய வாசி தாஞ்சில விறந்த ; எண்ணில்
கோலவெம் புரவி தீயிற் கொண்டன காயம் ; மன்னன்
பாலடைந் ததனைக் காப்போர் பகர்தலும், அந்நோய்
தீர்க்கும்
சீலனை யழைத்து மாக்கள் தீயினேய் நீக்கு கென்ருன். (4)

மருத்துவன், " குரங்கு நெய்யால் அன்றிநோய் மாயா "
தென்ருன் ;
செருத்தொழி லிறைவன் " சாலை சேர்ந்துள குரங்கை
யெல்லாம்
வருத்தியந் நெய்யைக் கொண்டு வாசிநோய் வாசி
யாக் "கென்
றுரைத்தனன் ; அவ்வா றேநோ யொழித்தனர் மருத்து
நூலோர். (5)

" இப்பழி யிறையிடத்தே வாங்குவேன் !" என்று முன்
போய்த்
தப்பிய கிழக்கு ரங்கு தன்மனம் பதைத்தே யெண்ணி
ஒப்பிலாப் பெருங்கா னத்தி லொருகுள மிருக்கக் கண்டு
வெப்புறு பேயொன் றிங்கு மேவவே வேண்டு மென்றே, (6)

எண்ணியக் குளத்திற் கஞ்சத் தாளினு லிருநீ ருண்ண
நண்ணிய பேய்கண் டங்கு நணுகி, ' நின் பெருமை
கண்டுன்
கண்ணெதிர்ப் பட்டேன்," என்று கழுத்துறு மாலை
தன்னைத்
துண்ணென வெடுத்து நல்க வாங்கியே, சொலுங்கு
ரங்கே : (7)

"எவ்வள விந்த நீரி லுனக்குள வலிமை?" என்னச்
"செவ்வியோய்! இந்த நீரி லாயிரம் பேர்சேர்ந் தாலும்
கைவலித் துண்டற் கான சக்தியென் கண்ணுண்" டென்ன,
இவ்விடம் புசிப்பு னக்கே யான்கொடு வருவேன்"
என்றே, (8)

மாலையைக் கழுத்திற் பூண்டு வானர மகன்று வேந்தன்
பாலடைந் திடவு மன்னன் பார்த் "திந்த மணியின் மாலை
சீலனே! எங்குச் சம்பா தித்தனை!" எனக்கு ரங்கு,
"கோலமா ரொருகா னத்திற் குளந்தானென் றுளது
மன்ன! (9)

"அக்குளந் தன்னிற் காலை அடைந்துமுன் குதிப்போர்க்
கெல்லாம்
இக்கதிர் மணிக ளெய்தும்," எனச்சொல, 'யானு மெய்தித்
திக்கொளி விரிக்குஞ் சோதிச் செழுமணி பெறுவேன்" என்று
புக்கவக் குரங்கி னோடும் போயினன் சேனை சூழ. (10)

போனபின், "இதுவே காலம்; புகுந்தநின் சேனையெல்லாம்
கானவிர் மலர்த்த டத்திற் களிப்பொடு குதித்துத் தங்கட்
கான நன் மணிகள் கொண்ட பின்னரே யரச! நீயும்
நானுமொண் மணிகள் கொள்வோம்" என்றதந் நாகந்
தானே. (11)

"அப்படி யாக," என்றே யரசனுஞ் சேனை யோரைக்
"குப்புறு" கென்ன வோதக் குதித்தலு மவரைப் பற்றித்
துப்புறு பூதந் தானுந் தொடர்ந்திழுத் துண்ட தங்கே;
தப்புறு வேந்தன் தானும் தடத்திடைக் காத்தி
ருந்தான். (12)

நெடும்பொழு தங்குக் காத்தும் நீரிடைக் குதித்த சேனை
அடங்கலும் வராமை கண்டே யரசனக் குரங்கை நோக்கித்
"தடந்தனிற் குதித்த சேனை சார்ந்தில தென்னே?"
என்றான்.

நடந்தொரு மரத்தின் கொம்பி னுகமுன்னே றிச் சொல்லும்:
(13)

"கொழிபுகழ் வேந்த னே! எங்குலத்தையெல் லாநீ கொன்ற பழிதனை வாங்க வந்தேன் ; முடித்தனன்; பண்டு நின்சோ றழிபசிக் குண்டே னுத லாலுன்னை விடுத்தேன்" என்று மொழிதர, இரங்கி வேந்தன் முந்துதன் னகர்புக் கானே. (14)

—வீரமார்த்தாண்ட தேவர்

1. சேய் = மகன். கவி = குரங்கு. சவி = அழகு. புரிபவர் = செய்பவர்.

2. அருேம் = விடோம், தன்மைப் பன்மை வினைமுற்று.

3. வன்பினன் = வம்புக்காரன்.

4. வாசி = குதிரை, புரவி = குதிரை. பால் = இடம். சீலன் = வயித்தியன். மாக்கள் = விலங்குகள் (குதிரைகள்).

5. செரு = போர். இறைவன் = தலைவன் (அரசன்). வாசி = குதிரை. வாசியாக்குக = குணப்படுத்துக. மருத்து நூலோர் = வைத்திய நூல்களில் வல்லவர்.

6. இறை = அரசன். வெப்பு = கோபம்.

7. கஞ்சம் = தாமரை. தாள் = தண்டு. இருநீர் = மிக்கநீர். நணுகி = நெருங்கி. உறு = பொருந்திய. துண்ணென = விரைவாக.

8. என் கண் = என்னிடம். புசிப்பு = உணவு. கொடு = கொண்டு.

9. வேந்தன் பால் = அரசனிடம். கண், பால் = ஏழாம் வேற்றுமை உருபுகள்.

10. எய்தும் = கிடைக்கும். எய்தி = அடைந்து. புக்க = தன்னிடம் வந்த. புகு = பகுதி.

11. கா = சோலை. நாகம் = குரங்கு.

12. ஆக = ஆகட்டும். குப்புறுக = குதித்து மூழ்குக. துப்பு உறு = வலிமையுள்ள. தப்புறு = தப்பித்துள்ள. தடத்திடை = சுனையிடத்தில்.

13. சார்ந்திலது = (மீண்டும் நம்மை) அடையவில்லை. கொம்பில் + நாகம் = கொம்பினுகம்.

14. கொழி புகழ் = மிகுதியாகச் சொல்லப்படும் புகழ். பண்டு = பழைய காலத்தில். அழி = வருத்தும். மொழி = பதில். இரங்கி = வருந்தி.

# V. பலசுவைப் பாக்கள்

## 1. நூல் நூற்றல்

(கைத்தொழில் பாட்டு)



**பல்லவி**

ஆடு ராட்டே சுழன் ருடு ராட்டே

**அனுபல்லவி**

சுழன் றுசு ழன் றுசுழன் ருடு ராட்டே—இனிச்
சுயராஜ்யம் வந்ததென் று ஆடுராட்டே. (1)

**சரணங்கள்**

ஏழைகள்கண் ணீர்சொரிய மிகவருந்திப்—பல
எத்துகள்செய் தேபிழைக்கும் மனித ரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினுல்—அவர்
வாழ்க்கை திருந்து மென்று (ஆடு)

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து—மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து—நூல்
இழைத்துப் பிழைப்ப ரென்று (ஆடு)

உழுது நெய்துபல தொழில்செய்து—பொருள்
உதவும் வாணிகமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்கள் எல்லாம்
தோல்வி அடையு மென்று (ஆடு)

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார் ;—பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார் ;
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார்—குடி
சுத்தப்படும் என்று சொல்லி (ஆடு)

அந்நியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து—நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும் ;
கன்னியர்கள் நூற்கப்பல காளைகள் நெய்ய—நாம்
காத்துக்கொள்வோம் மான மென்று (ஆடு)

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

1. எத்துகள் = தந்திரங்கள்.
2. சுற்றி அலைந்து = கூலி வேலைக்காகச் சுற்றி அலைந்து.
3. தொழுது = முதலாளிகளைப் பணிந்து. பணி = வேலை.
4. வம்பு = வீண்பேச்சு. அளந்து = பேசி.
5. அந்நியர் = வெளிநாட்டார். பங்கம் = இழிவு. காளைகள் = காளை போன்ற வலிமையுள்ள வாலிபர் ; உவமை ஆகுபெயர்.

## 2. பெண்கள் விடுதலைக் கும்மி

கும்மி யடிதமிழ் நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோம்என்று கும்மியடி (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமைஎன்(று)
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார் ;
வீட்டுக்குள் ளேபெண்ணைப் பூட்டிவைப் போம்என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம் ;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்கள்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி. (கும்மி)


வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டிவந் தோமென்று கும்மியடி ;
சாதம் படைக்கவும் செய்திடு வோம்தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம். (கும்மி)

காதல் ஒருவனைக் கைப்பிடித் தேஅவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி. (கும்மி)

—சுப்பிரமணிய பாரதியார்

1. பிசாசுகள் = கல்வியின்மை, அறியாமை, மூடநம்பிக்கை முதலியன.

2. ஏடு = நூல், கல்வி. விந்தை = ஆச்சரியமான (கீழான). தலைகவிழ்ந்தார் = தோற்றுவிட்டார்.




3. பட்டங்கள் ஆள்வது = உயர்தரப் பட்டங்களைப் பெறுவதும் நாட்டையாள்வதும். சட்டங்கள் செய்வது = சட்ட சபைகளில் உறுப்பினராக இருந்து நாட்டுக்குரிய சட்டங்களைச் செய்தல். இளைப்பில்லை = தாழ்ந்தவள் இல்லை.

4. வேதம் = அறிவு நூல். நீதிகள் = நீதிநூல்கள். வேண்டி = விரும்பி. தெய்வச்சாதி = அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த பிள்ளைகள்.

5. காதல் ஒருவன் = எங்கள் அன்பைப் பெறும் ஒருவனை. கைப்பிடித்தே = மணந்துகொண்டு. மாதர் அறங்கள் = பெண்களுக்கு உரிய அறச்செயல்கள். மாட்சி = பெருமை. வாழ்வம் = வாழ்வோம் : தன்மைப் பன்மை வினைமுற்று.

## 3. எங்கள் தமிழ்




இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்
கின்பம் தரும்படி வாய்த்தநல் அமுது ;
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு ;
தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம்கண்ட தில்லை ;
நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில். (இனிமை)

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச் சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும் ;
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும் ;
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்,
அழகியவாம் உரை நடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

—பாரதிதாசன்

TB
031(2)
N57
88582

RTR 289
IC
V/N
1

# THAMARAI VACHAKAM

**BOOK VII for STANDARD VII**

BY

Dr. M. RAJAMANIKKAM, M.A., L.T., M.O.L., PH.D.

THE NATIONAL PUBLISHING CO.,
6, KONDI CHETTY STREET, MADRAS-1

*Copyright*]

[*Re.* 1